
# கிழக்கிலங்கை பூர்வீக வரலாறு

க. தங்கேஸ்வரி



Batticaloa Public Library
☎ 065-2222484
RT002337

Class No. 954.93 THA
Acc No; 4077
Ref

# கிழக்கிலங்கைப் பூர்வீக வரலாறு

க. தங்கேஸ்வரி, பி.ஏ.(தொல்.) சிறப்பு

மணிமேகலைப் பிரசுரம்
தபால் பெட்டி எண் : 1447
7 (ப.எண்4), தணிகாசலம் சாலை,
தியாகராய நகர், சென்னை - 600 017.
தொலைபேசி : 24342926, 24346082
மின் அஞ்சல் : manimekalai1@dataone.in
Website : www.tamilvanan.com

Class No. 954.93 THA
Acc No; 4077
Ref

## நூல் விவரம்


| | |
|---|---|
| நூல் தலைப்பு | கிழக்கிலங்கைப் பூர்வீக வரலாறு |
| ஆசிரியர் | **க. தங்கேஸ்வரி,** பி.ஏ.(தொல்) சிறப்பு |
| மொழி | தமிழ் |
| முதற் பதிப்பு | 2007 |
| உரிமை | ஆசிரியருக்கு |
| தாளின் தன்மை | 11.6 கி.கி. |
| நூலின் அளவு | கிரௌன் சைஸ் (12½ x 18½ செ.மீ.) |
| அச்சு எழுத்து அளவு | 11 புள்ளி |
| மொத்த பக்கங்கள் | 192 |
| அட்டைப்பட ஓவியம் | ஏ.எச். கிராஃபிக்ஸ் |
| லேசர் வடிவமைப்பு | கிறிஸ்ட் கம்ப்யூட்டர்ஸ் ✆ 23725639 |
| அச்சிட்டோர் | ஸ்கிரிப்ட் ஆஃப்செட் சென்னை - 94. |
| நூல் கட்டுமானம் | தையல் |
| வெளியிட்டோர் | **மணிமேகலைப் பிரசுரம்** சென்னை - 17. |

நூலின் விலை : **ரூ. 75.00**

# பொருளடக்கம்


1. குமரிக் கண்டத்தின் ஒரு பகுதியே இலங்கைத் தீவு ..... 11
2. குமரிக் கண்டத் தொன்மைவாய்ந்த கோணேசர் ஆலயம் ..... 28
3. மட்டக்களப்பு பிரதேசத்தின் வரலாற்றுக்கு முற்பட்ட காலத் தடயங்கள் ..... 37
4. மட்டக்களப்பின் பூர்வீக வரலாற்றுச் சான்றுகள் . 50
5. பூர்வீக மட்டக்களப்பு பிரதேசம் ..... 72
6. பண்டைய மட்டக்களப்பு பிரதேசத்தில் பெருங்கற்கால கலாச்சாரம் ..... 88
7. மண்முனை இராச்சியமும் கோயில்குளம் வரலாறும் ..... 109
8. மண்முனை மேற்குப் பிரதேசம் ..... 119
9. கொக்கட்டிச்சோலைப் பதியின் தொன்மை வரலாறு ..... 140
10. திருக்கோயில் பிரதேசம் ..... 161
11. ஈழத்தில் நாற்பது ஆண்டுகள் ஆட்சிசெய்த தமிழரசன் மாகோன் ..... 172

**அனுபந்தம்**

Batticaloa's Enduring Legacy of the Past ............ 183

# பதிப்புரை

சமயக்கட்டுரைகள், வரலாற்றுக் கட்டுரைகள் மற்றும் கலை, கலாச்சாரத் தொடர்புடைய கட்டுரைகள் என மூன்று பிரிவுகளாக செல்வி க. தங்கேஸ்வரி அவர்களின் படைப்புகளை வெளியிடுவதில் நாங்கள் மட்டற்ற மகிழ்ச்சியும் பெருமிதமும் அடைகிறோம்.

இக்கட்டுரைகளை கருத்தூன்றிப் படிப்பவர்க்கு ஆசிரியரின் அரும்பெரும் ஆராய்ச்சிகளின் ஆழமும் ஸ்ரீலங்காவின் பழமைமிகு சிற்ப பாரம்பரியம் மற்றும் பல்வேறு கலைகளின் மீதான ஆழ்ந்த பற்றும் ஈடுபாடும் தெளிவாகப் புலப்படும் - தெற்றென விளங்கும். அவரது தமிழ்ச் சொல்லாட்சியின் மாட்சி பிரமிக்க வைப்பதோடு மேலும் மேலும் இதுபோன்ற அவரது படைப்புகளை வருங்காலத்தில் எதிர்பார்க்கும் பேராவலையும் நிச்சயம் தூண்டும்.

வீரத்துறவி விவேகானந்தர் கண்ட 'உலகப் பொதுமறை', ஆதிசங்கரரின் சன்மதங்கள் பற்றிய அவரது விளக்கமும் கடல் கொண்ட குமரிக் கண்டத்தின் ஒரு துணிக்கையே இலங்கைத் தீவு. மட்டக்களப்பு பற்றிய வரலாற்றுக் கண்ணோட்டம், தமிழக மூவேந்தர்கள் ஈழத்தின் பகுதிகளை ஆண்டதற்கான வரலாற்றுச் சான்றுகளை அவர்

வழங்கியிருக்கும் விதமும், கூத்துக்கலை, பறைமேளக் கலை பற்றிய ஆய்வுக்கட்டுரைகளும் பல்வேறு துறைகளில் ஆசிரியருக்கு இருக்கும் ஆளுமையை வாசகர்களுக்கு புரிய வைத்து அவர்களின் கலையார்வத்தையும் வளர்க்கும்.

நாடகக் கலையில் விபுலானந்தரின் சீரிய முயற்சியான 'மதங்க சூளாமணி' - உலகு புகழ் ஷேக்ஸ்பியரின் ஆங்கில நாடகங்களின் தமிழாக்கம் என ஆசிரியர் சுட்டிக்காட்டியிருப்பதுடன் இயல், இசை கலைகளில் மட்டுமின்றி நாடகக்கலையிலும் அவர் புலமை மிக்கவரே என்று கூற வைக்கிறது.

இவ்வாறாக பல்வேறு பரிமாணங்களைக் கொண்ட தங்கேஸ்வரியின் இக்கட்டுரைகளுக்கு பெரும் வரவேற்பும் ஆதரவும் கிடைக்கும் என்பதில் ஐயமில்லை.

**- பதிப்பகத்தார்**

# என்னுரை

வரலாற்று ஆய்வு என்பது தகுந்த ஆதாரங்களுடன் மேற்கொள்ளப்பட வேண்டிய ஒரு விடயம் ஆகும்.

பல ஆய்வாளர்கள், பூமியின் ஆரம்பகாலக் கண்டங்கள் பற்றியும், கடற்கோள்கள் பற்றியும் திட்டவட்டமான ஆதாரங்களுடன் எழுதியுள்ளனர்.

இதன் அடிப்படையில் இலங்கைத் தீவு என்பது வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் கடற்கோளினால் சிதறுண்ட லெமூரியாக் கண்டத்தின் (குமரிக் கண்டத்தின்) ஒரு நிலப்பகுதி என்றும் அவ்வாறே தென்கிழக்கு ஆசியாவில் உள்ள பல தீவுகள் தோன்றின என்றும் அறியமுடிகிறது.

இதன் அடிப்படையில் -

(அ) இலங்கைத் தீவு குமரிக் கண்டத்தின் ஒரு பகுதி என்பதும்

(ஆ) இங்கு வாழ்ந்த மக்கள் ஆதித்திராவிடர்கள் என்பதும்

(இ) விஜயன் இலங்கைக்கு வருமுன்பே (கி.மு. 543) திராவிட மக்கள் இங்கு வாழ்ந்திருந்தனர் என்பதும்

(ஈ) இந்நிகழ்வுக்குப் பல வருடங்களுக்குப் பின்னரே (கி.மு. 3-ம் நூற்றாண்டு) பௌத்த மதம் இலங்கைக்கு வந்ததென்பதும் புலனாகும்.

இதன் அடிப்படையில் திராவிடர்களான தமிழர்களே இலங்கையின் ஆதிக்குடிகள் என்பதும் தெளிவாகும். இந்த வரலாறுகளை அறியாத சில அரசியல்வாதிகள், இலங்கை சிங்களவர்களின் நாடு என அவ்வப்போது வாய்ச்சவுடால் வீசுவது மிகவும் சிறுபிள்ளைத்தனமானது என்பதை இந்நூலின் வாசகர்கள் இலகுவாகப் புரிந்து கொள்ளலாம்.

கிழக்கிலங்கை முழுவதும் தமிழர்களின் பூர்வீக பிரதேசம் ஆகும். இப்பிரதேசத்தில், திருகோணமலை மாவட்டம், மட்டக்களப்பு மாவட்டம் ஆகிய இரண்டு மாவட்டங்களிலும், மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து பிரிக்கப்பட்ட அம்பாறை மாவட்டத்திலும், கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே தமிழர்கள் வாழ்ந்தனர் என்பதற்கும், ஆட்சி செய்தனர் என்பதற்கும் ஏராளமான சான்றுகள் உள்ளன.

தென்னிலங்கையில், கதிர்காமப் பிரதேசத்தை, கதிர்காமச் சத்திரியர்கள் நான்கு தலைமுறையாக ஆட்சி செய்தனர் என்பதற்கு வலுவான சான்றாதாரங்கள் உள்ளன. துட்டகைமுனுவின் காலத்தில் இவர்கள் ஆட்சி செய்தார்கள்.

அவ்வாறே மட்டக்களப்பில், வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்து தமிழர்கள் வாழ்ந்தார்கள் என்பதற்கான சான்றுகள் கிடைத்துள்ளன. அவை எல்லாம் விரிவாக இந்நூலில் எடுத்துக் கூறப்பட்டுள்ளன.

மண்முனை மேற்குப் பிரதேசம், மண்முனைப் பிரதேசம், திருக்கோயில் பிரதேசம் முதலிய இடங்களில் தமிழர் ஆட்சி நிலவியது. அவற்றிற்கான சான்றாதாரங்களும் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.

கிறிஸ்துவுக்குப் பிற்பட்ட காலத்தில், சோழர் ஆட்சியும், பாண்டியர் ஆட்சியும் ஏற்பட்டுள்ளன. இதற்கான பின்னணி தெளிவாக்கப்பட்டுள்ளது. எல்லாவற்றுக்கும் மேலாக, கலிங்க மாகோன் (கி.பி. 1215 - 1255) 40 வருடங்கள் கிழக்கிலங்கையில் ஆட்சி செய்த விபரமும் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

கலிங்க மாகோனும், அவனது உதவியாளனான குளக்கோட்டனும், முறையே விஜயபாகு, ஜயபாகு என்ற பெயர்களுடன் கிழக்கிலங்கையில் நல்லாட்சி செய்துள்ளனர். தமிழ் மக்கள் இவ்விபரங்களை மனப்பாடமாக அறிந்திருக்க வேண்டும்.

இக்கட்டுரைகள் வெவ்வேறு காலகட்டங்களில் எழுதப்பட்டதால், சில விடயங்கள் திரும்பத் திரும்பச் சொல்லப்டுகின்றன. (உ.-ம்.) பின்வரும் கட்டுரைகளில் இடம்பெறும் சில விடயங்கள்:

(அ) மட்டக்களப்பின் பூர்வீக வரலாற்றுச் சான்றுகள்

(ஆ) பூர்வீக மட்டக்களப்பு பிரதேசம்

(இ) மட்டக்களப்பு பிரதேசத்தின் வரலாற்றுக்கு முற்பட்ட காலத் தடயங்கள்

(ஈ) பண்டைய மட்டக்களப்பு பிரதேசத்தில் பெருங்கற்கால கலாச்சாரம்.


ஆனால், இக்கட்டுரை ஒவ்வொன்றிலும் பல புதிய விடயங்கள் சொல்லப்படுகின்றன என்பது கவனத்திற்கொள்ளத் தக்கது.

பல வருடங்களாக, எனது கோவைகளில் தேங்கிக் கிடந்த இக்கட்டுரைகளை நூலாக்க வேண்டும் என இடைவிடாது அழுத்தம் கொடுத்த ‘அன்புமணி’ ஐயா அவர்கட்கும், உடனடியாக நூலாக்கித் தந்த சென்னை மணிமேகலைப் பிரசுர நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் ரவி தமிழ்வாணன் அவர்கட்கும் எனது இதயபூர்வமான நன்றிகள்.

இன்னும் பல ஆய்வுக் கட்டுரைகள் நூலாக்க வேண்டிய நிலையில் உள்ளன. காலக்கிரமத்தில் அவையும் நூலாக வெளிவரும் என்பதை இங்கு சொல்லி வைக்க விரும்புகிறேன்.

இக்கட்டுரைகளுக்கு ஆதாரமான சான்றுகளைப் பெறுவதற்காக, தீகவாபி, மொட்டையாகல, திருக்கோணேஸ்வரம் திருக்கோயில், புத்தங்கல, சங்கமன்கண்டி, குசலன்களத், கொக்கொட்டிச்சோலை போன்ற இடங்களுக்கு நேரில் சென்றபோது உதவிய அன்பர்களையும், டாக்டர் பரணவிதானாவின் கல்வெட்டு விளக்கங்களைக் கொண்ட பாரிய நூல்களைக் கொடுத்து உதவிய கொழும்பு ‘தொல்பொருள் காப்பகத்தின்’ ஊழியர்களையும் நன்றியோடு நினைவு கூறுகிறேன்.

**க. தங்கேஸ்வரி**
(நூலாசிரியை)



W
E
S
C H I N A
Karakoram Range
Indus
G R E A T
H I M A L A Y A
T I B E T
Mansarover Lake
Tsangpo
Jhelum
Chenab
Ravi
Beas
Sutlej
Govind Sagar
PAKISTAN
Indus
THE GREAT INDIAN DESERT
Luni
THE GREAT NORTHERN PLAINS
Ganga
Yamuna
NEPAL
BHUTAN
Brahmaputra
Naga Hills
Khasi Jaintia
Ghaghara
Gandak
Kosi
Chambal
Betwa
Ganga
Son
BANGLADESH
Padma
Ranapratap Sagar
Gandhi Sagar
Sabarmati
Chota Nagpur Plateau
Hugli
I N D I A
MYANMAR
Narmada
Hirakund
Tapti
SOUTHERN PLATEAU
Mahanadi
Penganga
Godavari
ARABIAN SEA
WESTERN COASTAL PLAIN
Nizam Sagar
Godavari
Manjra
Bhima
Krishna
Krishna
EASTERN COASTAL PLAIN
Tungabhadra
Tungabhadra
Penneru
Bhadra
Stanley
Kaveri
LAKSHADWEEP (INDIA)
ANDAMAN & NICOBAR ISLANDS (INDIA)
SRI LANKA
I N D I A N
O C E A N

# கிழக்கிலங்கைப் பூர்வீக வரலாறு

## குமரிக் கண்டத்தின் ஒரு பகுதியே இலங்கைத் தீவு

**1. முன்னுரை**

உலக வரலாற்றில் மிகத் தொன்மையானதும், திராவிடரின் தாயகம் எனக் கருதப்படுவதுமான குமரிக் கண்டத்தைப் பற்றி ஆய்வாளர்கள் பல ஆதாரபூர்வமான தகவல்களைத் தந்துள்ளனர்.[1] அவை, கடல் கொண்ட குமரிக்கண்டத்து மக்களின் வாழ்க்கை முறைகளை ஓரளவு தெளிவுபடுத்துவதோடு, அக்காலத்து மக்கள், தாவரங்கள், விலங்கினங்கள் பற்றிய பல்வேறு தகவல்களையும் அறிய உதவுகின்றன. இக்குமரிக் கண்டமே லெமூரியாக் கண்டம் என அழைக்கப்படுகிறது.

இந்துமகா சமுத்திரத்தை ஆய்வு செய்த 70 பேர் கொண்ட ரஷ்ய விஞ்ஞானிகளின் ஆய்வுக்குழு ஒன்று பின்வரும் தகவலை வெளியிட்டுள்ளது. அதாவது 1000 லட்சம் (100 மில்லியன்) ஆண்டுகளுக்கு முன் தற்போது இந்துமகா

சமுத்திரம் இருக்கும் பரந்த கடற்பரப்பில் பெரும் நிலப்பரப்பு இருந்தது. தற்போதைய இலங்கைக்கு தென்கிழக்கே 550 கல் தொலைவில் ஆழ்கடலில் 10,000 அடி உயர மலை இருந்தது. இவ்விபரங்களை இக்குழுவின் தலைவரான பேராசிரியர் பி. பெஸ்ருகோவ் (P. Bezrukov) என்பவர் வெளியிட்டுள்ளார்.[2]

இவ்விபரங்கள் நம்பமுடியாதவைபோல் தோற்றலாம். ஆனால் புவியின் தோற்றம், கல்பகோடி காலம் அதில் ஏற்பட்ட மாற்றங்கள் பற்றி அறிந்தவர்களுக்கு இவை வினோதமானவை அல்ல.

கொண்டுவானாலாந்து என மண்ணியலாளர்களாலும், லெமூரியா என உயிரியலாளர்களாலும் குமரிக்கண்டம் என தமிழ் இலக்கியங்களிலும் குறிப்பிடப்படும் நிலப்பரப்பு சிதைவுற்றபோது, அக்கண்டம் முழுவதும் கடலில் அமிழ்ந்துபோக, வடக்கே இமயமலை தோன்றியது. இச்சிதைவின்போது பல பூமித் துணிக்கைகள் எஞ்சி நின்றன. அவற்றுள் ஒன்றே நமது இலங்கை தீவாகும்.

## 2. புவியின் தோற்றம்

சுமார் 500 கோடி ஆண்டுகளுக்கு முன்பு சூரியனில் இருந்து வெடித்துச் சிதறிய ஒரு துண்டம், நெருப்புக் கோளமாகச் சுழன்று, பல கோடி ஆண்டுகளாகப் பல மாறுதல்களை அடைந்து, இன்றுள்ள புவியாகியது என்பது ஆய்வாளர்களின் கூற்று.[3] ஆரம்ப காலத்தில் பூமியில், தற்போதுள்ள கண்டங்கள் யாவும் இணைந்து ஒரே கண்டமாகவே இருந்தது. இக்கண்டம் "பாங்கியா" எனக் குறிப்பிடப்படுகிறது. "முதலாம் யுகம்" (Palaeozic Era) எனப்படும்

954.93 / 4077



காலப் பகுதியில் இரண்டாகப் பிளவுற்று இரண்டு கண்டங்களாகின. அவை (அ) கொண்டுவானாலாந்து (ஆ) அங்காரலாந்து என அழைக்கப்பட்டன.[4]

### 3. குமரிக்கண்டம் அல்லது லெமூரியாக் கண்டம்

தெற்கே தென் துருவம் வரையும், தென்கிழக்கே அவுஸ்திரேலியா வரையும், கிழக்கே கிழக்கிந்தியத் தீவுகள் வரையும், மேற்கே ஆப்பிரிக்கா வரையும் இக்கண்டம் பரந்து காணப்பட்டது.[5] ஆரம்பத்தில் இது ''கொண்டுவானாலாந்து'' என்னும் கண்டமாக அமைந்திருந்தது.

பல கோடி வருடங்களாக பயங்கர விலங்குகளாலும் (Reptiles) தாவரங்களாலும் நிறைந்திருந்த இக்கண்டம் காலக்கிரமத்தில் மனிதன் தோன்றி வசிக்கும் கண்டமாகியது.

ஆதியில் மனிதன் தோன்றி வளர்ந்த இடங்கள் இரண்டு என ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.[6] அவை (அ) குமரிக்கண்டம் (ஆ) மத்தியதரைக் கடற்பிரதேசம். ஆனால் பூமி நெருப்புக் கோளமாகச் சுழன்று இறுகியபோது முதலில் ஆறிக்குளிர்ந்து, உயிரினம் வாழ்வதற்கான சூழ்நிலை ஏற்பட்டது பூமத்திய ரேகைப் பகுதி ஆகும்.

எனவே மேற்குறிப்பிட்ட இரண்டு இடங்களில் ஒன்றிலேதான் மனித இனம் தோன்றி உலகெங்கும் பரவி இருக்க வேண்டும். பின்னர் ஏற்பட்ட ஆய்வுகளின்படி குமரிக்கண்டத்தில் தோன்றிய மக்களே, கடல்கோளினால் அக்கண்டம் சிதைவுற்றபோது, அங்கிருந்து இடம் பெயர்ந்து உலகின் ஏனைய பிரதேசங்களுக்குச் சென்றனர் என்பது

நிறுவப்பட்டுள்ளது. இங்கு வாழ்ந்த மக்கள் இறை நம்பிக்கை கொண்டவர்களாகவும், ஆத்மீக பலம் உள்ளவர்களாகவும் அமானுஷ்ய சக்தி படைத்தவர்களாகவும் இருந்தனர். இவர்களே பின்னர் திராவிடர் என அழைக்கப்பட்டனர். அது பற்றிய விபரம் பல்வேறு ஆய்வாளர்களால் வெளியிடப்பட்டுள்ளது. அதை சுருக்கமாகப் பார்ப்போம்.

லெமூரியாக் கண்டம் (குமரிக் கண்டம்) கடலில் மூழ்க ஆரம்பித்தபோது, அங்கு வாழ்ந்த மக்கள் மேற்குப் பகுதியான ஆப்பிரிக்காவிலும் (இன்றைய செனகல்) கிழக்குப் பகுதியில், யாவா, சுமத்ரா, போர்னியோ, நியூகினி, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து போன்ற இடங்களிலும் குடியேறினர். பின்பு அமெரிக்காவில் குடியேறி மாயா நாகரிகத்தைத் தோற்றுவித்தனர். குமரிக்கண்டத்து மக்களே, எகிப்து, சுமேரியா, பாபிலோனியா முதலிய இடங்களிலும் குடியேறி, புதிய நாகரிகங்களைத் தோற்றுவித்தனர். இதுபற்றி சுவாமி விபுலாநந்தரும் தனது ஆய்வுக் கட்டுரைகளில் குறிப்பிட்டுள்ளார்.

இவர்களின் வழித் தோன்றல்களே சிந்துவெளி நாகரிகத்தையும் உருவாக்கினர். மெசப்பொடேமியா என அழைக்கப்படும் மத்திய தரைக்கடல் பிரதேசத்திலும் இம்மக்கள் இடம் பெயர்ந்து சென்று வாழ்ந்துள்ளனர். அவர்கள் அங்கும் ஒரு நாகரிகத்தை உருவாக்கினர்.[7]

## 4. உலகில் மனிதரின் தோற்றம்

உலகில் ஆதிமனிதன் தோன்றிய இடம், பூமத்திய ரேகைக்கு அண்மையில் உள்ள பிரதேசமான குமரிக்கண்டம் என்று முன்னர் குறிப்பிட்டோம். ஆதியில் தோன்றிய மனித

இனம் ஆஸ்ரலோ பிந்திகஸ் (Australo Pinthicus) என ஆய்வாளர் குறிப்பிடுவர். இவ்வினம் ராமபிந்திகஸின் ஒரு "ஹோமினிட்" ஆகும். ஆஸ்ரலோ பிந்திகஸ் இனம் 40 லட்சம் வருடங்களுக்கு முன் (40,00,000) தோன்றியது என்பர் முக்கிய வரலாற்றாசிரியர்கள். ஆனால் அண்மைக்கால ஆய்வுகள் இவ்வினம் 6,25,000 ஆண்டுகளுக்கு முற்பட்டது எனக் காட்டுகின்றன. மிகத் தொன்மையான இவ்வினம் (அ) ஸின்ஜந்த்றோபஸ் - Zinjanthropus (ஆ) பெசியன்த்றோபஸ் Pesianthropus (இ) பரந்த்றோபஸ் - Paranthropus என மூன்று பிரிவுகளை உடையது. இவ்வினம் முதலாவது பனிப்பெயர்வு காலப்பகுதியில் தோன்றியது.

உலகில் இம்முதல் மனித இனம் தோன்றிய இடம் தென்னாட்டு உயர்நிலமான குமரிக்கண்டம் மற்றும் ஆப்பிரிக்கா, யாவா, மலேசியா போன்ற இடங்கள். இவ்விடங்களில் இம்மனித எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவை, கி.மு. 6,50,000 - 3,50,000 ஆண்டுகாலப் பகுதியைச் சேர்ந்தவை.[8] லெமூரியாக் கண்டத்திலிருந்து இடம் பெயர்ந்த மக்களே இவர்கள் என்பது பிற்கால ஆய்வுகள் மூலம் தெரியவருகிறது.

குமரிக்கண்டம் சிதைவுறுமுன், அங்கு பெரிய நகரங்கள் உருவாகியிருந்தன. திராவிட நாகரிகம் செழித்தோங்கியிருந்தது. தமிழ் மன்னர்கள் ஆட்சி செலுத்தியிருந்தனர். தமிழ்ச்சங்கம் உருவாகி இருந்தது. பஃறுளியாற்றுடன் பன்மலையடுக்கத்துக் குமரிக்கோடும் இருந்தது. கடற்கோளினால் இவையெல்லாம் அழிந்தன. தொல்காப்பியக் குறிப்புகள், சிலப்பதிகார உரைகள் முதலிய பல தமிழ் இலக்கியங்கள் மூலம் இவற்றை அறிய முடிகிறது.[9]

## 5. ஏழ்நாட்டின் அழிவும் ஈழநாட்டின் தோற்றமும்

லெமூரியாக் கண்டம் கடலில் மூழ்க ஆரம்பித்தபோது அங்கிருந்த மக்கள் இடம்பெயரத் தொடங்கினர். தென்பகுதி முழுவதும் பரந்து கிடந்த இப்பாரிய கண்டம் சிதறுண்டபின் எஞ்சி நின்ற நீண்ட நிலத்திணிவு, குமரிநாடு எனப்பட்டது. இது இமயம் தொடங்கி தென்துருவம் வரையும் நீண்டிருந்தது.

இதுவே எமது பழந்தமிழ் இலக்கியங்களில் குறிப்பிடப்படும் குமரிநாடு. அக்காலத்தில் குமரிக் கண்டத்தில் இருந்த ஏனைய நாடுகள் வருமாறு:[10]

(i) **வட இந்தியா :** இமயம் முதல் விந்தியம் வரை உள்ள பகுதி.

(ii) **தென்னிந்தியா :** விந்தியம் முதல் குமரி மலை வரையுள்ள பகுதி. இலங்கை இந்நிலப்பரப்பினுள் சேர்ந்திருந்தது.

(iii) **குமரிநாடு :** 700 காவதம் (காதம்) தெற்கே இருந்த பஃறுளியாற்றுக்கு இடைப்பட்ட நிலப்பரப்பு.

இதுவே பண்டைய தமிழ்நாடு. தலைச்சங்கம் இருந்த தமிழ்நாடு இதுவே. இப்பிரதேசமே ''எல்லம்'' என அழைக்கப்பட்டது. ''எல்லம்'' என்பதிலிருந்து, எலு ஏழ் ஈழம் என்பன பிறந்தன. மேருமலை குமரியாற்றுக்குத் தெற்கே, பூமத்திய ரேகைக்கு அண்மையில் இருந்தது. (பாஸ்கராச்சாரியார் எழுதிய வான சாஸ்திர நூலில் பூமத்திய ரேகை, பழைய இலங்கைக் கூடாகச் சென்றது எனக் கூறுகிறார். எனவே 'ஈழம்' (எல்லம்) அப்போது மிகப்பெரிய நிலப்பரப்பாக இருந்திருக்க வேண்டும்.

குமரிநாடு பற்றிப் பல பண்டைய தமிழ் இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. அவற்றுட் சில வருமாறு:

(அ) மிருகேந்திர ஆகமம் கூறுவது[11] :

''எழு பெருந்தீவுகளின் நடுவானது. இது நூறாயிரம் யோசனை பரப்புடையது. வட்டமானதாய் நிலமகட்கு உந்தித் தானமாக உள்ளது நாவலந்தீவு. இந்நாவலந்தீவின் நடுவே மேருமலை. மேருமலையைச் சூழ்ந்த நிலம் இளாவிருதம், பரதகண்டம் – இது ஒன்பது கண்டங்கள் அல்லது ஒன்பது தீவுகள் அடங்கியது. அவை, இந்திர தீவு, கசேருத் தீவு, காந்தருவத் தீவு, தாமிரபரணித் தீவு, கமந்திரத் தீவு, மாகதீவு, சாத்திரமதித் தீவு, வாழுமுணர்தீவு, குமரித்தீவு. இவற்றுள் குமரித்தீவு ஒன்றே சிறியது. ஏனைய எட்டுத் தீவுகளும் மிலேச்சர் வாழும் இடங்களாகும்.

(ஆ) சிலப்பதிகார உரை எழுதிய அடியார்க்கு நல்லார் கூறுகிறார்: ''அக்காலத்து, அவர்நாட்டுத் தென்பாலி முகத்திற்கு, வட எல்லையாகிய பஃறுளி ஆற்றுக்கும், குமரியாற்றுக்கும் இடையே, எழுநூறு காதமாகும், இது ஏழ்தெங்கு நாடு, ஏழ்பனை நாடு, ஏழ்முன் பாலை, ஏழ்பின் பாலை, ஏழ் குன்ற நாடு, ஏழ்குண காரை நாடு, ஏழ் குறும்பனை நாடு... எனும் இந்த நாற்பத்தொன்பது நாடும் குமரி, கொல்லம் முதலிய பனிமலை நாடு. காடும், நதியும், பதியும், தடநீர்குமரி, வடபெரும் கோட்டின் காணும் கடல் கொண்டொழிதலால்...''

இக்குமரி நாடு, நாவலந்தீவு எனவும் அன்று வழங்கப்பட்டது. மேரு, மகேந்திரம் ஆகிய மலைகள் இங்கிருந்தன. அவ்வாறே குமரி ஆறு, பஃறுளி ஆறு ஆகியனவும் இருந்தன என அறிய முடிகிறது.

(iv) **பெருவளநாடு** : பஃறுளி தொடக்கம் தென் அயன கோடுவரை (Tropic of Capricorn) காணப்பட்ட மலை இந்நாட்டு மணிமலை ஆகும்.

(v) **ஒளிநாடு** : தென் அயனவரை தொடக்கம் தென்துருவம் வரையுள்ள நிலப்பரப்பு.

இக்குமரிக் கண்டமானது சிதைவுறுமுன் நிலந்தரு திருவிற் பாண்டியனும், அவன் பரம்பரையினரும் கி.மு. 30,000 தொடக்கம் கி.மு. 16,500 ஆண்டு வரை ஆட்சியிலிருந்ததாக ஒரு குறிப்பு கூறுகிறது. இது இடைக்கற்காலமாகும். கி.மு. 14,000 ஆண்டளவில் பெருவள நாடும் ஒளிநாடும் கடற்கோள்களால் அழிந்தன என்பர். பிற்காலத்தில் வெளிநாட்டு யாத்திரீகர்களான டொலமி, பிளைனி கூட தமிழகத்தை லெமுரிகே (திமுரிகே) என்று குறிப்பிடுவது கவனிக்கத் தக்கது.[12]

## 6. லெமுரியாவும் இலங்கையும்

150 லட்சம் ஆண்டுகள், இலங்கைத் தீவானது கொண்டுவானாலாந்தின் ஒரு பகுதியாக இருந்தது. லெமுரியாக் கண்டம் (குமரிக்கண்டம்) சிதைந்தபோது பலர் இடம் பெயர்ந்து சென்றனர். ஒரு சிலர் எஞ்சியிருந்த நிலத்துணிக்கைகளில் தங்கிவிட்டனர்.

வடக்கே சென்ற மக்கள், சிந்துவெளி, சுமேரியா போன்ற நாகரிகங்களை உருவாக்கினர். இடம் பெயர முடியாமல் தனித்து விடப்பட்டவர்கள், வெளியுலகத் தொடர்பில்லாமல் வாழ்ந்திருக்க வேண்டும். அவர்கள் காலக்கிரமத்தில் ஒரு தனி இனமாக வளர்ச்சி பெற்றனர் எனலாம்.

குமரிக்கண்டம் கடல்கோளில் சிதறுண்ட காலம் கி.மு. 50,000க்கும் 25,000 ஆண்டுகட்கும் இடைப்பட்ட காலமாகும். வடவேங்கடம் வரை மனிதக் குடியேற்றம் பரவிய காலம் கி.மு. 25,000க்கும் 10,000 ஆண்டுகட்கும் இடைப்பட்ட காலமாகும்,

கி.மு. 25,000க்கும் - 3,000க்கும் இடைப்பட்ட காலத்தில் ஏற்பட்ட ஒரு கடற்கோளில் குமரிக்கண்டம் துண்டாடப்பட்டது. தற்போதைய இந்தியா தோன்றியது. மேலும் ஏற்பட்ட கடற்கோள்களில் தற்போது காணப்படும் பல தீவுகள் தோன்றின. இத்தீவுகளில் இலங்கையும் ஒன்றாகும்.

இத்தகைய தீவுகளில் தனித்து விடப்பட்ட மக்கள் உருவத்திலே பெரியவர்களாக, அமானுஷ்ய சக்தி படைத்தவர்களாக இருந்தனர். இவர்களை, யாத்ரீகர்களும் வந்துபோன கப்பற் பயணிகளும், 'ராட்சதர்கள்' என வர்ணித்தனர். இதே அடிப்படையில் இலங்கைத் தீவில் உள்ளவர்கள் இயக்கர், நாகர் ஆகினர். ஆதிகுடிகளான இவர்களை இங்கு 'வேடர்கள்' என மானுடவியலாளர்கள் குறிப்பிட்டனர். எனவே வேடர்கள் எனப்படுவோர் ஆதிவாசிகளான 'ஒஸ்ரலோ பிந்திகஸ்' இனத்தின் வழித்தோன்றல்கள் என்பது பெறப்படுகிறது. இவ்வேடர் இனத்தின் தொன்மைக்கு ஆதாரமாக இலங்கைத் தீவின் தொன்மையும் உள்ளது.

(i) இலங்கைத்தீவு மிகவும் தொன்மை வாய்ந்ததென்பதற்கு ஏராளமான ஆதாரங்கள் உள்ளன. கல்லியல் (Lithology), மண்ணியல் (Pedology), கனிப்பொருளியல் (Mineralogy), உயிர் சுவட்டியல் (Padaetology) ஆகியவற்றின் அடிப்படையில் தென்னாப்பிரிக்கா, வடஆப்பிரிக்கா, இந்தியா, தென் அமெரிக்கா போன்ற கண்டங்களின் நிலப்பகுதிகளுடன் ஒற்றுமையுடையது இலங்கை.[13]

(ii) இலங்கையின் நிலப்பரப்பில் பத்தில் ஒன்பது பகுதிக்கு மேல் தொல்காலப் பாறைகள் உள்ளன. இத்தொல்காலப் பாறைகள் கேம்பிரியனுக்கு முற்பட்ட (Pre-Cambrian) காலத்தைச் சேர்ந்தவை. தக்கண மேட்டுநிலம், பிறேசிலியன், கயானா, கனடா உயர் நிலங்கள் தொல்காலப் பாறைகளைக் கொண்டவை. இதிலிருந்து இலங்கையின் தொன்மையை உணர்ந்து கொள்ளலாம்.[14]

(iii) யுராசிக் (Jurasic) காலப் பாறைப்படிவுகள் இந்தியாவில் மதுரை, சென்னை, பெஷவாடா போன்ற இடங்களில் காணப்படுகின்றன. இதே பாறைப்படிவுகள் இலங்கையிலும், தப்போவெல, மன்னார், ஆண்டிகம் என்னுமிடங்களில் காணப்படுகின்றன. இப்படிவுகள் 'ரேர்ஷரிக்' (Tertiaric) காலப்பகுதியில் ஏற்பட்ட இமய மடிப்புறல், தக்கண எரிமலைக்குழம்பு, இந்திய மேற்குக் கரைத் தொடர் மேலுந்தப்படல் போன்ற இயற்கை உற்பாதங்கள் இடம் பெற்றபோது, ஏற்பட்டிருத்தல் வேண்டும் என ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.[15]

(iv) மேலும், இலங்கையில் மயோசின் (Miocene) காலத்து சுண்ணக்கற் படிவுகளும் காணப்படுகின்றன.

இவை இந்தியாவில் வாரணாசி, காரைக்கால், சென்னை முதலிய பகுதிகளில் உள்ளவற்றை ஒத்திருக்கின்றன.[16]

(v) இவ்வாறே 'பிளைற்றோசின்' கால வண்டல்களும் குறிப்பிடத்தக்க அளவில் இலங்கையில் காணப்படுகின்றன.[17] பிளைற்றோசின் "Plitrocene" கால வண்டல்கள் காணப்படும் இடங்கள் உலகில் மிகச்சிலவே உள்ளன.

(vi) இந்தியாவும் இலங்கையும் ஒரே கண்ட மேடையில் அமைந்துள்ளன. இலங்கையைச் சுற்றியுள்ள கண்டமேடை வடக்கே அகன்றும், தெற்கே ஒடுங்கியும் காணப்படுகிறது. இக்கண்ட மேடை V வடிவில் அமைந்துள்ளது. இதனைக் கொண்டு விளக்கமளிக்கும் பேராசிரியர் குலரத்தினம் இந்தியாவுக்கு நேர் தெற்கே இலங்கை முன்பு இருந்தது என்றும் பின்னர் கிழக்குப்புறமாக நகர்ந்த காரணத்தால், கண்ட மேடை V வடிவில் அமைந்தது என்பார்.[18] இந்திய புவிச்சரிதவியல் அறிஞர் எம்.எஸ். கிருஷ்ணன் பின்வருமாறு கூறுகிறார் :[19]

(vii) இந்தியாவும் இலங்கையும் ஒரே வகையான தொல்கால அடித்தளப் பாறையிலே அமைந்திருக்கின்றன. இலங்கையின் தென் விளிம்பிலிருந்து விந்தியத்துக்கு வடக்கு வரை இளம் வண்டற் படிவுகளும், இளம் மடிப்பு மலைகளும் உள்ளன.[19]

(viii) இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரே வகையான கல்லியல் தன்மைகளை அவதானிக்க முடிகிறது.

(ix) தக்கணத்தில் இருந்து பிரிவுற்ற ஒரு நிலத்திணிவுதான் இலங்கை என்பதற்கு ஆதாரமாக மண்ணியல் அடிப்படையில் பல ஒற்றுமைகள் காணப்படுகின்றன.

(x) தென் இந்தியாவின் பாறைப் போக்குகள் இலங்கையில் காணப்படும் பாறைப் போக்குகளுடன் ஒத்ததாகக் காணப்படுகின்றன. அவ்வாறே, இந்திய கிழக்குக் கரையோர மலைத் தொடருக்கும் இலங்கையின் வடகீழ் பாறைப் போக்கிற்கும் ஒற்றுமை காணப்படுகின்றது.

(xi) பம்பாய் (மும்பை), ஹைதராபாத், மைசூர் பகுதிப் பாறைபோல் தர்வாரி (Dharwarian Strike) எனப்படும். இதனை இலங்கையில் காலி பகுதியில் காண முடிகிறது.

(xii) மயோசின் (Myocene) காலத்து ஏற்பட்ட கடற்கோளிலே, இலங்கை இந்தியாவினின்றும் பிரிந்தது. மயோசின் கடல் (தெந்திஸ் கடல்) சென்னைக்கும் புத்தளத்திற்கும் இடையில் பாய்ந்ததால், தக்கணத்தின் தென்கீழ் அந்தம் பிளவுற்று இலங்கை பிரிந்தது என வாடியா (Wadia) என்னும் ஆய்வாளர் கூறுகிறார்.

## 7. திருகோணமலை பிரதேச பாறைகளின் அமைப்பும் கடலில் மூழ்கிய பெரிய ஆலயமும்

மூன்றாவது கடற்கோளின்போது, இலங்கையில் இருந்த பெரிய ஆலயம் ஒன்று கடலில் மூழ்கியது என்பதும், அது திருகோணமலையில் இருந்த ஆலயம் என்பதும் நாம் ஏற்கனவே அறிந்த ஒரு செய்தி. இதனை இராஜவலிய என்ற பாலி வரலாற்று நூலும் குறிப்பிடுகிறது.[20] இக் கடற்கோளின்போது இலங்கையின் பெரும்பகுதி அழிவுற்றது.

திருகோணமலைப் பிரதேசம் பாரிய ஒரு மலைப் பிரதேசமாக முன்பு அமைந்திருந்தது. கடற்கோளின்போது அதன் பெரும்பகுதி கடலில் மூழ்கியுள்ளது. இந்தத் தகவலை, திருகோணமலையின் புவியியல் அமைப்பைக் கொண்டும் அறிந்து கொள்ளலாம். கோணேசர் மலைப்பகுதியும், நகரைச் சுற்றியுள்ள கடற்பகுதியும் கடல் உட்பட்ட பகுதி என்பது இலகுவில் அறியக்கூடிய விடயம். இக்கடல் பிரதேசத்தில் காணப்படும் பரவலான பாறைச் சிதறல்களும் இதை எடுத்துக் காட்டுகின்றன.

திருகோணமலைக்கும் மூதூருக்கும் இடைப்பட்ட கடல் பிரதேசத்தில் பாதாளமலை என ஒரு இடம் உண்டு. இது ஒரு மலைப்பாறையை அண்மியதாக உள்ளது. இப்பகுதியில் ஆழ்கடல் நீரோட்டமும் பெரும் நீர்ச்சுழிகளும் உள்ளன. திருமலையிலிருந்து மூதூருக்கு மோட்டார் படகில் பயணம் செய்வோர் இதை நன்கு அவதானிக்க முடியும். இது பாரிய மலைப்பகுதி ஒன்று கடலின் ஆழத்தில் உள்ளது என்பதைக் காட்டுகிறது. கடலின் அடியில் உள்ள மலைப்பிளவுகளில் ஏற்படும் நீரோட்டம் காரணமாகவே இத்தகைய நீர்ச்சுழிகள் ஏற்படுகின்றன. இவை எல்லாம் ஏற்கனவே நாம் தொட்டுக்காட்டிய புவியியல், மண்ணியல் ஆய்வுக் கூற்றுக்களுக்கமைய, இலங்கையானது கடல் கொண்ட தென்னாட்டின் ஒரு துணிக்கை என்பதை மிகத் துலாம்பரமாக எடுத்துக் காட்டுகின்றன.

### 8. இலங்கையின் பழங்குடி மக்கள்

இலங்கையின் பழங்குடி மக்கள் பற்றி, வரலாற்றாசிரியர்கள், யாத்ரீகர்கள், கடற்பயணிகள் முதலியோர்

சில குறிப்புகளைத் தந்துள்ளனர். இவை அம்மக்களை ராட்சதர் எனவும் அமானுஷ்ய சக்தி படைத்தோர் எனவும் காட்டுகின்றன. மகாவம்சம் இவர்களை இயக்கர், நாகர் எனக் குறிப்பிடுகிறது. இவற்றை ஊடுருவி உண்மையை உணர வேண்டும்.[21]

இக்குறிப்புகள் குமரிக்கண்டத்தின் ஆதிகால மனிதர்களின் லட்சணத்தை மறைமுகமாகத் தெரிவிக்கின்றன. அவர்கள் தமது ஆத்மீக சக்தியால் அமானுஷ்ய சக்திபடைத்தவர்களாக இருந்தார்கள். இயற்கை வணக்கத்தைக் கொண்டிருந்தனர். இத்தியாதி காரணங்களால் பின்னால் வரலாறு எழுதியவர்களுக்கு அவர்கள் ராட்சதர்களாகவும், இயக்கர், நாகர்களாகவும் தோற்றியதில் ஆச்சரியமில்லை.

இன்றைய ஆய்வாளர்கள் இலங்கையின் பழங்குடி மக்களை வேடர் எனக் குறிப்பிடுகின்றனர்.[22] இவர்கள் ஒஸ்ரலோயிட் (Ostraloid) இனத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள் பேசிய மொழி ஒஸ்ரிக்ஸ் (Oustrics) மொழி ஆகும். அதாவது குமரிக்கண்டத்தில் தோன்றிய ஆதிமனித இனத்தைச் சேர்ந்தவர்கள். இது பற்றி ஏற்கனவே குறிப்பிட்டுள்ளோம். ஒஸ்ரலோ பிந்திகஸ் இனமே உலகத்தின் முதலாவது மனித இனம் என்பது ஆய்வாளர்களின் திட்டவட்டமான கூற்றாகும்.

பல்வேறு காலகட்டங்களில் ஏற்பட்ட கடற்கோள்களினால் தனித்துவிடப்பட்ட இம்மக்கள் இத்தீவில் தனித்து வாழ்ந்தபோது பெரிய உருவம் கொண்டவர்களாக வாழ்ந்த இவர்கள் ராட்சதர்கள் என அழைக்கப்பட்டனர். ஆனாலும் இவர்களே உலகின் ஆதிமனிதர்களின் வாரிசுகள். ஆதித்திராவிடர்கள் சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த குமரிக்கண்ட மக்களின் பரம்பரையினர். இயற்கையோடு இயைந்த வாழ்க்கையை நடத்தியவர்கள்.

## 9. தொகுப்புரை

இதுவரை கூறிய விடயங்களைப் பின்வருமாறு தொகுத்துக் கூறலாம் :

(i) லெமூரியாக் கண்டம் என்றும் குமரிக்கண்டம் என்றும் அழைக்கப்பட்ட புவியின் தென்பகுதி நிலப்பரப்பு கடற் கோளினால் சிதைவுண்டபோது, எஞ்சிய நிலத்துணிக்கைகளில் ஒன்று இலங்கைத் தீவு.

(ii) இந்தியாவோடு ஆதியில் இணைந்திருந்த இத்தீவு, கடற் கோளினால் இந்தியாவிலிருந்து பிரிந்து தனித் தீவாகியது.

(iii) குமரிக்கண்டத்தின் சிதைவின்போது, பெரும்பாலான மக்கள் இடம் பெயர்ந்துவிட இலங்கைத் தீவில் தனித்துவிடப்பட்ட குமரிக்கண்ட மக்களே இலங்கைத் தீவின் ஆதிவாசிகளாவர். இவர்களே பின்னால் இயக்கர், நாகர் என அழைக்கப்பட்டனர்.

(iv) இவர்களுக்கும், இலங்கையில் உள்ள இன்றைய வேடர்களுக்கும் தொடர்பு இருப்பதாக மானிடவியல் ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

(v) எனவே இலங்கையின் ஆதிவாசிகள், குமரிக்கண்ட மக்களின் பரம்பரையினர். அவர்களுடைய அமானுஷ்ய சக்தியினாலும், பாரிய தோற்றத்தினாலும் இவர்கள், ராட்சதர் எனவும் இயக்கர், நாகர் என்றும் அழைக்கப்பட்டனர்.

## அடிக்குறிப்புகள்

1. (a) Lost Lemuria - By Scott Eliot p.18. (b) Lemuria the lost continent of the Pacific -by NS. Cave p.16. (c) குமரிக்கண்டம் அல்லது கடல் கொண்ட தென்னாடு - அப்பாத்துரை, கா. (d) புறநானூறு - பாடல் 9.
2. "வரலாற்றுக்கு முற்பட்ட வடக்கும் தெற்கும்" - அ.மு. பரமானந்தசிவம் 1970, முன்னுரை
3. "பரிணாமம்" - மங்களா, பொ. வினோபா, பக்.81
4. மேற்படி நூல்
5. The Lost Lemuria By Scott Eliot - p.6.
6. (i) மேற்படி - பக்.8

   (ii) History of India By Sinha & Banerji, pp.26-27.
7. The Lost Lemuria - By Scott Eliot.
8. "பரிணாமம்" - மங்களா, பொ.வினோபா பக்.295
9. (அ) புறநானூறு, பாடல் 1, 6, 9, 21

   (ஆ) சிலப்பதிகாரம், அடியார்க்கு நல்லார் உரை, பாடல் 11, 17, 22

   (இ) கலித்தொகை, தொல்காப்பியம் - பாயிரம் 9, 12
10. Race Movements and Pre-Historic Culture by S.K. Chatterji (Vedic Age), page - 154.
11. நாம் தமிழர் - பொ. சங்கரப்பிள்ளை - பக்.16, 39

12. Race Movements and Pre-Historic Culture, pp.154

13. இலங்கையின் புவிச்சரிதவியல், க. குணராசா, பக்.5

14. மேற்படி நூல் - பக்.16

15. மேற்படி நூல் - பக்.19

16. மேற்படி நூல் - பக்.19

17. மேற்படி நூல் - பக்.20

18. இலங்கை புவிச்சரிதவியல் (புவியியல் சஞ்சிகை) இதழ்: 3 - க. குணராசா வெளியீடு, யாழ்ப்பாணம் - 1965, கட்டுரை எழுதியவர் பேராசிரியர் குலரத்தினம்.

19. இலங்கை புவிச்சரிதவியல், சஞ்சிகை, க. குணராசா வெளியீடு - 1965. கட்டுரை எழுதியவர் எம்.எஸ். கிருஷ்ணன்.

20. கோணேசர் ஆலய வரலாறும் அதன் புராதன நிலையும், இன்றைய நிலையும் - வீரகேசரி கட்டுரை 17.3.63, 24.3.63, 31.3.93.

21. "The Veddah" By S.G. Seligmen, Cambridge, 1911- pp. 419 - 430.

22. "சிந்தனை" ஆடி 1983 - கலாநிதி சி.க. சிற்றம்பலம் கட்டுரை, "ஈழத்து யக்ஷ, நாக வழிபாடுகள்."

"பார்த்தேன்" - தமிழ் மொழித் தின விழா மலர்.
1995 வ.கி. மாகாண கல்வித் திணைக்களம் - திருகோணமலை.

# குமரிக் கண்டத் தொன்மைவாய்ந்த கோணேசர் ஆலயம்

உலக வரலாற்றில் மிகத் தொன்மையானதாகக் கருதப்படும் குமரிக் கண்டம் (லெமூரியாக் கண்டம்) பற்றி மேல்நாட்டு ஆய்வாளர்கள் ஆதாரபூர்வமான பல தகவல்களைத் தந்துள்ளனர். அவற்றை அடியொற்றி பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரை மற்றும் சட்டர்ஜி, சேஷஜயங்கார், பானர்ஜி போன்ற இந்திய ஆய்வாளர்களும் நூல்களை எழுதியுள்ளனர்.

இவை எல்லாம் குமரிக்கண்டக் காலத்து மக்களின் பண்பாடு, நாகரிகம், கலைவளம், கட்டிட அமைப்பு முதலிய சிறப்பம்சங்கள் தோற்றுவித்த உந்துதல்கள் ஆகும்.

இக்குமரிக் கண்டம் உலகில் ஏற்பட்ட மூன்று கடல் கோள்களில் மூன்றாவது கடல்கோளின்போது சிதைந்தது.

1. இச்சிதைவின் போது குமரிக்கண்டம் மறைந்து அவுஸ்திரேலியா, இந்தியா, ஆப்பிரிக்கா போன்ற கண்டங்கள் தோன்றின. இச்சிதைவின்போது மீந்திருந்த நிலத்திணிவுகளில் இலங்கையும் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது.

2. இக்குமரிக்கண்டம் கடற்கோளினால் சின்னாபின்னமாக்கப்பட்டபோது சிதறிய மக்கள் வடக்கே இடம்பெயர்ந்து சென்று சிந்துவெளி, மொகஞ்சதாரோ, சுமேரியா முதலிய நாகரிகங்களைத் தோற்றுவித்தனர்.

3. திருக்கோணமலையும், மொகஞ்சதாரோவும் சமகால நாகரிகம் உடையவை என்ற கருத்து ஆதார பூர்வமாக வெளியிடப்பட்டுள்ளது.

**வரலாற்றுத் தகவல்கள்**

மூன்றாவது கடற்கோளின்போது பெரியதொரு ஆலயம் கடலில் மூழ்கியது எனக் குறிப்பிட்டுள்ளது. இந்த ஆலயம் கோணேசர் ஆலயமே என்பதை அகச்சான்றுகள் மற்றும் புறச்சான்றுகள் நிரூபிக்கின்றன. குமரிக்கண்ட அழிவின்போது எஞ்சிய நிலத்திணிவாக இருந்த இலங்கைத் தீவில், தென்கைலாயம் என அழைக்கப்படும் திருக்கோண மலையில் அமைந்திருந்த ஆலயம் சந்தித்த முதலாவது அழிவு இது எனலாம். அதன் பின்பும் பலமுறை இவ்வாலயம் அழிவுகளைச் சந்தித்துள்ளது. ஆனால் மீண்டும் மீண்டும் தோற்றமளித்துள்ளது. விபரங்களைப் பார்ப்போம்.

கோணேசர் ஆலய வரலாறு தொடர்பாகப் பல நூல்கள் உள்ளன. கோணேசர் கல்வெட்டு, தெட்சண கைலாயபுராணம், மட்டக்களப்பு மான்மியம், யாழ்ப்பாண வைபவமாலை, வையாபாடல், திருக்கோணாசல புராணம், திருக்கோணாசல வைபவம், திருக்கரசைப் புராணம் என்பன இவையாகும், இந்நூல்களில் இவ்வாலயம் பற்றிய வரலாற்றுச் செய்திகளுடன் கற்பனை கலந்த கர்ண பரம்பரைக் கதைகளும் சேர்த்து எழுதப்பட்டுள்ளன.

எனவே, கோணேசர் ஆலய வரலாறு தொடர்பான கர்ண பரம்பரைக் கதைகள், இதிகாசச் செய்திகள், வரலாற்றுத் தகவல்கள், தொல்லியல் ஆய்வு ஆதாரங்கள், கல்வெட்டுக்கள், சாசனங்கள் பற்றிச் சுருக்கமாக ஆராய்ந்து அவற்றினூடே இவ்வாலயத் தொன்மையைத் தரிசிப்போம். இவ்வகையில்

மகாவம்சம், சூளவம்சம், ராஜாவலிய போன்ற 'பாலி' நூல்களும் நமக்குப் பெரிதும் உதவுகின்றன.

**கர்ண பரம்பரைக் கதைகளும், வரலாற்றுக் குறிப்புகளும் :**

இதிகாச புருஷனான இராவணன், தென்னிலங்கை எனப்படும் திருக்கோயிலில் ஆட்சி செய்து கொண்டு தெட்சண கைலாயமாகிய கோணேசர் ஆலயத்தைத் தரிசனம் செய்து வந்தான் என்பது ஒரு கர்ண பரம்பரைக் கதை. இக்கதை 'மட்டக்களப்பு மான்மியம்' என்னும் நூலில் கூறப்பட்டுள்ளது.

இராவணன் தன் தாயாருக்கு சிவலிங்கம் பெற விரும்பி கோணமாமலையைப் பெயர்த்து, மலையின் இடிபாடுகளின் கீழ் சிக்குண்டு சாமகானம் பாடி வாளும், தேரும் பெற்று மீண்டான் என்பது மற்றோர் கதை. இக்கதை 'தெட்சணகைலாய புராணம்' என்னும் நூலில் இடம்பெற்றுள்ளது.

இராவணனுடைய காலம், கி.மு.6000 ஆண்டு எனவும், கி.மு.3544-ல் கடற்கோள் ஏற்பட்டது எனவும் அதில் இலங்கையில் பெரும்பகுதி அழிவுற்றது எனவும் "ராஜாவலிய" என்னும் பாலி நூல் கூறுகின்றது. இக்கடற்கோளில் கோணேசர் ஆலயமும் அழிவுற்றது.

விஜயன் வருவதற்கு முன்னரே இலங்கையில் ஐந்து ஈஸ்வரங்கள் சிறப்புற்று இருந்தன. அவையாவன: திருக்கேதீஸ்வரம், நகுலேஸ்வரம், முனீஸ்வரம், தண்டேஸ்வரம், திருக்கோணேஸ்வரம் என்பன. இதுவும் திருக்கோணேஸ்வரத்துத் தொன்மைக்கு ஒரு சான்றாகும்.

இத்திருக்கோணேஸ்வரம் காலத்துக்குக் காலம் கடற்கோள்களாலும் பகைவர்களாலும் அழிவுகளைச் சந்தித்து

வந்துள்ளது. கடற்கோள் அழிவு பற்றி முன்னர் குறிப்பிட்டோம். மற்றொரு அழிவு மகாசேனன் ஆட்சிக் காலத்தில் ஏற்பட்டது. மகாசேனன் அழித்ததாகக் கூறப்படும் மூன்று பிராமணக் கோயில்களில் ஒன்று திருக்கோணேஸ்வரம் என மகாவம்சம் கூறுகின்றது.

ஆனால் எத்தகைய அழிவு ஏற்பட்டாலும் ஏதோ ஒரு வகையில் மீண்டும் இக்கோயில் புத்துயிர் பெற்று விடுவதை வரலாற்று ஏடுகளில் நாம் பார்க்கின்றோம். மறைவதும் தோன்றுவதும் கோணேசப் பெருமானின் திருவிளையாடல் என்று எண்ணும் அளவுக்கு இம்மறைவும் தோற்றமும் அமைந்துள்ளன.

**சான்றாதாரங்கள்**

மேற்குறித்த தகவல்கள் எல்லாம் கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத் தகவல்கள். இவை தவிர கிறிஸ்துவுக்கு பிற்பட்ட காலத் தகவல்கள் சிலவும் கோணேசர் ஆலயச் சிறப்புகளுக்கு ஆதாரங்களாக உள்ளன.

கந்தளாய்க் கல்வெட்டு, குச்சவெளிக் கல்வெட்டு, திரியாய்க் கல்வெட்டு, பாலமோட்டைச் சாசனம், பிரடரிக் கோட்டைச் சாசனம் முதலியன இவ்வாலயத்துடன் சோழர் கொண்டிருந்த தொடர்பினை விளக்குகின்றன.

குடுமியாமலைக் கல்வெட்டு, தென்னிந்திய கோயிற் சாசனங்கள் முதலியன இவ்வாலயத்துடன் பாண்டியர் கொண்டிருந்த தொடர்புகளைக் காட்டுகின்றன.

இங்கு அரைகுறையாகக் காணப்படும் சிற்பத் தூண்கள், இடிபாடுகள் என்பன இவ்வாலயம் பல்லவர் காலக் கோயில் அமைப்பைக் கொண்டிருந்தமையைக் காட்டுகின்றன. பல்லவர்

காலக் குகை கோயில்களை நினைவூட்டும் வகையில் இன்றும் இவ்வாலயத்தின் மூலஸ்தானம் ஒன்று மலைப்பாறைக்கு அடியில் இருப்பதை அறிகிறோம்.

இங்குள்ள விக்கிரகங்கள், தெய்வச் சிலைகள், திருவிளக்குகள் முதலியன பாண்டியர் கால, பல்லவர் கால, சோழர்கால பழமையை உணர்த்துகின்றன. ஆனால் 1961-ல் மைக் வில்சன், றொட்னி ஜொன் கினாஸ் ஆகிய இருவரும் நடாத்திய ஆழ்கடல் ஆய்வின்போது இவ்வாலயத்தின் புராதன கட்டிட இடிபாடுகள், தூண்கள், தளங்கள் என்பவற்றைக் கண்டறிந்து கூறினார்கள். இவை நிச்சயமாக சோழர்கால, பல்லவர் காலத்துக்கு முற்பட்ட ஆலய இடிபாடுகள் என்பதில் சந்தேகமில்லை. இவை எவ்வாறு ஆழ்கடலின் அடியில் சென்றன? இதுவே நாம் ஆழமாகச் சிந்திக்க வேண்டிய முக்கிய விஷயம் ஆகும்.

**குமரிக்கண்டமும், ஈழமும்**

குமரிக்கண்டம் என்பது தெற்கே தென் துருவம் வரையும், தென்கிழக்கே அவுஸ்திரேலியா வரையும், கிழக்கே கிழக்கிந்தியத் தீவுகள் வரையும், மேற்கே ஆப்பிரிக்கா வரையும் பரந்திருந்த ஒரு நிலப்பரப்பாகும். குமரிக்கண்டம் சிதைவுற்றபோது இக்கண்டத்தின் நிலப்பகுதி பிளவுண்டு ஆப்பிரிக்கா, இந்தியா, அவுஸ்திரேலியா முதலிய கண்டங்களும் பல்வேறு தீவுகளும் தோன்றின.

காலத்துக்குக் காலம் இத்தகைய கடற்கோள்கள் இடம்பெற்றன. இவை ஏற்பட்ட காலத்தை பல்வேறு ஆய்வாளர்கள் வெவ்வேறு விதமாகக் கூறியுள்ளனர். ஒரு சாராரின் கூற்றுப்படி முதலாவது கடற்கோள் சுமார் 12,000 ஆண்டுகளுக்கு முன்னும், இரண்டாவது கடற்கோள் சுமார்

7,000 ஆண்டுகளுக்கு முன்பும், மூன்றாவது கடற்கோள் சுமார் 5,000 ஆண்டுகளுக்கு முன்பும் ஏற்பட்டது. மற்றொரு சாரார் ஐந்து கடற்கோள்கள் ஏற்பட்டன எனக் கூறுவர்.

ஆனால் டெனற் என்ற ஆய்வாளர் மூன்று கடற்கோள்கள் ஏற்பட்டன என்றும் அவற்றின் காலம் பின்வருமாறு எனவும் கூறுகிறார்:

(1) முதலாவது கடற்கோள் கி.மு. 2378

(2) இரண்டாவது கடற்கோள் கி.மு. 504

(3) மூன்றாவது கடற்கோள் கி.மு. 306

இவற்றுள் முதலாவது கடற்கோளின் போது இந்தியாவிலிருந்து இலங்கை பிரிந்ததென்றும், இரண்டாவது கடற்கோளின்போது இலங்கைக்கு பேரழிவு எதுவும் ஏற்படவில்லை என்றும், மூன்றாவது கடற்கோளின் போது இலங்கையில் பாரிய பேரழிவு ஏற்பட்டதென்றும் அவர் கூறுகிறார்.

இதனை ராஜாவலிய, மகாவம்சம், தீபவம்சம் முதலிய பாலி நூல்களும் ஊர்ஜிதம் செய்கின்றன. இம்மூன்றாவது கடற்கோளின்போதுதான் திருக்கோணமலையின் திருக்கோணேசர் ஆலயமும் பாதிக்கப்பட்டிருக்கலாம் என்பது ஏற்றுக்கொள்ளக் கூடியதே.

**கடற்கோளும் திருக்கோணேஸ்வரமும்**

இவ்வாறு ஏற்பட்ட கடற்கோளின்போது இலங்கையில் திருக்கோணமலையில் அமைக்கப்பட்டிருந்த கோணேசர் கோயில் சிதைவுற்று ஆழ்கடலில் மூழ்கியது. கோணேசர்

மலையடிவாரத்தில் உள்ள கடலில் காணப்படும் கோயில் தளம், தூண்கள், இடிபாடுகள் முதலியன இதை நிரூபிக்கின்றன.

மேலும் இராவணன் வெட்டு என்று நாம் அழைக்கும் மலைப்பிளவும், தற்போது மலைப்பூசை நடைபெறும் மலைப்பாறையின் அடியில் உள்ள பிளவும் ஒரு கடற்கோளின்போது மலைகள் பிளவுபடும் வகையில் அமைந்திருப்பதும் இதற்கு ஒரு சான்றாகும்.

கோணேசர் மலையின் அடியில் உள்ள கடற்பிரதேசமே முன்பு புராதன கோயில் இருந்த இடம் என்பது ஆழ்கடல் ஆய்வாளரின் கருத்து.

இதற்குச் சான்றாக ஆழ்கடலில் அமிழ்ந்துள்ள கோயிற்தளம், இடிபாடுகள் முதலியனவும் அவற்றுக்கு எதிரே மீந்திருக்கும் மலையின் உட்புறம் கோயில் மூலஸ்தானமும் அமைந்துள்ளன.

இதுகாலம்வரை கி.பி. 1624-ல் போர்த்துக்கேய தளபதி கொன்ஸ்ரான்ரைன் டீசா, கோணேசர் கோயிலை இடித்து அதன் கற்களைக் கொண்டு கோட்டை கட்டிய சம்பவத்துடன் மட்டுமே, நமது சிந்தனை நங்கூரமிட்டுத் தகைந்துள்ளது. ஆகையால் அதற்குமேல் சிந்தனை செல்லவில்லை.

ஆனால் இந்த அழிவுக்கும், கடலின் கீழ் காணப்படும் தளம் முதலிய இடிபாடுகளுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்பது தெளிவு. அதுமட்டுமல்ல கோட்டையைக் கட்டுவதற்குக் கோயிலின் இடிபாடுகள் பயன்பட்டன என்பதால் அவை கடலுக்குள் வீசப்பட வேண்டிய அவசியம் இல்லை அல்லவா? மேலும் மொஹஞ்சதாரோவும், திருக்கோணமலையும் சமகால நாகரிகம் உடையவை என்றும், மூன்றாவது கடற்கோளின்போது

குமரிக் கண்டத்திலிருந்து இடம் பெயர்ந்த மக்களே வடக்கே சென்று மொஹஞ்சதாரோ, சிந்துவெளி நாகரிகத்தைத் தோற்றுவித்தனர் என்றும் ஏற்கனவே பார்த்தோம். திருக்கோணமலையில் உள்ள திருக்கோணேஸ்வரம் குமரிக் கண்டத் தொன்மையுடையது என்பதற்கு இதுவே ஒரு வலுவான சான்றாகும்.

**இதுவரை நாம் கூறியவற்றைப் பின்வருமாறு தொகுக்கலாம் :**

அ. திருக்கோணேஸ்வர ஆலயம் காலத்துக்குக் காலம் கடற்கோள்களினாலும், பகைவர்களாலும் அழிவுகளைச் சந்தித்துள்ளது.

ஆ. எவ்வாறு அழிவு ஏற்பட்டாலும், மீண்டும் மீண்டும் புத்துயிர் பெறும் அற்புதம் இவ்வாலயத்தில் நிகழ்ந்துள்ளது.

இ. கி.பி. 1624-ல் போர்த்துக்கேயத் தளபதி கொன்ஸ்ரான்ரைன் டீசாவால் இவ்வாலயம் அழிக்கப்படுவதற்கு முன் கடற்கோளினால் அழிவு ஏற்பட்டுள்ளது. இது சுமார் 2,300 ஆண்டுகளுக்கு முன் (கி.மு.306) நிகழ்ந்துள்ளது.

ஈ. இறுதிக் கடற்கோள் ஏற்பட்ட காலம் குமரிக் கண்டக் காலம். குமரிக் கண்டம் சிதைவுற்றபோது எஞ்சியிருந்த நிலத்திணிவுகளில் ஒன்று இலங்கை.

உ. இலங்கையில் தென்கைலாயம் எனக் குறிப்பிடப்படும் திருக்கோணேஸ்வர ஆலயமும் கடற்கோளின்போது அழிவுற்றது. அதன் இடிபாடுகள் இன்றும் ஆழ்கடலில் உள்ளன.

## அடிக்குறிப்புகள்

1. The Historical Element of Indian Tradition.
2. The Lost Lemuria by Scott Eliot.
3. திருக்கோணமலைத் திருவுருவங்கள் - குல. சபாநாதன் 1954.
4. மட்டக்களப்பு மான்மியம் - பதிப்பாசிரியர் எவ்.எக்ஸ்.சி. நடராசா, ப.5.

   Monograph of Batticaloa by S.O. Canagaratna, page 7.
5. 1.) தெட்சண கைலாய புராணம் - தெட்சணாமூர்த்திச் சுருக்கம். (பதிப்பாசிரியர் அழகக்கோன்)

   2.) திருக்கோணாசல வைபவம் - பதிப்பாசிரியர் அ. அழகக்கோன் - 1950, பக்.33.
6. கோணேஸ்வர ஆலய வரலாறு, "வீரகேசரி" கட்டுரை 1963 - மார்ச் 17, 24, 31 - 41.
7. P.E. Pieris, Nagadipa & Buddhist Remains in Jaffna, J R A S C B XXVI No. 70, 1917, pp. 17-18.
8. G.P. Malalasekara, Editor "Vamsakathappakasini" Commentary on the Mahavamsa II London 1935 pp 685.
9. The Lost Lemuria by Scott Eliot.
10. 1.) காலவாராய்ச்சி - டாக்டர் மா. ராசமாணிக்கனார், பக்கம் 45.

    2.) History of Ceylon by Tennet, page 5 - 10.

"சிவநெறி" - திருக்கோணேஸ்வர ஆலய மண்டலாபிஷேக சிறப்பு மலர் - 1993

# மட்டக்களப்பு பிரதேசத்தின் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தடயங்கள்

தமிழகத்தின் நாகரீகம் பெருங்கற்காலப் (Megalithic) பண்பாட்டுடன் ஆரம்பமாவது போலவே, ஈழநாட்டின் நாகரீகமும் பெருங்கற்காலப் பண்பாட்டுடனே ஆரம்பமாகிறது. ஆகவே ஈழத்தின் கிழக்குக் கரையின் வரலாறும் அத்தகைய தொன்மை வாய்ந்தது எனலாம். எனினும் முழுமையான துருவி ஆராய்தலோ (Exploration) அகழ்வாராய்ச்சியோ (Excavation) இப்பிரதேசத்தில் மேற்கொள்ளப்படாத படியினால் திட்டவட்டமான நிரூபணங்களைப் பெற முடியாதுள்ளது. இலங்கையில் இதுவரை மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் அடிப்படையில் ஒருசிலவற்றைக் கருத்திற்கொள்ள முடியும்.

தொல்பொருளியல் (Archaeological) அடிப்படையிலே ஓரிடத்தின் வரலாற்றினை ஆராயுமிடத்து அதனை மூன்று காலப்பிரிவுகளாக வகுத்துக் கொள்வதுண்டு.

அவையாவன :

1. வரலாற்றுக்கு முற்பட்ட காலம் (Pre-Historic Period).
2. வரலாற்றுக்கு இடைப்பட்ட காலம் (Proto - Historic Period).
3. வரலாற்றுக் காலம் (Historic Period).

இவ்வடிப்படையிலே மட்டக்களப்புப் பிரதேசத்தின் பண்டைய வரலாற்றினை ஆராயலாம்.

பண்டு மட்டக்களப்பு என்று கருதப்பட்டது, தற்போதைய அம்பாறை மாவட்டத்தினையும் உள்ளடக்கிய பிரதேசமாகும். இதற்கமைய மட்டக்களப்பு பிரதேசத்தின் வரலாற்றுக்கு முற்பட்ட காலத் தடயங்களை நோக்கலாம்.

**1. கிழக்கிலங்கையின் தொன்மை**

ஏற்கனவே குறிப்பிட்டது போல், கிழக்கிலங்கையில் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் சம்பந்தமான ஆய்வுகள் எதுவுமே ஒழுங்கான முறையில் இதுவரை நடைபெறவில்லை. கிடைக்கும் ஆதாரங்களோ மிகவும் குறைவு. எனவே இலங்கைத் தீவின் வரலாற்றுடன் தொடர்புபடுத்தியே கிழக்கிலங்கையின் வரலாற்றுக்கு முற்பட்ட காலப்பகுதியை ஆராய வேண்டும்.

இலங்கைத் தீவானது குமரிக்கண்டத்திலிருந்து பிரிவுற்ற ஒரு நிலத்திணிவு என்பது வரலாற்று ஆய்வாளர் கருத்தாகும். மண்ணியலாளர்களும் (Geologists) இக்கருத்தை வலியுறுத்தியுள்ளனர்.[1] குமரிக்கண்டம்[2] என்பது விலங்கியலாளர்களால் "லெமூரியா" எனவும் மண்ணியலாளர்களால் "கொண்டுவானாலாந்து" எனவும் அழைக்கப்பட்டது. கொண்டுவானாலாந்திலிருந்து பிளவுபட்ட நிலத்திணிவான இலங்கைத் தீவின் நிலப்பரப்பில் பத்தில் ஒன்பது பகுதிக்கு மேல் தொல்காலப்பாறைகளே அமைந்துள்ளன. இத் தொல்காலப்பாறைகள் கேம்ப்ரியன் (Cambrian) யுகத்திற்கும் முற்பட்டன. தொல்காலப்பாறைகள் உருமாற்றத்திற்கு உட்படும்போது பளிங்குப்பட்டைப் பாறைகள் (Gneiss) ஆகின்றன.

கிழக்கிலங்கையின் பெரும்பகுதிகள் இப்பளிங்குப் பாறைகளைக் கொண்டமைந்தவை.[3] எனவே இலங்கைத் தீவு எத்தகைய பழமை வாய்ந்ததோ அத்தகைய பழமை வாய்ந்தது மட்டக்களப்பு பிரதேசம் என்று கொள்ளலாம்.

உலகில் காலத்திற்குக் காலம் ஏற்பட்ட கடற்கோளினால் குமரிக்கண்டம் சிதைந்து பல கண்டங்களும் தீவுகளும் உருவாகின. கடற்கோள்களின் போது மாண்டவர் போக மீண்டவர் வடக்கேயும் வேறு இடங்களுக்கும் இடம்பெயர்ந்தனர். துண்டிக்கப்பட்ட இலங்கைத் தீவிலே தங்கினோர் தனித்து விடப்பட்டனர். வடக்கே இடம்பெயர்ந்தோர் சிந்துவெளி, மெசப்பத்தோமிய நாகரீகங்களை உருவாக்கினர். நாகர் அல்லது ஆதி திராவிடர் எனப்படும் இவர்களே இலங்கைத் தீவிலும் தங்கியிருந்தனர்.[4] இதனைப் பல்வேறு இலக்கியங்கள் வாயிலாகவும், ஆய்வுகள் மூலமும் அறிய முடிகிறது.[5]

## 2. மட்டக்களப்பு பிரதேசத்தின் கற்காலம் (Stone Age)

வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் முதலிடம் வகிப்பது கற்காலமாகும். இது பழங்கற்காலம் (Palleolithic), இடைக்கற்காலம் (Mesolithic), புதிய கற்காலம் (Neolithic), சிறு கற்காலம் (Microlithic) என பல காலப்பிரிவுகளைக் கொண்டது. கற்காலம் இடத்துக்கிடம் வேறுபடும். எனினும் பொதுவாக, கற்காலம் என்பது கி.மு. 35,000 - கி.மு. 5,000 எனக் கொள்ளப்படும். இக்காலக் கற்கருவிகளும், Abbablian, Acheulian, Amyathian, Chillean, Clatonian, Pevellocian, Auringanesian, Magdalenian, Mountanion Solutranian எனப் பலவகைப்படும்.

இலங்கையிலே இரத்தினபுரி, பலாங்கொடை, பதவிகம்பொல, எம்பலிப்பிட்டிய, கதகத்தான (Gatahatana) கலவான, குருவிற்ற, கேகால, வம்பறகல, லுணுகல, உடுப்பிட்டிகல, இப்பன்கட்டுவ போன்ற பல இடங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் மூலம் பலவகையான கற்கருவிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.[6] ஆதிமனிதன் வாழ்ந்த குகைகளில் அவனால் உபயோகிக்கப்பட்ட பல்வேறு பொருட்கள், மிருக எலும்புகள் போன்றனவும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவை நர்மதா நதிக்கரை, அவுஸ்திரேலியா, இத்தாலி, சிசிலி, கிறீஸ், யாவா போன்ற இடங்களில் கிடைக்கப்பெற்ற ஆதிமனித எச்சங்கள் போன்றே காணப்படுகின்றன. யாழ்ப்பாணத்திலும் கி.மு. 10,000 - கி.மு. 700 காலப்பகுதிக்குரியதெனக் கருதப்படும் சிறுகற்காலத்துக்குரிய கல்லாயுதங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.[7]

குமரிக்கண்டத்திலிருந்து பிரிவுற்ற இலங்கைத் தீவின் ஏனைய பகுதிகளில் காணப்பட்ட ஆதிமனித எச்சங்கள் மட்டக்களப்பு பிரதேசத்திலும் இருக்க வேண்டும். வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தின் ஒரு பிரிவான பிந்திய கற்காலத்துக்குரிய (Neolithic) எச்சங்கள் இங்கும் காணப்படுவதாக அறிகின்றோம்.[8] புதிய கற்காலத்துக்குரிய பிளேக் (Plake) எனப்படும் கற்கருவிகள் மட்டக்களப்பு பிரதேசத்திலே காணப்படுவதையும் அக்கால ஆதிக்குடிகளின் சந்ததியினரே இன்றும் மட்டக்களப்புக் காட்டுப்பிரதேசங்களில் வாழும் வேடர்கள் என்பதையும் அறிய முடிகிறது. இவ்வேடர்களின் மூதாதையினரே "ஒஸ்ரிக்" மொழி பேசும் கூட்டத்தவர் எனவும் கொள்ள முடியும். இவர்களை, மானுடவியலாளர் ஒஸ்ரலோயிட் (Austroloid) இன மக்கள் என அழைப்பர்.[9]

மஜும்தார், சட்டர்ஜி போன்ற பிரபல ஆய்வாளர்கள் கிழக்கு மாகாணத்திலே காணப்படும் திராவிடர்களுக்கு முற்பட்ட இவ்வேடர்களே இயக்கர், நாகர் என இதிகாசங்களில் குறிப்பிடப்படுவோர் என்று கூறியுள்ளதும் கவனிக்கத்தக்கது.[10] ஆகவே கி.மு. 6ஆம் நூற்றாண்டில் (கி.மு. 543) விஜயன் இலங்கைக்கு வந்தபோது இலங்கையின் ஆதிக்குடிகள் எனக் கருதப்படும் இயக்கர், நாகர் என்போர் இங்கு வாழ்ந்தனர் என்பது வரலாறு. பிரபல தொல்லியலாளரான செளிக்மன் (S.G. Sheligmen) இதனையே வலியுறுத்தியுள்ளார்.[11]

மட்டக்களப்பு பிரதேசத்திலே காணப்படும் கற்காலத் தடயங்கள் பற்றி ஜி.சி. மெண்டிஸ், Wayland, பி.ஈ.பி. தெரனியகல போன்ற பிரபல ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளதும் கவனிக்கத்தக்கது.[12]

## 3. மட்டக்களப்புப் பிரதேசத்தின் வரலாற்று இடைக்காலம் (Proto Historic Period)

வரலாற்று இடைக்காலம் என்பது பொதுவாக கி.மு. 8000 - கி.மு. 5000 காலப்பகுதியாகும். மட்டக்களப்பு பிரதேசத்தின் வரலாற்று இடைக்காலமும் தகுந்த ஆய்வுகள் மேற்கொள்ளப்படாத ஒரு காலப்பகுதியாகும், எனினும் ஒரு சில துருவி ஆய்வுகள் (Exploration) மூலம் சில தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடிகிறது. இலங்கையின் ஆதிக்குடிகளான நாகர், இயக்கர் என்போரை பெரும்பாலான ஆய்வாளர்கள் மனிதர்களாகக் கருதவில்லை. அவர்களை அமானுஷ்ய சக்தி படைத்தவர்கள் என்றே குறிப்பிடுகின்றனர். பேராசிரியர் பரணவிதான, அவர்களை மனிதர்களை உண்டு சீவிக்கும் இராட்சதர் என்றே கூறியுள்ளார்.[13] இது முற்றிலும் தவறானது.

நாகர்கள் பற்றிய கருத்துத் தெரிவிக்கும் பலர் அவர்கள் தென்கிழக்குக் கரையோரம், வடபகுதி போன்ற பகுதிகளில் வாழ்ந்ததாகக் குறிப்பிடுகின்றனர். இதனைப் பல்வேறு இலக்கியங்கள் வாயிலாகவும் அறிய முடிகிறது. மட்டக்களப்பின் பண்டைய வரலாற்றிலே முக்கியத்துவம் பெறும் ஓர் இடம் நாகர் முனை என்பது. இது இன்றைய திருக்கோவில் பகுதி. இப்பகுதியில் நாகர் வாழ்ந்ததால் இது நாகர் முனை எனப் பெயர் பெற்றிருக்கலாம். இது போன்றே இந்தியாவில் பாண்டிநாடு, சேரநாடு முதலாம் பல இடங்களில் நாகர் வாழ்ந்தமைக்கான சான்றுகள் ஏராளம் உள.[14] இலங்கையின் வடபகுதியில் நயினாதீவு போன்ற இடங்களில் நாகர் எச்சங்கள் உள்ளன.

குமரிக்கண்டத்திலே வாழ்ந்த மக்களே இயக்கர், நாகர் என்பதும் இவர்கள் இலங்கையின் கிழக்குப் பகுதியில் மட்டுமல்லாது நாட்டின் பெரும்பாலான இடங்களில் ஆதிக்குடிகளாக வாழ்ந்தனர் என்பதும் தெளிவாகிறது. துண்டாடப்பட்ட இலங்கைத் தீவிலே தனிப்படுத்தப்பட்ட மக்கள், தாம் ஏற்கனவே இருந்த நாகரீக நிலையில் இருந்து குறைந்த நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கலாம். பெரிய உருவைக் கொண்ட இக் குமரிக்கண்ட மக்களை இராட்சதர்கள் என ஆய்வாளர்கள் குறிப்பிட்டதிலும் ஆச்சரியமில்லை.

லிங்க வழிபாடு, மரவழிபாடு, நாகவழிபாடு, தாய்த்தெய்வ வழிபாடு போன்றவை சிந்துவெளி மக்களிடையே காணப்பட்ட வழிபாடுகளாகும். இவையே கிழக்கிலங்கையிலும் பரவலாகக் காணப்படுகின்றன. இன்றும் இப்பகுதியில் வேரூன்றி நிற்கும் தாய்த்தெய்வ வழிபாடு, நாகவழிபாடு முதலியன இக்கருத்தினை மேலும் வலியுறுத்துவதாக அமைகின்றன.

## 4. மட்டக்களப்புப் பிரதேசத்தின் பெருங்கற்காலம் (Megalithic Period)

வரலாற்றுக்கு இடைப்பட்ட காலம் என்பதிலே முக்கியம் பெறும் ஒரு காலப்பகுதி பெருங்கற்காலமாகும். இது புதிய கற்காலத்துக்கும் வெண்கல காலத்திற்கும் இடைப்பட்ட காலப்பகுதி ஆகும். சிந்துவெளி, மெசப்பத்தோமியா போன்ற புகழ்பெற்ற நாகரீகங்கள் கட்டியெழுப்பப்பெற்ற காலப்பகுதி இதுவேயாகும். இதனை ஏறக்குறைய கி.மு. 5000 - கி.மு. 2000 எனக் கொள்வர். பிணங்களைப் பெரிய தாழிகளில் அடைத்துப் புதைத்தல் (ஈமத்தாழிகள்), நினைவுச் சின்னங்களை அமைத்தல் முதலியன இக்காலப் பகுதியில் பரவலாக நிலவிய பண்பாடாகும்.

எனவே, பெருங்கற்காலப் பண்பாடுகளில் முக்கியம் பெறுவன இடுகாடுகள், ஈமத்தாழிகள் என்பனவாகும். இலங்கையில் பொன்பரிப்பு, புத்தளம், யாழ்ப்பாணம், புதுகல, கதிர்காம பிரதேசம் முதலாம் பல்வேறு இடங்களில் ஈமத்தாழிகள் பெருமளவு கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. எனினும் நடுகல் வணக்கமுறை காணப்பட்டது மட்டக்களப்பின் கதிரவெளி என்னுமிடத்திலாகும். இவற்றை பரணவிதான அவர்கள் பதிவு செய்துள்ளார். கதிரவெளியிலே குரங்கு படையெடுத்த வேம்பு என்னுமிடத்திலே கற்சலாகைகள் இங்குமங்குமாகக் காணப்படுகின்றன. கற்களை நீள்சதுர சலாகைகளாக வெட்டியெடுத்து பூமியில் பதித்து வைத்துள்ளனர். இது யக்க வழிபாட்டுடன் தொடர்புபட்டது என்பது பேராசிரியர் பரணவிதான கருத்தாகும்.[15]

தென்னிந்தியாவிலே இத்தகைய கற்சலாகைகள் மூலம், நடுகல் வணக்கம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இங்கு பெருங்கற்காலப் பிரேதக்குழிகள் பலவிதமான அமைப்புகளுடன் காணப்பட்டன. கி.மு. 3000 அளவில் மெசப்பத்தோமியா, பாரசீகம், சிரியா, எகிப்து போன்ற இடங்களில் கல்லறைகளில் பிரேதங்களை மூடிக்கட்டும் வழக்கம் வெவ்வேறு விதமாக இடம்பெற்றது. சைபிரஸ் முதலாம் மத்தியதரைக்கடற் பிரதேசங்களிலும் இவ்வழக்கம் காணப்பட்டது.

தென்னிந்தியாவிலே பல இடங்களில், ஆதிச்சநல்லூர், செங்கல்பட்டு மாவட்டம், மைசூர், பிரமகிரி, புதுக்கோட்டை முதலாம் பல இடங்களில் பிணத்தைத் தாழிகளில் புதைக்கும் வழக்கம் காணப்பட்டது. இத்தாழிகள் புதைக்கப்பட்ட இடத்திலே பெரிய கற்கள் குவிக்கப்பட்டன.[16] இதனையே புறநானூறு போன்ற நூல்களும் குறிப்பிடுகின்றன. இவை முதுமக்கள் தாழி, ஈமத்தாழி எனவும் இவ்விடங்கள் ''புறங்காடு'', ''இடுகாடு'' எனவும் அழைக்கப்பட்டன.[17] சில இடங்களில் இதனை ''குரங்குப்படை'', ''குரங்குப் பட்டடை'' என்பர்.[18] இதுவே கதிரவெளியில் ''குரங்குப்பட்டடை'' என்றாகி பின்னர் குரங்குப்படை எடுத்த வேம்பு ஆயிற்று எனலாம்.

இவ்வழக்கம் பின்வரும் வழிகளில் இடம் பெற்றிருக்கலாம்:

அ.) தென்னிந்தியாவிலிருந்து வந்த குடிகளே இவ்வழக்கத்தைக் கைக்கொண்டிருக்க வேண்டும் அல்லது

ஆ.) இப்பகுதியில் தமிழர் குடியேற்றம் ஒன்றிருந்திருக்க வேண்டும், அல்லது

இ.) இவ்விடங்களில் போர் வீரர்கள் புதைக்கப்பட்டிருக்க வேண்டும்.

எவ்வாறாயினும் கி.மு. 5ஆம் நூற்றாண்டுக்கும் கி.மு. 2ஆம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் மட்டக்களப்பு பிரதேசத்திலே சிறந்த ஒரு நாகரீகத்தையுடைய மக்கள் வாழ்ந்துள்ளனர் என்பது இதனால் தெளிவாகிறது.

## 5. சுடுமண் உருவங்கள் (Terracotta Figures)

மட்டக்களப்பு பிரதேசத்தில் சுடுமண் உருவங்கள் பல இடங்களில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவை லிங்கம், பெண்தெய்வம், குதிரை, யானை முதலிய உருவங்களாகும். இவை கிழக்கு மாகாணத்திலே தப்போவா, மருதமடு, நவக்கிரிநகர், கதிர்காமத்தை அண்டிய பிரதேசம், அம்பாறை போன்ற இடங்களில் கண்டுபிடிக்கப்பட்டன. அண்மையில் பெரிய நீலாவணையிலும் இத்தகைய உருவங்கள் அடங்கிய குடம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டதாக அறிய முடிகிறது.

இப்பெண் தெய்வ உருவங்கள் ஈழத்துப் பண்டைய வழிபாடுகளில் தாய்த்தெய்வ வழிபாடு ஒரு முக்கிய அம்சமாக விளங்கியதைக் காட்டுகிறது.[19] உலகில் ஆதி வரலாறுகளில் தாய்த்தெய்வ வழிபாடு முதன்மையானது. இது திராவிடருக்கே உரிய சிறப்பான வழிபாடும் மிகப் பழமையானதுமாகும். ஆகவே இங்கு காணப்பட்ட சுடுமண் உருவங்கள் பழமையை பறைசாற்றுவனவாய் அமைகின்றன. இவ்வுருவங்கள் பல்வேறு முகூர்த்தங்களைக் காட்டுகின்றன. இவ்வழிபாடே பின்னர் கி.பி. 113–ல் ஈழத்திற்கு வந்த கண்ணகி வழிபாட்டோடிணைந்து கொண்டது எனலாம். இன்னும் மட்டக்களப்புப் பிரதேசத்தில் தாய்த்தெய்வ வழிபாடு முக்கிய இடம் வகிப்பது இதற்குச்

சான்றாகும். சிலப்பதிகாரம் கூறும் பூத வழிபாடும் இதுவேயாகும். எனவே மட்டக்களப்பு வரலாற்றின் பழமைக்கு இச்சுடுமண் உருவங்களும் சான்றாக அமைகின்றன.

## 6. கிறிஸ்துவுக்கு முற்பட்ட கால பிராமிக் கல்வெட்டுக்கள்

கிழக்குப் பிரதேசத்திலே காணப்படும் குகைகளிலே பல பிராமிக் கல்வெட்டுக்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவற்றையெல்லாம் பரணவிதான அவர்கள் வாசித்து விளக்கம் வெளியிட்டுள்ளார்.[20] குசலன்கந்த தொடக்கம் போவத்தகல வரையும் உள்ள பகுதியில் கி.மு. கால பிராமிக் கல்வெட்டுக்கள் பல கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவை எல்லாமே குகைக் கல்வெட்டுக்களாகும். பெரும்பாலானவை 'அபய', 'நாக', 'தேவநம்பிய', 'கமினிதிச' போன்ற அரச பெயர்களைக் கொண்டவர்களால் வழங்கப்பட்ட நன்கொடை பற்றிக் குறிப்பிடுகின்றன. 'சங்க', 'பருமக', 'தேரக' போன்ற சங்கப் பெயர்களைக் குறிப்பன சில. 'நாக', 'அபய', 'திச அபய', 'கண' போன்ற சிற்றரசர்களைக் குறிப்பன சில. இவற்றில் பெரும்பாலானவை கி.மு. 3ஆம் நூற்றாண்டு தொடக்கம், கி.பி. 1ஆம் நூற்றாண்டுக்கு இடைப்பட்டவையாகும். இவை நன்கொடைகளையே பெரும்பாலும் குறிக்கின்றன. இவை கி.மு. கால சமய நடவடிக்கைகளையும் திராவிட முறையிலிருந்து எவ்விதம் பௌத்த நடவடிக்கைகள் மேலோங்கின என்பதையும் உணர்த்துகின்றன.

## 7. தொகுப்பு

மேற்கண்ட தகவல்களிலிருந்து மட்டக்களப்புப் பிரதேசத்தின் தொன்மை நன்கு நிரூபணமாகின்றது. பின்வரும் ஆதாரங்கள் அதற்குத் துணைபுரிகின்றன:

1.) குமரிக்கண்ட காலத்து நாகரீகத்தின் தொடர்ச்சியாக இயக்கர், நாகர் என்னும் பழங்குடிகள் மட்டக்களப்பு பிரதேசத்தில் வாழ்ந்துள்ளனர். இவர்களின் சந்ததியினரே இன்றுள்ள வேடர்கள்.

2.) பழைய கற்கால, இடைக்கற்கால, பெருங்கற்காலத்துச் சான்றுகளும் இங்கு புதையுண்டு காணப்படுகின்றன.

3.) பெருங்கற்காலத்துச் சான்றுகளான ஈமத்தாழிகள், சுடுகாடுகள், சுடுமண் உருவங்கள் இப்பிரதேசத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

4.) கி.மு. கால பிராமி குகைக் கல்வெட்டுக்கள் பல கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

5.) முறையான அகழ்வாராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டால் திராவிடர் நாகரீகமும் பழந்தமிழர் பண்பாடும் மிகவும் தொன்மையான காலத்தே மட்டக்களப்பு பிரதேசத்தில் நிலைத்திருந்தமைக்கு வலுவான சான்றுகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

## அடிக்குறிப்புகள்

1. (i) Lemuria the Lost Continent of Pacific - N.S. Cave p.16.
   (ii) The Story of Atlantis and the Lost Lemuria by Scott Eliot, p. 18.
   (iii) குமரிக்கண்டம் அல்லது கடல்கொண்ட தென்னாடு - அப்பாத்துரை, கா.
2. E.K. Cook - Ceylon in Geomy, p.63.
3. இலங்கையின் புவிச்சரிதவியல் - க. குணராசா, பக். 16
4. தமிழ்நாட்டு வரலாறு - இறையரசன் - 1983, சென்னை- பக்.33
5. The Lost Lemuria by Scott Eliot

   காலவாராய்ச்சி - டாக்டர் இராசமாணிக்கனார், பக்.45

   வரலாற்றுக்கு முற்பட்ட வடக்கும் தெற்கும் - அ.மு. பரமானந்த சிவம், பக்.13
6. Ancient Ceylon - Journal of the Archaeological Survey of Ceylon 1971, January - Chapter I, II.
7. வீரகேசரி வார வெளியீடு 5.2.1984 கட்டுரை செ. கிருஷ்ணராசா
8. A.S.C.A.R.S.G. Taylor - Bedward Primitive Culture - 1946 December, page 48.
9. சிந்தனை - ஆடி 1983 கலாநிதி சிற்றம்பலம் - கட்டுரை ஈழத்து யக்ஷநாக வழிபாடுகள்.
10. The History and Culture of Indian People by Majumdar pp. 8, 49.

Heritage and Life of Ceylon, Editor Pusadar, Calcutta - 1946 page 235.

11. The Veddha - by G.G. Sheligmen - Cambridge - 1911, page 419, 430.

12. The Early History of Ceylon - G.C. Mendis, Calcutta - 1948 page 3, 45.

13. J.R.R.S.C.B. (NS) VII, pp. 181 - 2, 1961

"The Ariyakingdom in North Ceylon, Paranavitana

14. The Aboriginal Tribes of Hyderabad I by Chritaph Von, London - p.82, 1943 .

The Serpent Worship - James Ferguson and Edition 1873 - pp. 64.

15. Ceylon Journal of Science, Vol. II -1928 December 1933 February - pp. 94 - 95.

16. Ancient India 9, 1953 - Mergalatic.

17. புறநானூறு பாடல் 2-28.

18. Ancient India - Megalatic Burials and Urn fields of South India in the Tamil Literature and Tradition - No.2, 1945 January.

19. சிந்தனை - 1983 ஆடி பக்.48, பண்டைய ஈழ யக்க நாக வழிபாடு கட்டுரை - பேராசிரியர் சிற்றம்பலம்.

20. Inscription in Ceylon - S. Paranavitana, page 30-40 கல்வெட்டு இல : 308 - 549.

# மட்டக்களப்பின் பூர்வீக வரலாற்றுச் சான்றுகள்

## 1. முன்னுரை

இலங்கையின் வரலாறு கூறும் முக்கிய பாலி நூல்களான ''மகாவம்சம்'', ''சூளவம்சம்'', ''ராஜாவலிய'', ''பூஜாவலிய'' முதலியவை, இலங்கையில் தமிழர் ஆட்சி பற்றிய முழுமையான தகவல்களைத் தரவில்லை. அதனால் இலங்கையின் வரலாறு கற்கும் மாணவர்கள் தமிழர் ஆட்சிபற்றிய வரலாற்றுத் தகவல்களை அறியாதவர்களாகவே இன்றும் இருக்கின்றனர்.

இலங்கையின் வரலாறு கூறும் முதல் நூலான மகாவம்சம் விஜயனின் இலங்கை வருகையில் இருந்தே (கி.மு.543) ஆரம்பிக்கிறது. ஆனால் இதற்குப் பலநூறு வருடங்களுக்கு முன்பே, இலங்கையில் திராவிடர்களான இயக்கர், நாகர் என்போருடைய ஆட்சி நடைபெற்றுள்ளது.

அக்காலத்தில் கிழக்கிலங்கையும், அதன் முக்கிய பிரதேசங்களான திருகோணமலை, மட்டக்களப்பு, மண்முனை, உன்னரசுகிரி (சப்பாந்துறை பிரதேசம்), நாகர்முனை (திருக்கோயில்) பிரதேசம், தென்னிலங்கை (கதிர்காமப் பிரதேசம்) என்பன தமிழர் ஆட்சிக்குட்பட்டிருந்தன.

அதுமட்டுமல்ல, (அ) இடைக்கற்காலம் (Mesolithic - கி.மு. 10000 - 8000) (ஆ) புதிய கற்காலம் (Neolithic - கி.மு.

8000 - 5000) (இ) பெருங்கற்காலம் (Meyalithic - கி.மு. 5000 - 2000) முதலிய காலங்களுக்குரிய எச்சங்களான ஈமத்தாழிகள், நடுகற்கள் முதலிய எச்சங்கள், கதிரவெளி, தீகவாபி, உகந்தை முதலிய இடங்களில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவை நிச்சயமாக கிழக்கிலங்கையில் திராவிடர்கள் வாழ்ந்தமைக்கான சான்றுகளாகும்.

## 2. புவியியல் அடிப்படையில் மட்டக்களப்புப் பிரதேசம்

பூர்வீக மட்டக்களப்புப் பிரதேசம் வடக்கே வெருகல் முதல் தெற்கே குமண வரை நீண்டு பரந்திருந்தது. விந்தனை, வெல்லச, பிபிலை முதலிய இடங்களும் இப்பிரதேசத்தில் அடங்கியிருந்தன.

இப்பிரதேசத்தின் புவியியல் அமைப்பும், இதன் தொன்மைக்கு ஒரு சான்றாக அமைகிறது.

இலங்கைத் தீவு என்பது, பழங்கால லெமூரியாக் கண்டம் சிதறுண்டபோது, எஞ்சியிருந்த ஒரு நிலப்பகுதி என்பது வரலாற்று ஆய்வாளர் கருத்தாகும். இலங்கைத் தீவின் அமைப்பு சுற்றுவரக் கரைப் பிரதேசமாகவும் மத்தியை நோக்கி உயர்ந்து சென்று மலைப்பிரதேசமாகவும் அமைந்திருப்பதிலிருந்து இக்கூற்றின் உண்மையை நாம் உணர்ந்து கொள்ளலாம்.

மேலும் இலங்கைத் தீவில் Pre-Cambian காலத்துக்கு முற்பட்ட பாறைகள் இருப்பதும் இதற்கு ஒரு சான்றாகும். இலங்கையின் பாறைப் பொக்குகள், மண் அமைப்புகள், தாவரங்கள், விலங்குகள் என்பன இந்தியா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் உள்ளதைப் போல் அமைந்திருக்கின்றன. பல்வேறு ஆய்வுகள் மூலம் இந்தியாவினதும் இலங்கையினதும் ஒத்த நிலத்தன்மை நிறுவப்பட்டுள்ளது.

மட்டக்களப்புப் பிரதேசத்தின் புவியியல் அமைப்பு, காலநிலை, மண்வளம் என்பன தொன்மை வாய்ந்தவை என்பதுடன் மயோசின் காலத்து உப்புக் கரைசல்களையும் கொண்டது என்பதும் கவனத்துக்குரியது. விலங்கியல் அமைப்பும் தொன்மையானது என்பதற்கு ஆதாரமாக, பூர்வ குடிகளான வேடர்கள் இங்கு வாழ்ந்திருந்தமையும் நமது சிந்தனைக்குரியன. இந்த வேடர்கள் லெமூரியாக் கண்டத்தின் ஆதிக் குடிகளான "ஒஸ்ரலொயிட்" இனமக்களின் வழித்தோன்றல்கள் என்பதைப் பல வரலாற்று ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

## 3. வரலாற்றுக்கால அடிப்படையில் மட்டக்களப்பில் தொன்மை

மானிடவியல் அடிப்படையில் வரலாற்றுக்காலம் பின்வருமாறு வகுக்கப்பட்டுள்ளது:

1.) வரலாற்றுக்கு முற்பட்ட காலமாக கி.மு. 35,000 ஆண்டு முதல் கணிக்கப்பட்டுள்ளது. இக்காலம் பின்வருமாறு வகுக்கப்பட்டுள்ளது -

 (i) பழங்கற்காலம் (Paleolithic) - கி.மு. 35,000 - கி.மு. 10,000.

 (ii) இடைக்கற்காலம் (Mesolithic) - கி.மு.10,000 - கி.மு. 8000

 (iii) புதிய கற்காலம் (Neolithic) - கி.மு.8000 - கி.மு. 5000.

2.) வரலாற்று இடைக்காலம் (Proto History) - கி.மு. 5000 - கி.மு. 2000.

3.) வரலாற்றுக்காலம் (Historic Period) - கி.மு. 2000க்குப் பிற்பட்ட காலம்.

பண்டைய மட்டக்களப்புப் பிரதேசத்திலும், அதைச் சுற்றியுள்ள பிரதேசங்களான ஊவா, சப்பிரகமுவா போன்ற பகுதிகளிலும், பழங்கால எச்சங்கள் கிடைக்கின்றன.

ஆதிமனித இனமான ஜாவா மனிதன் (Ginyanthopus Robustors), சீனமனித இனமான (Pithe Canthopide) மற்றும் Australoid போன்ற மனித எச்சங்கள், சப்பிரகமுவா, இரத்தினபுரி, பலாங்கொடை முதலிய இடங்களில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

கிழக்கிலே இவ்வித ஆய்வுகள் செய்யப்படவில்லை. உண்மையில் சப்பிரகமுவா, ஊவா மலைத் தொடர்களே மட்டக்களப்புப் பிரதேசத்தின் மேற்கு எல்லைப்புறமாக உள்ளது. எனவே இவ்வெச்சங்கள் இங்கும் இருக்க வேண்டும்.

இங்கு இன்றும் வேடர்கள் நிரந்தர குடிகளாக வாழ்கின்றனர். விந்தனை, வெல்லச, மகியங்கனை, அம்பாறை, திருக்கோவில், தமன, குமன, நுவரச, நில்கல, தெரணியகல, பிபிலை, சிப்பிமடு, றூகம், உன்னிச்சை தும்பாலை, மகாஓயா, களுவன் கேணி, பனிச்சங்கேணி, வாகரை, கதிரவெளி போன்ற இடங்கள் ஆதிக்குடிகளான வேடர்கள் வாழும் பூர்வீக இடங்களாகும். எனவே மட்டக்களப்புப் பிரதேசம் கற்கால மனிதன் வாழ்ந்த இடம் என்பது தெளிவாகிறது.

இவ்விபரங்களை, செளிக்மன் (Sheligman) போன்ற பிரபல ஆய்வாளர்கள் வெளியிட்டுள்ளனர். அவை "The Veddha" - Journal of Royal Asiatic Society, Vol. XXI, pp.73-88 ஆகியவற்றில் காணப்படுகின்றன.

## 4. இடைக்கற்காலமும் கிழக்கிலங்கையும்

சப்பிரகமுவ, பலாங்கொடை, இரத்தினபுரி பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளால், Homosapiens, Balangodas என்னும் Neoaderthaloid மனித இனச்சாயல் படிந்த Australoid இன மனிதன் இங்கு வாழ்ந்தான் என்றும், இவர்களின் வழித்தோன்றல்களே இன்றைய வேடர் இனம் என்றும், ஆய்வாளர்கள் கருதுவதையும் ஏற்கனவே குறிப்பிட்டுள்ளோம்.

கிழக்கிலங்கையிலும், கதிர்காமம் முதலிய தென்கிழக்கிலங்கை பிரதேசத்திலும், வேடர் பரம்பரை தொடர்ந்து வருகிறது. "சபரர்" என்னும் ஆதிமனித இனத்தவர் இந்தியாவின் விந்திய மலைக்காடுகளிலே காணப்பட்டனர். சபரர், இருளர், காடர், புளிஞர் போன்றவர்கள் மானிடவியல் ஆய்வாளர்கள் கண்டறிந்த ஆதிமனித இனத்தவராவர். ("சபரர் + காம" என்பது சபரர் வாழும் கிராமம் என்றாகும். இதுவே பின்னர் "சப்பிரகமுவ" என்று மருவியது என்பர்). இவர்கள் அனைவரும் வேடர் இனத்தவரே.

இவ்வினத்தவர் கிழக்கிலங்கையில் 'உகந்தை'யிலும் காணப்பட்டனர். கந்தழி முறையின் வேல் வழிபாடு, கடம்பமர வழிபாடு, லிங்க வழிபாடு என்பன ஆதி மனிதருக்குரிய வழிபாட்டு முறைகளாகும், இவ்வழிபாட்டு முறைகள் மட்டக்களப்புப் பிரதேசத்தில் அன்று முதல் இன்றுவரை தொடர்கிறது.

ஆதிகால மனிதரிடம் மர வழிபாடு நிலை பெற்றிருந்தது. காலஓட்டத்தில், மரம் பட்டுப்போக, மரத்தின் அடிப்பகுதியை வழிபடும் முறை ஏற்பட்டது. இதுவே கந்தழி வழிபாட்டு முறையாகும்.

இதன் பின்னர் பட்ட அடிமரத்துக்குப் பதிலாக கல் ஒன்றை நட்டு வழிபடும் முறை ஏற்பட்டது. இதுவே நடுகல் வழிபாட்டு முறையாகும். இந்த நடுகல் வழிபாடு மேலும் வளர்ச்சியடைந்து கல்தச்சர்களினால், பீடத்துடன் கூடிய லிங்கம் உருவாக்கப்பட்டு லிங்க வழிபாடாக மாறியது. கி.மு. 6000 ஆண்டுகளுக்கு உரியதான சிந்துவெளி நாகரிகத்தில், மரவழிபாடு, லிங்கவழிபாடு முதலியவற்றுக்குரிய எச்சங்கள் கண்டெடுக்கப்பட்டமை இங்கு நினைவு கூரத்தக்கது.

## 5. புதிய கற்காலமும் கிழக்கிலங்கையும்

இடைக்கற்காலத்தைத் தொடர்ந்து புதிய கற்காலம் ஆரம்பமாகிறது. இக்காலத்துக்குரிய எச்சங்களும், உகந்தை, வெருகல், மண்டூர், திருக்கோயில், போரதீவு, கொக்கட்டிச்சோலை முதலிய இடங்களில் காணப்பட்டன.

கொடிநிலை, கந்தழி வழிபாட்டின் தொடர்ச்சியான லிங்க வழிபாட்டுக்குரிய சிவலிங்கமே, கொக்கட்டிச்சோலையில் கொக்கட்டி (கொக்குநட்டி) மரத்தின் அடியில் கண்டெடுக்கப்பட்ட (தான்தோன்றீஸ்வரர்) சிவலிங்கம் எனலாம்.

கேரள, சங்ககால வழிபாட்டு முறையில், கதிர்காமம், மண்டூர், உகந்தை போன்ற இடங்களில் முருக வழிபாடு உள்ளது. உருவம் இல்லாது, பூசை இல்லாது, மௌன வணக்கம் இங்கு பின்பற்றப்படுகிறது. கடம்ப மரத்தின் அடியில் மேடை அமைத்து, யந்திரம் கீறி வழிபடும் கேரள முறை இங்கு நினைவு கூரத்தக்கது. கேரளம், தமிழகம், ஈழம் என்பன இடைக்கற்கால, புதிய கற்கால எச்சங்கள் கொண்டுள்ளமையும் இங்கு ஒப்பு நோக்கற்பாலது. இப்பிரதேசங்களில் ''முருகு'' என்ற பெயருடன் முருக வணக்கம் புதிய கற்காலத்தில் இடம் பெற்றிருந்தது.

முருகனின் தாய் 'கொற்றவை' என வழங்கப்பட்டு, 'கொற்றவை' வணக்கமும் இவ்விடங்களில் இடம் பெற்றன. இவ்வாறான, சிவலிங்க வழிபாடு, முருக வழிபாடு, கொற்றவை வழிபாடு என்பன இன்றும் மட்டக்களப்புப் பிரதேசத்தில் நடைமுறையில் உள்ளன.

ஏறவூர், பழகாமம், போரதீவு, கரவெட்டி, புளியடிமடு முதலிய இடங்களில் கொற்றவை வழிபாடு இன்று காளி வழிபாடாகக் கொள்ளப்படுகிறது. அண்மைக் காலம் வரை இவ்வழிபாட்டுத் தலங்களில் மிருகங்களைப் பலியிடும் ஆதிகால நடைமுறை இருந்ததை யாவரும் அறிவர்.

## 6. புதிய கற்கால எச்சங்கள்

கற்கால சமுதாயத்தின் தெய்வங்களான லிங்கம், முருகு, கொற்றவை வழிபாடுகள் புதிய கற்காலத்திலும் தொடர்ந்தன. நாம் ஏற்கனவே குறிப்பிட்டது போல, வெருகல், கொக்கட்டிச் சோலை, போரதீவு, மண்டூர், உகந்தை, திருக்கோவில் முதலிய இடங்களில் இவ்வழிபாடுகள் தொடர்ந்தன. இதன் பின்னணியை ஊடுருவிப் பார்த்தால், ஆரம்ப காலத்தில், இவ்வழிபாட்டு முறைகளோடு வேடர்கள் சம்பந்தப்பட்டு இருப்பதை அறியலாம். இவர்கள் ஆதிகால மனிதர்களின் வழித்தோன்றல்கள் என்பதால், இவ்வழிபாட்டு முறைகள் தொடர்ந்து வந்தன என்பதையும் ஊகிக்கலாம்.

மேலும், கதிர்காமம், உகந்தை, திசமகாரதம் போன்ற இடங்களில் கண்டெடுக்கப்பட்ட சிவப்பு, கறுப்பு மட்பாண்டங்களும் (உடைவுகள்) இப்புதிய கற்கால நாகரிகத்தை உறுதி செய்கின்றன.

தெட்சணாபதி என்றும், தென்னிலங்கை என்றும் குறிப்பிடப்பட்ட திருக்கோயில் பிரதேசம், இராவணன் ஆட்சி

செய்த பிரதேசம் (கி.மு. 5000) என "மட்டக்களப்பு மான்மியம்" கூறுவது இங்கு கருத்திற் கொள்ளத்தக்கது. இராவணன் இயக்கர்களின் தலைவன் எனவும், இலங்கையில் வாழ்ந்த ஒரு புகழ் பெற்ற அரசன் எனவும் ஆய்வுகள் உறுதி செய்துள்ளன.

மேலும் "மகாவம்சம்" குறிப்பிடும் இராவண, வைஸ்ராவண, விபூஷண, குபேர, மகேஸ என்போர், ஆதித்திராவிடத் தலைவர்கள் என்பதை இலகுவாக நாம் ஊகித்துக் கொள்ளலாம்.

இலங்கையின் ஆதிக்குடிகளான, இயக்கர், நாகர் என்போர் திராவிட மக்கள் என்பதும் இன்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதற்கான சான்றுகள் நிறைய உள்ளன. திருக்கோயில் பிரதேசத்தின் வரலாற்றுப் பெயர் நாக நாடு, நாகர்முனை என உள்ளது. இவ்வாறு பல பெயர்கள், இயக்கர், நாகர் சம்பந்தப்பட்டுள்ளன. [(i) The Early History of Ceylon by G.C.I. Sheligman, 1948 - pp.3 & 45 (ii) Ancient Ceylon - JAS - Ceylon - S. Poulier Zeylanica, Vol.29. Part I, 1960 - pp. 92 - 94].

## 7. வரலாற்று இடைக்காலம்

**பெருங் கற்கால எச்சங்கள் (கி.மு. 5000 - கி.மு. 2000) :** இக்கால நாகரீகத்தில் பிணங்களைத் தாழிகளில் இட்டுப் புதைக்கும் வழக்கம் இருந்தது. இலங்கையிலே பொன்பரிப்பு (புத்தளப் பிரதேசம்), கந்தரோடை, வல்லிபுரம் போன்ற இடங்களில் மேற்குறிப்பிட்ட ஈழத்தாழிகள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன.

மட்டக்களப்பில் கதிரவெளி, உகந்தை மாகம (திசமகரகம்) முதலிய இடங்களிலும் இவ்வாறான சான்றுகள் காணப்பட்டன.

வாகரையிலும், கதிரவெளியிலும் (குரங்குப்படை எடுத்த வேம்பு) காணப்பட்ட கற்சலாகைகள், இப்பெருங்கற்கால இடுகாடுகளுக்குரியவை என அடையாளம் காணப்பட்டன. (Ceylon Journal of Science, Vol. II - December 1928 - February 1993, pp.94-95).

இத்தகைய இடுகாடுகள் மெசப்பதோமிய, எகிப்திய, பாரசீக, சிரிய தேசங்களிலும், இந்தியாவில் ஆதிச்சநல்லூர் முதலிய இடங்களிலும் காணப்பட்டன. தென் இந்தியாவிலே இத்தகைய இடுகாடுகள் "குரங்குப்படை" என அழைக்கப்பட்டன. அதனால்தான் கதிரவெளியில் இவை "குரங்குப்படை வேம்பு" என அழைக்கப்பட்டன போலும்.

மட்டக்களப்பில் நீள்சதுர சவப்பெட்டிகளும், கதிர வெளியில் மனித உருவ வடிவிலான சவப்பெட்டிகளும், திருவாயிலில் கறுப்பு, சிவப்பு நிற மட்பாண்ட உடைவுகளும், தாயக்கட்டைகள், ஈமத்தாழிகளும் உகந்தை, திசமகாகமவில் யானை உருவ சவப்பெட்டிககளும் கண்டெடுக்கப்பட்டு தீகவாபி அரும்பொருட்சாலையில் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன.

பெருங் கற்காலத்துக்குரிய எச்சங்களாக சுடுமண் உருவங்களின் (Terracotta) லிங்கம், யானை, குதிரை, தாய்த் தெய்வ வடிவங்கள் என்பன கிழக்கிலங்கையில் பல இடங்களில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

## 8. வரலாற்றுக்கால எச்சங்கள் (கி.மு. 2000க்குப் பின்)

இடைக்கற்கால இறுதிப்பகுதியில், எழுத்துக்கள் தோன்றின. இக்காலத்தில் பிரஹ்மி (Brahmi) எழுத்துக்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. கிழக்கு மாகாணத்திலே கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டுகளில் பெரும்பாலானவை மலைக்

குகைகளிலே காணப்பட்டன. இக்கல்வெட்டுக்கள், முன்னாள் தொல்பொருள் ஆணையாளராக இருந்த Dr. பரணவிதான அவர்களால் தொகுக்கப்பட்டு பாரிய நூல்களாக வெளிவந்துள்ளன. அவை வருமாறு :

(i) Inscriptions of Ceylon - Vol. I (1234 கல்வெட்டுகள்)

(ii) Inscriptions of Ceylon - Vol. II (114 கல்வெட்டுகள்)

இவற்றில் பல கல்வெட்டுகள் மட்டக்களப்புப் பிரதேசத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவை மட்டக்களப்பின் வடக்கே களுது பொத்தின, குசலன்கந்த, ஹெறாலன்னகல, மாவிரகல, சிப்பிமடு, விகம் முதலிய இடங்களிலும் - பண்டைய கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த அம்பாறையில், மியுன்கனவெகர, தமன, பரகாகல, ரஜகல, உகனை ஹெப்படிகல, வடிகைல, வாலகம (வேவகம்பத்து) முதலிய இடங்களிலும் மற்றும் அம்பாறை, மல்வத்தை, கல்லோடை, குடுவில, மொட்டையகல, முல்லைக் குளம்புமலை (அக்கறைப்பற்று), பெறட்டகல, கிளுவின, கிரிபொக்குன, கோனகல, குடும்பிகல, நீலகிரிசாய, நாவலங்குளம், பாணமை, றெட்டதனம், சங்கமன் கண்டி, திசமகரகம, விகாரகல முதலிய இடங்களிலும் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன.

இப்பிராமி எழுத்துக்கள் இரு வகைப்படும். அவை 1) திராவிட வரிவடிவ பிராமி 2) அசோகப் பிராமி என்பனவாகும்.

ஈழம், தமிழகம், கேரளம் என்பன புதிய கற்காலம் முதல் ஒரே வகையில் அமைந்துள்ளன என்பதை ஏற்கனவே குறிப்பிட்டோம். அவ்வகையில் அசோகப் பிரமிக்கு முன்பே தமிழி அல்லது தமிழிய பிரமி எழுத்துக்கள் தோன்றிவிட்டன. அத்தகைய பிரமி எழுத்துக்கள் ஈழத்துக் கல்வெட்டுகளிலும்

இடம்பெற்றன. இவ்வெழுத்துக்கள் பௌத்த மதம் இலங்கைக்கு வருமுன்பே - அதாவது கி.மு. 6ஆம் நூற்றாண்டில் வழக்கிலிருந்தன. பௌத்தம் இலங்கைக்கு வருமுன் ஈழத்தில் நாகர் ஆட்சியும், தமிழி பிராமி எழுத்தும் இருந்தன. இவை மட்டக்களப்பிலும் இருந்தன.

## 9. விஜயனின் வருகையின்போது இலங்கையின் நிலை

விஜயன் கி.மு. 543இல் இலங்கைக்கு வந்ததாக ''மகாவம்சத்தில்'' குறிப்பிடப்பட்டுள்ளது. அக்காலத்தில் பௌத்தமதம் இலங்கையில் இல்லை. [பௌத்தமதம் தேவநம்பியதீசன் காலத்தில்தான் (அதாவது கி.மு.3ஆம் நூற்றாண்டு) இலங்கைக்கு வந்தது என்பது யாவரும் அறிந்த விடயம்].

எனவே விஜயன் இலங்கை வந்தபோது, இலங்கையில் திராவிடர் ஆட்சி நிலவியது என்பது பெறப்படுகிறது. இத்திராவிடர்களை இயக்கர், நாகர் எனவும் அவர்கள் ராட்சதர்கள் எனவும் மகாவம்சம் குறிப்பிட்டாலும், உண்மையில் அவர்கள் திராவிடர்கள் என்பதும், நாகரிகம் அடைந்த மக்கள் என்பதும், வரலாற்றுச் சான்றுகளால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இவர்களின் மன்னனாக ஒரு காலத்தில் சிறந்த சிவபக்தனான இராவணன் இருந்தான் என்பதும் வரலாற்றுத் தகவலாக இன்று ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

விஜயன் மணம் புரிந்ததாகச் சொல்லப்படும் குவேனி தமிழ் பண்புள்ளவள் என்பதற்கு ஒரே சான்று அவள், தனது கணவனான விஜயனைத் தெய்வமாக மதித்து அவனுக்கு அடங்கி நடந்தாள் என்பதுதான். அதன் காரணமாகவே விஜயன் அவளைச் சுலபமாக ஏமாற்றி, இரு பிள்ளைகளுடன், அவளை நாடு கடத்தவும் முடிந்தது. அக்காலத்தில் இலங்கை

எங்கும் தமிழ் அரசுகள் சிறு சிறு இராச்சியங்களாக இயங்கி வந்தன. நாம் ஏற்கனவே குறிப்பிட்டது போல அவை நாகர்முனை (திருக்கோயில் பிரதேசம்), உன்னரசுகிரி (உகந்தைப் பிரதேசம்), மட்டக்களப்பு (சம்மாந்துறைப் பிரதேசம்), மண்முனை (கொக்கட்டிச் சோலைப் பிரதேசம்), எரவில (ஏறவூர் பிரதேசம்), வெருகல் (வாகரைப்பிரதேசம்), திருக்கோணேஸ்வரம் (திருமலைப்பிரதேசம்) ராச்சியங்களாக இருந்தன. அவ்வாறே யாழ்ப்பாணம், மாதோட்டம், கதிர்காமம் முதலிய பிரதேசங்களிலும் தமிழ் இராச்சியங்கள் இருந்தன.

## 10. கதிர்காம க்ஷத்திரிய வம்சம்

கி.மு. 3ஆம் நூற்றாண்டில் இலங்கைக்கு பௌத்த மதம் வந்த பின்னரும் கூட, இலங்கையின் வடக்கு, கிழக்கு, தெற்குப் பிரதேசங்களில் தமிழ் மன்னர்களின் ஆட்சி நிலை பெற்றிருந்தது. இவர்களில் முக்கியமாகக் குறிப்பிடப்பட வேண்டியவர்கள் கி.பி. 4ஆம் நூற்றாண்டளவில் தென்னிலங்கையில் புகழ்பெற்றிருந்த க்ஷத்திரிய மன்னர் பரம்பரையாகும். இவர்களைப் பற்றிய குறிப்புகள் மகாவம்சத்திலும் இடம் பெறுகின்றன.

கி.பி. 429-455 வரை இவர்கள் ஆட்சி செழிப்புற்றிருந்தது. பாண்டு, பாரிந்த, குட்டபாரிந்த, திரதா, தாதிய, பீத்யா என்போர் ஒருவர்பின் ஒருவராக ஆட்சி செய்தனர். கதிர்காமப் பிரதேசம் முழுவதும் இவர்கள் ஆட்சியிலிருந்தது. கதிர்காமக் கல்வெட்டுக்கள் பல இவர்களது ஆட்சிக்குச் சான்றாக அமைகின்றன.

திருக்கோயிலுக்கு அண்மையில் உள்ள கிரியாறலபத்து என்னும் இடத்திலும் இவர்களைப் பற்றிய கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. பாரிந்தனின் கல்வெட்டு ஒன்று

புத்தசமயத்துக்கு அவன் அளித்த நன்கொடை பற்றிக் கூறுகிறது. இன்னொரு கல்வெட்டு இவனுடைய மனைவி கட்டிக் கொடுத்த பௌத்த மடம் பற்றிக் கூறுகிறது. இதிலிருந்து தமிழ்மன்னர்கள் பௌத்த மதத்திற்கு அளித்த ஆதரவை அறிந்து கொள்ளலாம். (இக்காலகட்டத்தில் தமிழர்கள் மத்தியிலும் பௌத்த மதம் பரவியிருந்தது என அறியமுடிகிறது).

கதிர்காமப் பிரதேசம் முழுவதும் இந்துக்களான தமிழ் மக்கள் வாழ்ந்திருந்தமையால், கதிர்காமத்தலம் இவர்களது முக்கிய வழிபாட்டுத்தலமாக இருந்தது.

துட்டகைமுனு எல்லாளனைப் போரில் வென்றபின் கதிர்காமக் கோயிலுக்கு, நேர்த்திக்கடன் நிறைவேற்றுவதற்காக, திருப்பணி செய்தான் என மகாவம்சத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 11. மட்டக்களப்பு மன்னர்கள்

கி.மு. 200 முதல் கி.பி. 1200 வரை மட்டக்களப்பு, மண்முனை, திருக்கோயில் பிரதேசங்களில் ஆட்சி புரிந்த மன்னர் பற்றிய விபரங்கள் மட்டக்களப்பு மான்மியம் என்ற வரலாற்று நூலில் குறிப்பிடப்பட்டுள்ளன. மட்டக்களப்பு மான்மியம் என்பது மகாவம்சம் போலவே கற்பனை கலந்து எழுதப்பட்டிருந்தாலும், சிற்சில விபரங்கள், ஏனைய வரலாற்றுச் சான்றுகளுடன் ஒத்துப் போகின்றன. பல விடயங்கள் மகாவம்சம் குறிப்புகளுடனும் ஒத்துப் போகின்றன. ஆனால் அதில் உள்ள கால வரையறை கலி ஆண்டில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றை கிறிஸ்து ஆண்டுக்கு மாற்றும் போது சில ஆண்டுகள் மகாவம்சம் கூறும் ஆண்டுகளுடன் ஒத்துப் போகவில்லை (கலியாண்டு கி.மு. 3102ல் ஆரம்பமாகிறது).

எவ்வாறாயினும் மேற்குறித்த மன்னர்கள் பற்றிய விபரத்தை இப்போதைக்கு, "மட்டக்களப்பு மான்மியத்"தை ஆதாரமாகக் கொண்டே நாம் ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது. அவ்விபரம் வருமாறு (இவர்கள் மட்டக்களப்பை தலைநகராகக் கொண்டு ஆண்டவர்கள்):

| மன்னர் பெயர் | வம்சம் | தலைநகர் | கலிகணக்கு | கிறிஸ்து ஆண்டு |
|---|---|---|---|---|
| ஸ்ரீகுலசேனன் | கலிங்கன் | மட்டக்களப்பு | 2790 | கி.மு. 312 |
| சுஉத்திகன் | கலிங்கன் | மட்டக்களப்பு | 2806 | கி.மு. 296 |
| சேனன் | கலிங்கன் | மட்டக்களப்பு | 2868 | கி.மு. 234 |
| ரஞ்சலன் | கலிங்கன் | மட்டக்களப்பு | 3020 | கி.மு. 82 |
| ஸ்ரீகுலன் | கலிங்கன் | மட்டக்களப்பு | 3020 | கி.மு. 82 |
| வாசுஉரன் | கலிங்கன் | மட்டக்களப்பு | 3070 | கி.மு. 32 |
| பிரசன்ன சித்து | கலிங்கன் | மட்டக்களப்பு | 3110 | கி.பி. 08 |
| தாசகன் | கலிங்கன் | மட்டக்களப்பு | 3150 | கி.பி. 48 |
| தனசேனன் | கலிங்கன் | மட்டக்களப்பு | 3340 | கி.பி. 238 |
| தினகரசேனன் | கலிங்கன் | மட்டக்களப்பு | 3370 | கி.பி. 268 |
| பிரசேது | கலிங்கன் | மட்டக்களப்பு | 3420 | கி.பி. 318 |
| அமரசேனன் | கலிங்கன் | மட்டக்களப்பு | 3466 | கி.பி. 364 |
| குணசிங்கன் | கலிங்கன் | மட்டக்களப்பு | 3500 | கி.பி. 398 |
| அதிசுதன் | கலிங்கன் | மண்முனை | 3530 | கி.பி. 428 |
| வங்கலாடன் | கலிங்கன் | மட்டக்களப்பு | 3735 | கி.பி. 633 |
| குமாரசிங்கன் | கலிங்கன் | மட்டக்களப்பு | 4080 | கி.பி. 978 |
| குகதிரன் | கலிங்கன் | மட்டக்களப்பு | 4250 | கி.பி. 1013 |
| கதிர்சுதன் | கலிங்கன் | மட்டக்களப்பு | 4115 | கி.பி. 1148 |
| மதிசுதன் | கலிங்கன் | மட்டக்களப்பு | - | - |

## 12. கிழக்கிலங்கையில் ஆண்ட ஏனைய தமிழ் மன்னர்கள்

கிழக்கிலங்கையில், மட்டக்களப்பைத் தவிர, உன்னரசுகிரி, நாகர்முனை, தோப்பாவை முதலிய பெரு நகர்களைத் தலைநகர்களாகக் கொண்டு ஆண்ட மன்னர்கள் பற்றிய விபரங்களும் மட்டக்களப்பு மான்மியத்தில் உள்ளன. அவ்விபரம் வருமாறு :

| மன்னர் பெயர் | வம்சம் | தலைநகர் | கலிஆண்டு | கிறிஸ்து.ஆண்டு |
|---|---|---|---|---|
| மண்டுநாகன் | நாகர் | நாகர்முனை (திருக்கோயில்) | 2709 | கி.மு. 393 |
| கொட்டாயன் | நாகர் | திருகோணமலை | 3110 | கி.பி. 08 |
| கொட்டியன் | நாகர் | கொட்டியாபுரம் | 3340 | கி.பி. 238 |
| புவனேக கயபாகு | கலிங்கர் | உன்னரசுகிரி | 3130 | கி.பி. 28 |
| மனுநேய கயபாகு | கலிங்கர் | உன்னரசுகிரி | 3150 | கி.பி. 48 |
| ஆடக சௌந்தரி | கலிங்கர் | உன்னரசுகிரி | 3180 | கி.பி. 78 |
| சிங்ககுமாரன் | கலிங்கர் | உன்னரசுகிரி | 3370 | கி.பி. 268 |
| ஶ்ரீசிங்கன் | கலிங்கர் | உன்னரசுகிரி | 3420 | கி.பி. 318 |
| பானுசிங்கன் | கலிங்கர் | உன்னரசுகிரி | | |
| மாகோன் | கலிங்கர் | தோப்பாவை (பொலன்னறுவை) | 4250 (மட்.மான்மியம் கூறுவது) | கி.பி. 1215 |
| வரதகுணன் | கலிங்கர் | தோப்பாவை | 4290 | கி.பி. 1188 |
| மாந்தசேனன் | கலிங்கர் | தோப்பாவை | 4640 | கி.பி. 1538 |
| எதிர்மன்னசிங்கன் | கலிங்கர் | தோப்பாவை | 4640 | கி.பி. 1538 |

இவர்களைத் தவிர வேறு பல மன்னர்கள், மாகோனுக்குப் பின், மட்டக்களப்பு, தோப்பாவை, உன்னரசுகிரி,

முதலிய இடங்களிலிருந்து ஆட்சி செய்துள்ளனர். அவ்வாறான சிலரது பெயர்கள் வருமாறு : தருமசிங்கன் (மட்டக்களப்பு), தினசிங்கன் (மட்டக்களப்பு - கலி 4820), குமாரசிங்கன் (மட்டக்களப்பு - கலி 4080), நாதன் (மட்டக்களப்பு - கலி 4780), அணிகங்கன் (தோப்பாவை - கலி 4820) இவர்கள் சிங்களத் தொடர்புடையவர்களாகவும் - சிலசமயம் சிங்கள ஆட்சிக்குட்பட்டவர்களாகவும் இருந்திருக்கின்றனர். இவர்களது ஆட்சியாண்டுகளும் குளறுபடியாக உள்ளன. எனவே இவர்கள் பற்றி மேலும் ஆதாரங்கள் கிடைக்க வேண்டும்.

## 13. பட்டிப்பளை நகர்

தற்போது கல்லோயாத் திட்டம் உருவாக்கப்பட்டு அம்பாறை, இங்கினியாகலை என்ற பெயர்கள் வழங்கப்பட்டிருக்கும் பிரதேசம் ஒரு காலத்தில், தமிழ்ப் பிரதேசமாக இருந்தது. தற்போது கல்லோயா என அழைக்கப்படும் நதியின் பெயர் பட்டிப்பளை ஆறு என்பதாகும். இந்நதிப்படுகையில் பல தமிழ்க் கிராமங்கள் அமைந்திருந்தன. மல்வத்தை, மல்லிகைத்தீவு, இறக்காமம் முதலியவை இவற்றுள் அடங்கும். இங்கிருந்த பல ஆலயங்கள் அழிந்த இடிபாடுகள் இன்றும் காணப்படுகின்றன.

இலங்கை வரலாற்றில், தென்னிலங்கையில் இருந்த பல தமிழ் ராச்சியங்களின் பெயர்கள் காணப்படுகின்றன. சந்தன காமம், சாகாமம், சுங்கமான் தாடகிரி முதலியவை அவற்றுள் அடங்கும். இவை யாவும் பட்டிப்பளை ஆற்றுப் பிரதேசத்தில் அமைந்துள்ளன.

பண்டைய மட்டக்களப்பு (சம்மாந்துறை, வீரமுனைப் பிரதேசம்), உன்னரசுகிரி (உகந்தைப் பிரதேசம்) முதலியவை இப் பட்டிப்பளை ஆற்றுப்

படுகையை அண்மிய பிரதேசங்களாக இருப்பதை நாம் அவதானிக்கலாம்.

கதிர்காம க்ஷத்திரியர்களின் ஆட்சிக்காலத்தில், கதிர்காமம், மகாகம (திசமகரகம) முதலிய பிரதேசங்களில் தமிழ் ஆட்சி நிலவியதை முன்னர் குறிப்பிட்டோம். அதன் தொடர்ச்சியாகப் பல சிற்றரசுகள் உருவானது இயல்பானதே. இவை யாவும் பட்டிப்பளை ஆற்றுப் பிரதேசத்தில் இடம் பெற்றிருந்தன. சுருங்கச் சொன்னால் கி.பி. 3ம், 4ம் நூற்றாண்டு முதல் ராஜரட்டை, உறுகுணை ரட்டைப் பிரதேசங்கள் யாவும் தமிழர் ஆட்சியில் இருந்தன எனலாம். இங்கிருந்த தமிழ் ராச்சியங்கள் மங்கி மறைந்துபோனதுடன், இந்த நூற்றாண்டில், அப்பிரதேசத்துக்கு புதிய பெயர் சூட்டி, அப்பிரதேசங்களின் வரலாற்றை முற்றாக மறைத்து விடும் நிலை ஏற்பட்டது மிகவும் துரதிர்ஷ்டமானதே.

## 14. சோழர் ஆட்சிக்காலத்தில் கிழக்கிலங்கை

பல்வேறு காரணங்களினால் காலத்துக்குக் காலம், தென்னிந்தியாவில் இருந்து, இலங்கை மீது படையெடுப்புகள் நிகழ்ந்துள்ளன. நாடு பிடிக்கும் நோக்கத்தினால் இவை ஏற்படவில்லை. மாறாக, இழந்து போன ஆட்சியுரிமையை மீட்பதற்கும், சிங்கள மன்னர் மத்தியில் பிரச்சினைகள் தோன்றும் போதும் இத்தகைய படையெடுப்புகள் நிகழ்ந்துள்ளன. அவ்வகையில் சோழ, பாண்டிய, கலிங்க படையெடுப்புகள் குறிப்பிடத்தக்கவை.

புகழ்பெற்ற ராஜராஜசோழன் (கி.பி. 985-1014) காலத்தில் இலங்கை மீது சோழப்படையெடுப்பு நிகழ்ந்தது. இலங்கையின் பெரும் பகுதி சோழர் ஆட்சிக்குக் கீழ் வந்தது, இலங்கையை சோழநாட்டின் பத்தாவது பகுதியாக சோழமண்டலம் ஆக்கி,

அதற்கு மும்முடிச் சோழமண்டலம் என்ற பெயரும் இடப்பட்டது. கி.பி. 1017 முதல் 1070 வரை இலங்கையில் சோழர் ஆட்சி நீடித்தது.

இக்காலத்தில், பொலன்னறுவையில் பல சிவதேவாலயங்கள் அமைக்கப்பட்டன. கிழக்கிலங்கையில் சோழர்களது ஆட்சிக்கரம் நீண்டது. அப்போது கிழக்கிலங்கையில் நிலை பெற்றிருந்த கலிங்க மக்களை சோழர்கள் துன்புறுத்தினர். சோழர்கள் பொலன்னறுவையிலிருந்து ஆட்சி செய்த போதும், மட்டக்களப்புப் பிரதேசத்திலோ, தென்னிலங்கையிலோ இவர்க்ள் ஆட்சி நிலவியதற்கான சான்றுகள் எதுவும் கிடைக்கவில்லை. அது மட்டுமல்ல, பொலன்னறுவை, அனுராதபுரம், மாதோட்டம், கந்தளாய் ஆகிய பிரதேசங்களில், சோழர்கள் அமைத்த சிவதேவாலயங்கள் இருந்தபோதும், மட்டக்களப்பு, மண்முனை, உன்னரசுகிரி, நாகர்முனை முதலிய தமிழ்ப் பிரதேசங்களில் இவர்கள் அமைத்த ஆலயங்கள் எதுவும் இருந்ததாகத் தெரியவில்லை. மட்டக்களப்பின் தனித்துவத்துக்கு இது ஒரு சான்றாகும்.

முதலாம் விஜயபாகு (1059 - 1114) காலத்தில் சோழர்கள் இலங்கையிலிருந்து முற்றாக வெளியேற்றப்பட்டனர். கி.பி. 1070ல் இலங்கையில் சோழர் ஆட்சி முடிவுற்றது.

### 15. மாகோன் குளக்கோட்டன் ஆட்சி

சோழர் காலத்தில் கிழக்கிலங்கையில் வாழ்ந்த கலிங்க மக்களுக்கு ஏற்பட்ட துன்புறுத்தல்களை அறிந்து அவற்றைத் தடுப்பதற்காக கலிங்க மாகோன் (கி.பி. 1215-1255) பெரும்படை திரட்டிக் கொண்டு இலங்கை வந்தான்.

இவன் பொலன்னறுவையைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செலுத்தினான். இவன் காலத்தில், கலிங்க மக்கள் சோழர்களின் துன்புறுத்தல்களிலிருந்து மீட்கப்பட்டனர். சோழர்களுக்குத் துணையாக நின்ற சிங்கள மன்னர்கள் விரட்டியடிக்கப்பட்டனர்.

மாகோனுக்கு வலதுகரமாக அவனது உபராஜனான சோழகங்கதேவன் (குளக்கோட்டன்) செயற்பட்டான். இருவரும் 40 ஆண்டுகள் வரை திருகோணமலை முதல் திருக்கோயில் வரை நிலையான ஆட்சி செய்தனர். மாகோன், மட்டக்களப்பு, மண்முனை, திருக்கோயில் பிரதேசத்திலும், குளக்கோட்டன் திருகோணமலைப் பிரதேசத்திலும் ஆட்சி செய்தனர். பல கோயில்களுக்குத் திருப்பணி செய்தனர்.

இவர்கள் தமது பெயர்களை முறையே விஜயபாகு, ஜயபாகு என வைத்துக் கொண்டு, சிங்களப் பிரதேசம் முழுவதிலும் ஆட்சி செலுத்தினர். விஜயபாகு என்ற பெயரில் மாகோன் திருக்கோயில் ஆலயத்துக்கு நிபந்தம் வழங்கிய கல்வெட்டு ஒன்றும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதன் முழுவிபரம் எனது மாகோன் வரலாறு நூலில் (பக். 186) இடம் பெறுகிறது.

அவ்வாறே குளக்கோட்டனைப் பற்றிய கல்வெட்டு ஒன்று திருகோணமலையில் கண்டுபிடிக்கப்பட்டது. இக்கல்வெட்டு பற்றிய முழுவிபரம் எனது 'குளக்கோட்டன் தரிசனம்' நூலில் இடம்பெறுகிறது. சோழர்களைப் போலவோ, பாண்டியர்களைப் போலவோ அல்லாது மாகோன் இலங்கையில் 40 வருடங்கள் வரை நிலையான ஆட்சி மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## 16. பாண்டியர் ஆட்சிக்காலத்தில் கிழக்கிலங்கை

மாகோனை இலங்கையிலிருந்து துரத்துவதற்குச் சிங்கள மன்னர்கள் பலர் கூட்டுச் சேர்ந்து பகீரத முயற்சிகளை மேற்கொண்டனர். ஈற்றில் இரண்டாம் பராக்கிரமபாகு (1236-1271) காலத்தில் மதுரையில் ஆட்சி செய்த பாண்டிய மன்னர்களின் உதவி பெற்று அவனை வெளியேற்றினர் (கி.பி. 1256). இம்முயற்சியில் சகோதரர்களான ஐந்து பாண்டிய மன்னர்கள் ஒன்று சேர்ந்து செயற்பட்டனர். இவர்களுடன், சிங்கள மன்னர்களின் படைகளும் சேர்ந்து வியூகம் அமைத்ததில், மாகோன் பொலன்னறுவையை விட்டு வெளியேறி யாழ்ப்பாணம் சென்று விஜய கலிங்கச் சக்கரவர்த்தி என்ற பெயருடன் ஆட்சி செலுத்தினான். (மாகோன் வரலாறு பக். 145).

மாகோனுக்குப் பின் கிழக்கிலங்கையில் பாண்டியர் ஆட்சி சிலகாலம் நடைபெற்றது. இவ்வாட்சிக் காலத்தில், மட்டக்களப்புப் பிரதேசத்தில் குறிப்பிடத்தக்க செயற்பாடுகள் எதுவும் இருந்ததாகத் தெரியவில்லை. ஆனால் சில சைவ ஆலயங்களில் திருப்பணிகள் நடைபெற்றிருப்பதை அறிய முடிகிறது. கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயம், திருக்கோயில் சித்திரவேலாயுதர் ஆலயம் ஆகியவற்றின் கட்டட அமைப்பு, பாண்டியர் பாணிக்குரியது என கலாநிதி இந்திரபாலா கூறுகிறார்.

தான்தோன்றீஸ்வரத்தில் இரு சிற்பத்தேர்கள் உள்ளன. இச்சிற்ப வேலைகளும் பாண்டியர் காலப் பாணிக்குரியவை என்பர். சோழர் காலத்தைப் போலவே பாண்டியர் காலத்திலும், கிழக்கிலங்கையில், இவர்களது ஆட்சிபற்றி கூறக்கூடிய சான்றுகளோ எச்சங்களோ இல்லை.

முதலாம் மாறவர்மன் குலசேகர பாண்டியன் (1268-1318) இலங்கை மீது படை எடுத்து கி.பி. 1284ல் இலங்கையை வெற்றி கொண்டான். 1284 முதல் 1304 வரை இலங்கை பாண்டியர் ஆட்சிக்குட்பட்டிருந்தது. பின்னர் 3ம் பராக்கிரமபாகு (கி.பி. 1303-1325) பாண்டிய மன்னருடன் சமாதானம் பேசி தன் ஆட்சியை மீட்டெடுத்தான்.

## 17. கண்டி மன்னர் ஆட்சிக்காலத்தில் கிழக்கிலங்கை

பாண்டியருக்குப்பின், தமிழகத்தில் நாயக்கர் ஆட்சி ஏற்பட்டது. இலங்கையிலும் இவர்களது செல்வாக்கு நீண்டது. கண்டியைத் தலைநகராகக் கொண்டு சிங்கள மன்னர்கள் ஆண்டகாலத்தில் மதுரை நாயக்க வம்சத்துடன் இவர்களுக்கு இறுக்கமான தொடர்பு ஏற்பட்டது. அது திருமணத் தொடர்பாகவும் மலர்ந்தது.

கண்டி மன்னர்கள் சிலரது விபரம் வருமாறு:

1.) செனரதன் (கி.பி. 1604-1635)

2.) ராஜசிங்கன் - II (கி.பி. 1635-1687)

3.) விமலதர்மசூரியன் - II (1687 -1707)

4.) நரேந்திர சிங்கன் (1707-1739)

5.) ஸ்ரீ விஜயராஜசிங்கன் (1739-1747)

6.) கீர்த்தி ஸ்ரீராஜசிங்கன் (1747-1782)

7.) ராஜாதி ராஜசிங்கன் (1782-1798)

8.) ஸ்ரீ விக்கிரமராஜசிங்கன் (1798-1815)

இவர்களில் கண்டியின் கடைசி மன்னனான ஸ்ரீவிக்கிரமராஜசிங்கனின் மறுபெயர் கண்ணுசாமி என்பதாகும்.

(ஸ்ரீவிஜயராஜசிங்கன் முதல் ஸ்ரீவிக்கிரமராஜசிங்கன் வரையுள்ள நால்வரும் நாயக்கர் வம்சத்தைச் சேர்ந்தவர்கள்).

கண்டி மன்னர்கள் காலத்தில் கிழக்கிலங்கை, அவர்களது ஆட்சியின் கீழ் - பெயரளவில்தான் இருந்தது.

இவர்கள் அடிக்கடி மட்டக்களப்புப் பிரதேசங்களுக்கு வருகை தருவது வழக்கமாக இருந்தது. பழுகாமத்திலிருந்து கண்டி செல்லும் பாதை 'கண்டியன்கட்டு' என இப்போது வழங்கப்படுகிறது. பழகாமம், பெரிய போரதீவு, கழுதாவளை, கொக்கட்டிச்சோலை, தாந்தாமலை முதலிய இடங்களில் காணப்படும் சில பௌத்த எச்சங்களும் இதை உறுதி செய்கின்றன.

மட்டக்களப்பு மான்மியம் பாடல் வரி ஒன்று விமலதர்ம சூரியனை விளித்துப் பாடுவதாக உள்ளது. (ஆனாலும் மட்டக்களப்புப் பிரதேசங்களின் ஆட்சிப் பொறுப்பு வன்னிமைகளிடமே இருந்தது).

இவ்வாறே ''மழைக்காவியம்'' என்னும் பாடலில் (தம்பிலுவில் கண்ணகி அம்மன்) 15வது பாடல் கண்டி மன்னனை வாழ்த்திப் பாடுகிறது. மற்றொரு நாட்டார் பாடலான உடுகுச்சிந்து பாடலில் 56வது பாடல் "எழில் பெறு ராஜசிங்கராசன்'' எனக் குறிப்பிடுகிறது.

இவற்றிலிருந்து, கண்டிமன்னர் ஆட்சி பெயரளவில் கிழக்குப் பிரதேசத்திலிருந்தது எனலாம்.

பொன்விழா மலர் - இலங்கை வங்கி சிறப்பு மலர் - 1999.

# பூர்வீக மட்டக்களப்பு பிரதேசம்

## இலங்கை வரலாறும் மட்டக்களப்பும்

தமிழகத்தின் வரலாறு பெருங்கற்காலப் பண்பாட்டுடன் (Megalithic) ஆரம்பமாவது போல ஈழ நாட்டின் வரலாறும் பெருங்கற்காலத்துடன் ஆரம்பமாகின்றது. புவிச்சரிதவியல் (Geology), தாவரவியல் (Biology), விலங்கியல் (Zoology), கல்லியல் (Lithology), மானுடவியல் (Anthropology), தொல்பொருளியல் (Archaeology) போன்ற பல அறிவியல் துறைகளின் துணை கொண்ட ஆய்வுகளினடிப்படையிலே ஈழவரலாறு என்பது -

(i) வரலாற்றுக்கு முற்பட்ட காலம் (Pre-historic Period)

(ii) வரலாற்றுக்கு இடைக்காலம் (Proto-historic Period)

(iii) வரலாற்றுக் காலம் (Historic Period)

என வகைப்படுத்தப்பட்டு மிக நீண்டகாலத் தொன்மையுடையது என நிறுவப்பட்டுள்ளது. ஈழ வரலாறு எத்தகைய தொன்மை வாய்ந்ததோ அத்தகைய தொன்மையுடையது எமது மட்டக்களப்பு. குறிப்பாக கிழக்கிலங்கைப் பிரதேசம். இதனைப் பல ஆய்வுகள் தெளிவாகக் காட்டுகின்றன.

இலங்கை வரலாறு கூறும் "மகாவம்சம்" என்னும் நூலின்படி கலிங்க நாட்டிலிருந்து விஜயன் இலங்கைக்கு வருவதுடன் (கி.மு. 543) இலங்கை வரலாறு ஆரம்பமாகின்றது.

கி.பி. 6ஆம் நூற்றாண்டில் மகாநாம தேரர் என்பவரால் எழுதப்பட்டதாகச் சொல்லப்படும் இந்நூலில் சிங்கள - பௌத்த மன்னர்களின் வரலாறு மட்டுமே கூறப்பட்டுள்ளது. இந்நூலில் கர்ணபரம்பரைக் கதைகளும் (Myth) பொய் புரட்டுகளும் தமிழ் மன்னர்களுக்கு எதிரான செய்திகளும் நிரம்பி உள்ளன.

இத்தகைய பின்னணியில் தமிழர் வரலாற்றையும் தமிழ்ப் பிரதேசங்களின் வரலாற்றையும் அறிவதற்கு நாம் பிற சான்றாதாரங்களையே நாடவேண்டியுள்ளது. அத்தகைய சான்றாதாரங்களைக் கொண்டு பின்வரும் உண்மைகளை நிறுவ முடியும்:

(i) விஜயன் வருமுன்பே இலங்கையின் பூர்வ குடிகள் வாழ்ந்திருக்கின்றனர்.

(ii) இவர்கள் ஓஸ்ரலோயிட் எனப்படும் ஆதித்திராவிடர்கள்.

(iii) கிழக்கிலங்கையில் குறிப்பாக மட்டக்களப்புப் பிரதேசத்தில் இவர்கள் இன்றும் வாழ்கின்றனர்.

## பூர்வீக மட்டக்களப்புப் பிரதேசம்

1963ஆம் ஆண்டு வரை கிழக்கிலங்கையில் மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய இரு மாவட்டங்கள் மட்டுமே இருந்தன. மட்டக்களப்பு மாவட்டம் வடக்கே வெருகல் முதல் தெற்கே குமண வரை பரந்திருந்தது. 1963-ல் மட்டக்களப்பு மாவட்டத்தின் ஒரு பகுதி (கல்முனை முதல் குமண வரையுள்ள பிரதேசம்) அம்பாறை மாவட்டம் என தனியாகப் பிரிக்கப்பட்டது. இப்பிரிவினைக்கு முந்திய பிரதேசம் மட்டக்களப்பு மாவட்டம் எனப்படுவது. ஆனால் அதற்கும் முன்பு வரலாற்றுக் காலங்களில் மட்டக்களப்புப் பிரதேசம் என்பது றோகணை இராச்சியத்தின் பல இடங்களையும் உள்ளடக்கியதாக

இருந்தது. கதிர்காமம் தொடக்கம் இப்பிரதேசம் விந்தன, வெல்லச, ஊவா போன்ற பகுதிகளையும் உள்ளடக்கியதாகக் காணப்பட்டுள்ளது.

எஸ். பரணவிதான (தொல்லியல் ஆணையாளர்) 1970-ல் வெளியிட்ட Inscriptions of Ceylon என்னும் தொல்பொருளியல் திணைக்கள வெளியீட்டு நூலிலே மட்டக்களப்பு மாவட்டத்தின் பிரதேசங்களை வெருகல் முதல் பாணம வரையுள்ள இடங்களாகக் குறிப்பிட்டுள்ளார்.

இந்நூலில் மட்டக்களப்பில் பிராமிக் கல்வெட்டுக்கள் காணப்படுமிடங்களாக பின்வரும் இடங்களைக் குறிப்பிடுகின்றார்: கோறளைப்பற்று (வாழைச்சேனை), ஏறாவூர் பற்று (ஏறாவூர்), விந்தனைப்பற்று (விந்தனை), மண்முனைப்பற்று (மண்முனை), வேவகம்பற்று (இங்கினி யாகலை), சம்மாந்துறைப்பற்று, பாணமைப்பற்று, அக்கரைப்பற்று. ஆகவே பூர்வீக மட்டக்களப்பு என்னும்போது வெருகல் முதல் கதிர்காமம் வரையிலான பிரதேசமே என்பது தெளிவாகும்.

பார்க்க -

(i) Inscriptions of Ceylon by S. Paranavitana (pp. xiii).

(ii) Ceylon Census Report - 1972.

### மட்டக்களப்பின் வரலாற்றுச் சான்றாதாரங்கள்

மட்டக்களப்பின் உண்மையான வரலாற்றுத் தகவல்களை அறிவதற்குப் பின்வரும் சான்றாதாரங்கள் பெரிதும் உதவுகின்றன:

(i) கற்காலம் பற்றி அறிய உதவும் எச்சங்கள்.

(ii) பெருங்கற்காலத்தைச் சேர்ந்த ஈமத்தாழிகள் புதைகுழி எச்சங்கள்.

(iii) வரலாற்று இடைக்காலத்தைச் சேர்ந்த பிராமிக் கல்வெட்டுக்கள்.

(iv) செப்பேடுகள், ஓலைச்சுவடிகள், வெளிநாட்டார் ஆய்வுகள், குறிப்புகள்.

(v) இந்திய, ஈழ நாணயங்கள் - இவை பற்றிய ஆய்வுக் குறிப்புகள்.

(vi) வரலாற்றுக்கால, பிராமி, கிரந்த, தமிழ், சிங்களக் கல்வெட்டுகள், செப்பேடுகள்.

(vii) மேல்நாட்டு ஆய்வாளரது சில நூல்கள், டயறிக் குறிப்புகள்.

(viii) போர்த்துக்கேய, ஒல்லாந்தர் கால நூல்கள் / அறிக்கைகள்.

(ix) மட்டக்களப்பு மான்மிய ஏட்டுச்சுவடி.

(x) கல்வெட்டுகள் செப்பேடுகளின் விளக்க நூல்கள்.

(xi) 1960க்குப் பின் மட்டக்களப்பில் வெளிவந்த சில வரலாற்று நூல்கள் -

1.) மட்டக்களப்புத் தமிழகம் (1960) - பண்டிதர் மகாவித்துவான் வி.சி. கந்தையா.

2.) குளக்கோட்டன் தரிசனம் (1992) - க. தங்கேஸ்வரி

3.) மாகோன் வரலாறு (1993) - க. தங்கேஸ்வரி

4.) மட்டக்களப்பு முற்குகர் வரலாறு (ஞா. சிவசண்முகம்).

5.) The Land of Letters (Dr. Xavier)

6.) Monograph of Batticaloa (S.O. Canagaretna)

7.) பண்டைய ஈழத்தமிழர் - நா. நவநாயகமூர்த்தி.

8.) மட்டக்களப்பு மக்கள் வாழ்வும் வளமும் - கட்டுரைத் தொகுப்பு - F.X.C. நடராசா.

9.) மட்டக்களப்பு சைவக்கோயில்கள் I, II - வி.சீ. கந்தையா.

இவற்றுள் மட்டக்களப்பு மான்மியம் பற்றிச் சிறிது விளக்க வேண்டும். இந்நூல் மட்டக்களப்பில் 19ஆம் நூற்றாண்டில் எழுந்த ஏட்டுப்பிரதியின் நூற்பதிப்பாக மகாவித்துவான் F.X.C. நடராசா தொகுத்துப் பதிப்பித்த நூலாகும். இந்நூல் 1952-ல் வெளிவந்தது. இத்தலைப்பில் பல ஏடுகள் மட்டக்களப்புக் கிராமங்களில் கிடைக்கின்றன. அவற்றுள் பல இடைச்செருகல்களும் புகுந்திருந்தன. ஏடுகளைப் பிரதி பண்ணிய புண்ணியவான்கள், தத்தமது கைவரிசைகளையும் அதில் கலந்துவிட்டனர். அதனால் இவ்வேடுகளில் பாடபேதங்கள் நிறைய இருந்தன. அமரர் F.X.C. நடராசா, மிகுந்த பிரயாசைப்பட்டு இந்நூலைப் பதிப்பித்தார். (அதன் மறுபதிப்பு மட்டக்களப்பு கலாசாரப் பேரவையால் 2000-ம் ஆண்டில் வெளியிடப்பட்டது).

ஆனால் இதனை ஒரு முழுமையான வரலாற்று நூலாகக் கொள்வதற்கில்லை. இவற்றில் இடம்பெற்றுள்ள பல கற்பனைச் செய்திகளைக் களைந்துவிட்டு பிறவரலாற்றுச் சான்றுகளுடன் ஒத்துப்போகும் தகவல்களை மட்டுமே நாம் வரலாறாகக் கொள்ளலாம்.

## வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் மட்டக்களப்பு

வரலாற்றுக்கு முற்பட்ட கால மட்டக்களப்புப் பற்றி அறிவதற்குப் பிறநாட்டவரின் ஆய்வுக் குறிப்புகள் பெரிதும் உதவுகின்றன. அவற்றுள் பின்வருபவை குறிப்பிடத்தக்கவை:

1. தளபதி றெட் எழுதிய குறிப்புகள் - எழுத்துப் பிரதி (தற்போது பிரிட்டிஷ் மியூசியத்தில் உள்ளது).

மட்டக்களப்பில் Flake கற்களாலான கருவிகள் கிடைக்கப்பெற்றதாக இவர் குறிப்பிடுகிறார். இவை பெருங்கற்காலத்தைச் சேர்ந்தவை.

2. S.J. Taylor எழுதியுள்ள ஒரு கட்டுரை. (Archaeological Survey of Ceylon - Annual Report, December 1946 - Page 48).

3. பிரபல ஆய்வாளர்களான மஜூம்தார், சட்டர்ஜி, செழிக்மன் ஆகியோர் தரும் குறிப்புகள் (மட்டக் களப்பில் ஒஸ்ரலொயிட் (Australoid) என்னும் ஆதிவாசிகள் வாழ்ந்ததாக இவர்கள் குறிப்பிடுகின்றனர்). இவர்கள் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் உலகில் வாழ்ந்த ஆதிவாசிகள் ஆவர்.

4. மேற்படி ஆய்வாளர்களது பின்வரும் நூல்களில் பூர்வீக மட்டக்களப்புப் பிரதேசம் பற்றிய மேலும் பல தகவல்கள் உள்ளன. அந்நூல்களின் விபரம் வருமாறு :

1.) History and Culture of Indian People, Heritage and Life of Ceylon - By Majumdar (Edited by Pusalkar - pp. 8, 40, 235).

2.) The "Veddhas" - by C.G. Sheligman - 1911, Cambridge Publication - pp. 419, 430.

3.) "The Veddhas" - by R.L. Spittel, Vanished Trails.

4.) J.R.A.S. Ceylon, Vol. XXI - pp. 88, Sheligman - 1908.

5.) Ancient Ceylon - An account of the aborigines - Past and the Early Civilization, London 1999. pp. 15.

6.) Veddhas in Transition, Colombo, 1964. pp.11 - 22. by Nandadeva Vihasekara.

**வரலாற்று இடைக்காலத்தில் மட்டக்களப்பு**

சில மேலாய்வுகள் (Exploration) மூலம் இங்கு வாழ்ந்தோர், இயக்கர், நாகர் என பேராசிரியர் பரணவிதான, செழிக்மன் போன்றோர் கூறியுள்ளனர்.

நாகர்கள் கிழக்குப் பிரதேசத்தில் வாழ்ந்தார்கள் என்பதற்கு இங்கு கிடைக்கும் நாகவழிபாட்டு எச்சங்களும் பிராமிக் கல்வெட்டுக்களும் சான்றாகின்றன. அவ்வாறே இப்பிரதேசத்தில் வேரூன்றி நிலைத்துள்ள நாகவழிபாடும் இதை உறுதி செய்கின்றன. கி.மு. 3ஆம் நூற்றாண்டிலே டொலமி எனும் கிரேக்க ஆய்வாளர் குறிப்பிடும் நனிகிரி, நாமதும, நாகபவத்த போன்றன கிழக்குப் பிரதேசத்திலே காணப்பட்ட இடங்கள் என அடையாளம் காணப்படுகின்றன.

கிழக்கின் பழம்பெருமை பெற்ற திருக்கோவில் பண்டு நாகர்முனை எனப்பட்டது. சுற்றியுள்ள பிரதேசம் நாகர்நாடு எனப்பட்டது. சபரகாம எனப்பட்ட சபரகமவில் அமைந்துள்ள கதிர்காமம் இடைக்கற்காலத்தில் புகழ்பெற்ற வழிபாட்டுத்தலமாகும். விந்தியமலைக் காட்டு இனத்துடன் தொடர்புடைய இச்சபர் இனம் உகந்தையிலும் காணப்பட்டனர். இன்றும் காணப்படும் வேடர் வழிபாடும் பாரம்பரியமும் சான்றுகளாகின்றன. கதிர்காமம், உகந்தை, திருக்கோவில், மண்டூர், போரதீவு, தாந்தாமலை, சித்தாண்டி, வெருகல் போன்ற முருகத் தலங்களில் வேல் வழிபாட்டுக்குச் சான்றாகின்றனர்.

இவற்றை பிராமிக் கல்வெட்டுக்களும், இவ்விடங்களில் காணப்பட்ட எச்சங்களும் நிரூபிக்கின்றன.

இம்மக்களின் வழித்தோன்றல்களே வேடர்கள் என்பதும் இம்மக்கள் மத்தியில் வேல், லிங்க, சூல போன்றவை இன்றுவரை தொடர்வதும் நாம் அறிந்த செய்திகள் ஆகும். [The Veddha - by G. Sheligman 1911).

**பெருங்கற்காலப் பகுதியில் மட்டக்களப்பு**

பெருங்கற்காலத்திற்கெனச் சில பண்புகள் உள. குறிப்பிட்ட சில தொல்பொருள் எச்சங்களைக் கொண்டு இக்காலப் பகுதியை உறுதி செய்து கொள்ளலாம்.

சில இடுகாடுகள், ஈமத்தாழிகள், புதைகுழியில் உள்ள பொருட்கள் முதலியன இக்காலப் பகுதிக்குரிய எச்சங்களாகும். இத்தகைய எச்சங்கள், இந்தியாவில் மைசூர், பிரம்மகிரி, ஆதிச்சநல்லூர் முதலிய இடங்களில் கண்டெடுக்கப்பட்டன. ஈமத்தாழிகள் (Coffin / சவப்பெட்டி) சுட்ட களிமண்ணால் ஆனவை. மண்ணால் அரிக்க முடியாதவை. இத்தகைய தாழிகளில் பிரேதங்களை வைத்து அடக்கம் செய்யும் பண்பாடு அக்கால மக்களின் நாகரிகத்தின் சின்னமாகவும் அமைகின்றது. இத்தகைய ஈமத்தாழிகள் சென்னை அரும்பொருட்காட்சியகத்தில் இன்றும் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன.

இதே போன்ற பெருங்கற்கால எச்சங்கள் இலங்கையில் கிழக்குப் பிரதேசத்தில் மட்டுமே கண்டெடுக்கப்பட்டுள்ளன. (புத்தளப் பிரதேசத்தில் உள்ள 'பொன்பரிப்பு' என்ற கிராமத்திலும் இவை கண்டெடுக்கப்பட்டனவாம்).

மட்டக்களப்புப் பிரதேசத்தில் கதிரவெளி, தீகவாபி, உகந்தை, மகாகம (திசமாறாம), கதிர்காமம் முதலிய இடங்களில்

இத்தகைய எச்சங்கள் கண்டெடுக்கப்பட்டன. கதிரவெளியில் 'குரங்கு படை எடுத்த வெம்பு' என்னும் பகுதியில் இத்தகைய இடுகாடுகளும் ஈமத்தாழிகளும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. (Ceylon Journal of Science, Vol. II, Feb. 1928 pp. 94-95). இப்பகுதி மக்களின் அறியாமையாலும், அரசின் அசட்டையாலும் மிக முக்கியமான இவ்வரலாற்றுத் தடயம் பாதுகாத்து வைக்கப்படவில்லை. மிக அண்மையில் திசமகறகமையில் கண்டெடுக்கப்பட்ட இவ்வகை எச்சங்களை ஜெர்மன் பல்கலைக்கழகம் ஆய்வு செய்தது. ஆனால் அதன் பெறுபேறுகள் இங்கு வெளியிடப்படவில்லை.

### பிரமிக் கல்வெட்டுகள் தரும் சான்றுகள்

கி.மு. 3ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 3ஆம் நூற்றாண்டுவரை பிரமிக் கல்வெட்டுகள், ஈழத்தில் வழக்கிலிருந்தன. இக்கல்வெட்டுகள் மலைப்பாறைகளிலும், மலைக்குகைளினுள்ளும் காணப்படுகின்றன. பேராசிரியர் பரணவிதான தொகுத்து வெளியிட்டுள்ள "Inscription of Ceylon" முதலாம் பகுதியில் (1970) இக்கல்வெட்டுகளின் விளக்கங்களைக் காணலாம். இவை இந்துப் பிராமணர்கள் இப்பகுதிகளில் வசித்தமைக்குச் சான்று பகர்கின்றன. இவை குடும்பிகல், பம்பகஸ்தலாவ, பழமெதரகல, பண்டார புதிராஜ்கல, திசமகரகம, மொட்டையாகல, குசலன்கந்த (செங்கலடி) முதலிய பல இடங்களில் பரவலாகக் காணப்படுகின்றன.

கிழக்கிலங்கையில் உள்ள பிராமிக் கல்வெட்டுகள் பற்றி ஆய்வு செய்த பேராசிரியர் பெர்ணாண்டோ, கலாநிதி சத்தமங்கல கருணாரத்தின, ஐராவதம் மகாதேவன் முதலியோர், இக்கல்வெட்டுகள் பௌத்த சகாப்தத்திற்கு முந்தியவை என்றும் இவை 'திராவிட லிபி' என்னும் திராவிட எழுத்தினாலான ஆதி தமிழ் பிராமி எனவும் குறிப்பிடுவர்.

இக்கல்வெட்டுகளில் காணப்படும் உதிரன், சவிரன், சிவ, மகாசிவ, காலசிவ, சிவகுப்த, சிவரக்கித, பத்ம துர்கா, திரு, கடி (காளி) முதலிய பெயர்கள் இப்பகுதிகளில் பௌத்தம் கால்கொள்ள முன்பு திராவிட மக்கள் வாழ்ந்ததை உறுதி செய்கின்றன.

வெருகல் தொடக்கம் கதிர்காமம் வரை பரந்திருந்த பண்டைய மட்டக்களப்புப் பிரதேசமானது (விந்தியம் தொடக்கம் மடகாஸ்கர் வரை விரிந்திருந்த குமரிக்கண்டத்தில் வாழ்ந்திருந்த) பூர்வீக குடிகளான சபரர், புளிஞர் போன்ற ஆதித்திராவிடர்கள் வாழ்ந்த இடமாகும்.

**மட்டக்களப்பு மன்னர்கள் (சுருக்கமான பட்டியல்)**

கி.மு. 200 முதல் கி.பி. 1200 வரை மட்டக்களப்பு, மண்முனை, திருக்கோவில் பிரதேசங்களில் ஆட்சி புரிந்த மன்னர்கள் பற்றிய விபரம், மட்டக்களப்பு மான்மியம் என்னும் நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. மட்டக்களப்பு மான்மியமும் மகாவம்சம் போன்ற கற்பனை கலந்து எழுதப்பட்டிருந்தாலும் பல விடயங்களில் இவ்விரு நூல்களும் ஒத்துப் போகின்றன. ஆனால் கலி ஆண்டில் குறிப்பிட்டுள்ள இக்காலமானது கிறிஸ்து ஆண்டுடன் கணிக்கும்போது ஒத்துப்போகவில்லை. கலி ஆண்டு கி.மு. 3102-ல் ஆரம்பமாகின்றது.

எவ்வாறாயினும் வேறு ஆதாரங்கள் அதிகம் கிடைக்காத நிலையில் மட்டக்களப்பு மன்னர் விபரமானது மட்டக்களப்பு மான்மிய பெயர்களைக் கொண்டே மகாவம்சம் போன்ற ஏனைய ஆவணங்களுடன் ஒப்பிட்டு கணிக்க வேண்டியுள்ளது. அவ்விபரம் வருமாறு :

| மன்னன் பெயர் | வம்சம் | தலைநகர் | கலிகணக்கு | கிறிஸ்துவூண்டு |
|---|---|---|---|---|
| மித்தசேனன் | கலிங்கன் | மட்டக்களப்பு | 2790 | கி.மு. 312 |
| சுஷத்திகன் | கலிங்கன் | மட்டக்களப்பு | 2806 | கி.மு. 296 |
| சேனன் | கலிங்கன் | மட்டக்களப்பு | 2868 | கி.மு. 234 |
| ரஞ்சலன் | கலிங்கன் | மட்டக்களப்பு | 3020 | கி.மு. 082 |
| ஸ்ரீகுலன் | கலிங்கன் | மட்டக்களப்பு | 3020 | கி.மு. 82 |
| வாசுஷரன் | கலிங்கன் | மட்டக்களப்பு | 3020 | கி.மு. 82 |
| பிரசன்னா சித்து | கலிங்கன் | மட்டக்களப்பு | 3110 | கி.பி. 08 |
| தாசகன | கலிங்கன் | மட்டக்களப்பு | 3150 | கி.பி. 48 |
| தனசேனன் | கலிங்கன் | மட்டக்களப்பு | 3340 | கி.பி. 238 |
| தினகரனே | கலிங்கன் | மட்டக்களப்பு | 3370 | கி.பி. 268 |
| பிரசேது | கலிங்கன் | மட்டக்களப்பு | 3420 | கி.பி. 318 |
| அரசனேன் | கலிங்கன் | மட்டக்களப்பு | 3466 | கி.பி. 364 |
| குணசிங்கன் | கலிங்கன் | மட்டக்களப்பு | 3500 | கி.பி. 398 |
| மதிசுதன் | கலிங்கன் | மண்முனை | 3530 | கி.பி. 428 |
| வங்காலடன் | கலிங்கன் | மட்டக்களப்பு | 3735 | கி.பி. 633 |
| குகதிரன் | கலிங்கன் | மட்டக்களப்பு | 4250 | கி.பி. 1148 |
| குமாரசிங்கன் | கலிங்கன் | மட்டக்களப்பு | 4080 | கி.பி. 978 |
| கதிர்சுதன் | கலிங்கன் | மட்டக்களப்பு | 4115 | - |
| மதிசுதன் | கலிங்கன் | மட்டக்களப்பு | - | - |

## கிழக்கிலங்கையின் ஏனைய தமிழ் மன்னர்கள்

கிழக்கிலங்கையில் மட்டக்களப்பு தவிர்ந்த உன்னரசுகிரி, நாகர்முனை, தொப்பனை போன்ற வேறு நகர்களை ஆண்ட மன்னர்களின் விபரங்கள் வருமாறு :

| மன்னன் பெயர் | வம்சம் | தலைநகர் | கலிகணக்கு | கிறிஸ்துஆண்டு |
|---|---|---|---|---|
| மண்டுநாகன் | நாகர் | நாகர்முனை | 2709 | கி.மு. 393 |
| கொட்டாயன் | நாகர் | திருக்கோணமலை | 3110 | கி.பி. 08 |
| கொட்டியன் | நாகர் | கொட்டியபுரம் | 3340 | கி.பி. 238 |
| புவனேகபாகு | கலிங்கன் | உன்னரசுகிரி | 3130 | கி.பி. 28 |
| மனுநேயகயவாகு | கலிங்கன் | உன்னரசுகிரி | 3150 | கி.பி. 68 |
| ஆடகசவுந்திரி | கலிங்கன் | உன்னரசுகிரி | 3180 | கி.பி. 78 |
| சிங்ககுமாரன் | கலிங்கன் | உன்னரசுகிரி | 3370 | கி.பி. 268 |
| ஸ்ரீ சிங்கன் | கலிங்கன் | உன்னரசுகிரி | 3420 | கி.பி. 318 |
| பாதுசிங்கன் | கலிங்கன் | உன்னரசுகிரி | - | - |
| மாகோன் | கலிங்கன் | தொப்பவ | 4250 | கி.பி. 1215 |
| வாலசிங்கன் | கலிங்கன் | மட்டக்களப்பு | 4240 | கி.பி. 1188 |
| மாநதசேனன் | கலிங்கன் | மட்டக்களப்பு | 4640 | கி.பி. 1538 |
| எதிர்மன்னசிங்கன் | கலிங்கன் | மட்டக்களப்பு | 4840 | கி.பி. 1538 |

இவர்களுக்குப்பின் வேறு பல மன்னர்கள் மாகோனுக்குப்பின் மட்டக்களப்பு, தோப்பாவை, உன்னரைரை, சுகிரி முதலிய இடங்களில் இருந்து ஆட்சி செய்துள்ளனர். சிலரது பெயர்கள் வருமாறு : தரும சிங்கன், தினசிங்கன், குமாரசிங்கன், நாதன், அணிகங்கன், இவர்களைத் தொடர்ந்து பல சிற்றரசர்கள் வன்னியர்கள், ஆங்காங்கே ஆட்சி செய்துள்ளனர். ஆனால் ஒழுங்கான சான்றுகள் கிடைக்காதபடியினால் வேறு சான்றுகளை நாட வேண்டியுள்ளது.

### சோழர் ஆட்சிக்காலத்தில் மட்டக்களப்பு

தென்இந்தியாவில் இருந்து இலங்கையில் அடிக்கடி படையெடுப்புகள் நடைபெற்றன. இராஜ இராஜசோழன்,

இராஜேந்திரன் காலத்தில் ஈழத்தின் பெரும்பகுதி சோழர் ஆட்சியின்கீழ் இருந்தது. இலங்கை 10வது சோழ மண்டலமாக்கப்பட்டு மும்முடிச்சோழ மண்டலம் எனப்பட்டது. (கி.பி. 1017 - 1070 வரை). இக்காலப்பகுதியில் பொலநறுவையில் பல இந்து தேவாலயங்கள் கட்டப்பெற்றன. அப்போது கிழக்கிலே திருக்கோவில், கொக்கட்டிச்சோலை முதலிய இடங்களிலும் ஆலயங்கள் அமைக்கப்பெற்றதாக கருத முடியும். இத்தேவாலயங்கள் பின்பு பாண்டியர் காலத்தில் அமைக்கப்பெற்றதாகவும் கூறப்படுகிறது.

தொடர்ந்து பாண்டியர், கலிங்கமாகோன் காலத்திலும் தமிழர் ஆட்சி சிறப்பாகக் காணப்பட்டுள்ளது.

## கலிங்க மாகோன் காலம்

கி.பி. 1215 தொடக்கம் 1255 வரை முழு இலங்கையையுமே ஆட்சி செய்த மாகோன் ஆட்சிக்காலம் வன்னிமை வகுக்கப்பட்டு, ஆலயங்கள் பல புனரமைக்கப்பட்டு, 44 ஆண்டுகள் சிறப்பான நிர்வாகம் செய்தான். திருக்கோயில், கொக்கட்டிச்சோலை, கோணேஸ்வரம், வெருகல், மண்டூர், போரதீவு போன்ற திருக்கோவில்கள் திருப்பணி செய்யப்பட்டு நிபந்தங்கள் வழக்கப்பட்டுள்ளன. இவனுக்கு உதவியாக குளக்கோட்டன், ஜயபாகு என்ற தளபதிகள் உதவி உள்ளனர். குளக்கோட்டனுடைய கல்வெட்டுகள் திருகோணமலையிலும் மாகோனுடைய கல்வெட்டுக்கள் திருக்கோயிலிலும் இன்றும் சான்றாக உள்ளன.

## பாண்டியரின் காலத்தில் மட்டக்களப்பு

பாண்டியர் முழு இலங்கையையும் கைப்பற்றி ஆட்சி செய்யாவிட்டாலும் கிழக்கிலும் தெற்கிலும் குறிப்பிடத்தக்க அளவு இவர்களது ஆதாரங்கள் காணப்படுகின்றன. கதிர்காம

காலம் தொடக்கம் 13ஆம், 14ஆம் நூற்றாண்டு வரை பாண்டியர் செல்வாக்கு மட்டக்களப்பு பிரதேசத்திலே காணப்பட்டுள்ளது. கொண்ணன் கல, போன்ற (ரோகணையின்) பல இடங்ககளில் மீன் சின்னம் பொறிக்கப்பட்ட கல்வெட்டுக்கள் காணப்பட்டுள்ளன. மஜி, கிரந்து, ஆய் போன்ற பாண்டிய குலப்பெயர்கள் இடம்பெறும் பிராமிக் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. கொக்கட்டிச் சோலையில் சிவன் கோயிலில் உள்ள பெரிய தேர் பாண்டியர் காலத்தது எனப்படுகிறது. இதன் சிற்பங்கள் பாண்டியர் காலத்தது என்பது தெளிவானது.

### வரலாற்று முக்கியம் பெற்ற பல கிராமங்களும் சான்றுகளும்

மட்டக்களப்புப் பிரதேசத்தில் ஆய்வுகள் பெருமளவு மேற்கொள்ளப்படாவிட்டாலும் அம்பாறை தொடக்கம் வெருகல் வரை இதற்கான ஆதாரங்கள் காணப்படுகின்றன. பட்டிப்பளை ஆறு எனப்பட்ட நதி கல்லோயா என இன்று பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. எனினும் அப்பிரதேசத்தில் தமிழர்களின் இராஜதானிகள் இருந்தமைக்கு ஆதாரங்கள் உள்ளன. மாளிகைக்காடு எனப்படும் பிரதேசம், சங்கமன் கண்டி, உகந்தை, மல்வத்தை, பழுகாமம், போரதீவு, சம்மாந்துறை, தீகவாவி, திருக்கோயில், தமன, வெருகல், கதிரவெளி, மாகம போன்ற பல்வேறு இடங்கள் முக்கியம் பெறுகின்றன.

குசலன்கந்த, கல்குபொத்தான, மல்வத்த, அம்பாறை, பறகாகல, தமன, குடும்பிகல, குமண, பாணம, மொட்டையகல, சங்கமன்கண்டி, நில்விற்றிகல, தீகவாவி, புத்தங்கல போன்ற மேலும் பல இடங்களில் இக்கல்வெட்டுக்கள் மூலம் ஆதித்திராவிட பண்பாடுகளும், சமயமுறைகளும் மட்டக்களப்புப்

பிரதேசத்திலேயே குறிப்பாக கிழக்கிலங்கையிலே நிலைத்திருந்தன என்பதற்கு ஆதாரமாகின்றன.

கிரேக்க யாத்திரிகளான மெகஸ்தினிஸ் குறிப்பிடும் ``பழகோணி'' என்ற ஈழமக்கள் கிழக்கிலே ஆட்சி செய்த பாண்டியரைக் குறிப்பதாகும். உதியன், உதி போன்ற சொற்கள் சேரவம்சத்தினையும், மஜி, மஜிம கரஜ, அபய, தமரஜ, பாண்டு, பாரிந்த போன்ற சொற்கள் பாண்டிய வம்சத்தினையும் குறிக்கும் பிராமிக் கல்வெட்டுப் பெயர்களாகும்.

மகாவலி கங்கையின் ஒரு கிளையான மதுறு ஓயா பகுதியில் பல தொல்பொருள் தடயங்கள் கிடைத்துள்ளன. ``காலிங்க எல'' என்னுமிடத்திலே மகாவலி கங்கை கிழக்கு நோக்கித் திரும்புகிறது. ``மாதுறைப் பளிங்கு'' என்ற தமிழ்ப் பெயரே இன்று மாதுறு ஓயா எனப்படுவது. இங்கு கள்ளிச்சை, வடமுனை, மாக்கும்பை, மண்பதித்தானை முதலிய தமிழ்க் கிராமங்கள் உள்ளன. இன்று வாகனேரி எனக் குறிப்பிடுவது பண்டுவரகுணாள் ஏரி என வழங்கப்பட்டதென்பர்.

### தொகுப்புரை

1. மட்டக்களப்புப் பிரதேசம் என்பது ஆதியில் அம்பாறை மாவட்டத்தையும் உள்ளடக்கி கதிர்காமம் வரை பரந்திருந்த பிரதேசமாகும். இப்பிரதேசத்தில் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதல் வரலாற்று இடைக்காலம், பெருங்கற்காலம், வரலாற்றுக்காலம் வரை பூர்வ குடிமக்கள் வாழ்ந்தமைக்கான தொல்லியல் எச்சங்கள் கிடைத்துள்ளன.

2. இம்மக்கள் உலகின் பூர்வ குடியினரான 'ஒஸ்ரலொயிட்' இனத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள் வழி வந்தவர்களே

இயக்கர், நாகர் என்போர். அவர்களின் வழித்தோன்றல்களே வேட இனமக்கள்.

3. இலங்கையில் குறிப்பாக மட்டக்களப்பில் ஆதித்திராவிடர்கள் வாழ்ந்தமைக்கான வரலாற்று எச்சங்களுடன் பிராமிக் கல்வெட்டுக்களும் சான்று பகர்கின்றன. பிற வரலாற்று ஆவணங்களும் இதை உறுதி செய்கின்றன.

4. வரலாற்றுக் காலத்திலும், பிற்காலச் சோழர், பாண்டியர் காலத்திலும் தமிழ் மன்னர்கள் இலங்கையில் ஆட்சி புரிந்துள்ளனர். மட்டக்களப்பில் ஆட்சிபுரிந்த தமிழ் மன்னர்கள் விபரம் ''மட்டக்களப்பு மான்மியம்'' என்னும் ஏட்டுப்பிரதியில் இடம் பெற்றுள்ளது.

5. மாகோன் (1215-1255) காலத்தில் மட்டக்களப்பு எழுச்சி பெற்றிருந்தது. மாகோன் வகுத்த வன்னிமை நடைமுறையில் இருந்தது. அக்காலத்தில் சிறப்புப் பெற்றிருந்த பல தமிழ்க் கிராமங்கள் பற்றிய செய்திகளை வரலாற்றுக் குறிப்புகள் நமக்குத் தருகின்றன.

6. இப்பிரதேசத்தின் வரலாற்றுத் தகவல்கள் முறையாக ஆவணப்பதிவு செய்யப்படாமையால், மக்கள் இதை அறிய முடியவில்லை. இன்னமும் தமிழ்மக்கள் மகாவம்சம் கூறும் வரலாற்றுச் செய்திகளையே வரலாற்றுப் பாடமாக கல்விக் கூடங்களில், பல்கலைக் கழகம் உட்பட கற்று வருகின்றனர்.

# பண்டைய மட்டக்களப்பு பிரதேசத்தில் பெருங்கற்கால கலாச்சாரம்

### பெருங்கற்காலம் அறிமுகம்

மனிதத் தோற்றமும், அவனது ஆரம்பகால நடைமுறைகளும், வாழ்க்கை முறையும் கற்காலத்தில் (stone age) தோற்றம் பெற்றன. கற்காலத்தை பழைய கற்காலம் (old stone age), இடைக்கற்காலம் (mesolithic), புதிய கற்காலம் (neolithic), பெருங்கற்காலம் (megalithic) எனப் பகுத்து, ஆராய்வது ஆய்வாளர்களது மரபு. இவற்றிலே முதல் மூன்றும் வரலாற்றுக்கு முற்பட்ட காலப்பகுதியாகும். எனவே அது வரலாற்றுக்கு முற்பட்ட காலம் (Pre-history period) எனப்படும். இடையில் காணப்படுவது வரலாற்று இடைக்காலம் (Proto history period) ஆகும். கடைசியாக உள்ளது எழுத்தாதாரங்களோடு காணப்படும் வரலாற்றுக் காலமாகும் (Historic period).

புதிய கற்காலத்திற்கும், வரலாற்றுக் காலப்பகுதிக்கும் இடையே உலோக காலமும் (Bronze age), பெருங்கற்காலமும் (megalithic) தொடர்ச்சியாகக் காணப்படுகின்றன. பெருங்கற்காலம் எனப்படும் காலப்பகுதியானது ஈழத்தில் மட்டுமல்ல உலகம் முழுவதுமே நாகரீகம் ஏற்பட்ட காலப்பகுதியாகும். கடந்த ஒரு நூற்றாண்டு காலமாக மேற்கொள்ளப்பட்ட மேலாய்வுகளும் (exploration), அகழ்வாராய்ச்சிகளும் (excavations) பெருங்கற்கால நாகரீகத்தின் உண்மைகளை உலகறியத் தந்தன.

**பெருங்கற்காலம் என்றால் என்ன?**

இந்த பெருங்கற்கால கலாச்சாரம் என்றால் என்ன என்பதை நோக்கினால் அது பெரிய கற்களைக் கொண்டு ஈமச்சின்னங்களை அமைத்த காலப்பகுதி எனலாம்.

இக் கலாச்சாரத்தின் முக்கிய தன்மைகள் வருமாறு :

அ.) மக்கட் குடியிருப்புகள்

ஆ.) ஈமச்சின்னங்கள்

இ.) வயல்களும், பயிரிடலும்

ஈ.) குளங்கள்

இவை ஒருங்கே அமையப்பெற்றுக் காணப்பட்டன.

(பண்டைய தமிழகம், சி.க. சிற்றம்பலம், 1981. திருநெல்வேலி - பக்.114) பெருங்கற்காலத்தின் இம் முக்கிய பண்புகளை வெளிப்படுத்துவதாக எமக்குக் கிடைக்கும் எச்சங்கள் சில வருமாறு :

1.) பெரிய கற்களைக் கொண்டு அமைக்கப் பெற்ற ஈமச்சின்னங்கள்.

2.) இறந்தோர் உடலை இட்டு, அடக்கம் செய்த பெரிய தாழிகள்.

3.) இத் தாழிகள் கறுப்பு - சிவப்பு மட்பாண்ட வகையைச் சேர்ந்தமை.

4.) இறந்தோர் உடலுடன் அத் தாழிகளில் காணப்பட்ட இரும்பு, வேறு உலோகப் பொருட்கள், மணிகள் போன்றன.

**நீர்ப்பாசன முறையும், பெருங்கற்காலமும்**

மழைநீரை குளங்களில் தேக்கி வைத்து, அதனை வயல்களுக்கு பாய்ச்சி பயிரிடும் வழக்கம் பெருங்கறகாலத்திலேயே முக்கியம் பெற்றது. இவ்விதம் ஏற்பட்ட பயிர்ச் செழிப்பின் காரணமாக பொருட்கள் உற்பத்தி, மட்பாண்டங்கள், உலோகப் பொருட்கள், மணிவகைகள் போன்றனவும் உருவாக்கப் பெற்றன.

**குழுக்களின் தோற்றமும், அரசுகளும்**

பல குழுக்களாக மக்கள் கூடி வாழும் வாழ்வு ஏற்படத் தொடங்கியது. இத்தகைய குழு முறையானது சிற்றரசுகளாக உருவெடுத்து, அரசுகள் தோற்றம் பெறவும் இந்த பெருங்கற்கால நாகரீகம் வழிவகுத்தது. சுருக்கமாகச் சொன்னால் வரலாற்றுக்கால வளர்ச்சிக்கும், பேரரசுகள் எழுவதற்கும் பெருங்கற்காலமே அடிப்படையாக அமைந்தது எனலாம்.

**இடுகாடுகளும், ஈமச்சின்னங்களும்**

பொதுவாக இறந்தோரைப் புதைக்கும் வழக்கம் புதிய கற்காலப் பகுதியிலே ஏற்பட்டுவிட்டது. அதற்கு முந்திய இடைக்கற்காலம், பழைய கற்காலம் என்பவற்றிலே எவ்விதம் புதைத்தார்கள் என்பதற்கு தெளிவான ஆதாரங்கள் கிடைக்கவில்லை. ஆனால் பெருங்கற்கால இடுகாடுகளும், ஈமத்தாழிகளும் எவ்விதம் இறந்தோர் உடல் அடக்கம் செய்யப்பட்டது என்பதை மட்டுமல்ல, அக்காலத்து மேலும் பல்வேறு அம்சங்களையும் உலகிற்குத் தெளிவாகத் தந்தது. நாகரீகமடைந்த இப்பெருங்கற்கால பண்பாடானது சிரியா, சைபிரஸ், பாலஸ்தீனம், ஸ்பெயின், இங்கிலாந்து, பிரான்ஸ், ஜேர்மனி, வடஇந்தியா, தென்இந்தியா, ஈழம் போன்ற பல

இடங்களிலும் பரவலாகக் காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. பெருங்கற்கால மக்கள் வாழ்க்கையில் வசிப்பிடங்களை அமைப்பதிலும் பார்க்க ஈமச்சின்னங்களை பெரிதாக அமைப்பதிலே அதிக அக்கறை காட்டியுள்ளனர். (பண்டைய தமிழகம் - சி.க. சிற்றம்பலம் - 1991, பக் 114. திருநெல்வேலி).

புதிய கற்கால வழிபாடுகளான ஒருதலை, இருதலை, முத்தலை, சூல வழிபாடுகளில் ஒருதலைச்சூல வழிபாடானது முருக வழிபாட்டுடனும், முத்தலைச்சூல வழிபாடானது கொற்றவை, துர்க்கை, சிவன் என வளர்ந்து ஆண், பெண் வழிபாடுகள் இணைப்பு ஏற்படுகிறது. இது உற்பத்தி இனப்பெருக்கம் முக்கியமானது எனக் கருதப்பட்டது.

ஈழத்திலே பெருங்கற்கால பண்பாடானது வடக்கே - கந்தரோடை, ஆனைக் கோட்டை, மாந்தை, பொன்பரிப்பு (புத்தளம்), கொல்லன் கனத்தை போன்ற இடங்களிலும், மத்திய மாகாணத்திலே மிகுந்தலை, அனுராதபுரம் போன்ற இடங்களிலும், மாத்தளையிலே இபன்கட்டுவவிலும், கிழக்குப் பகுதியிலே பண்டு மாகம எனப்பட்ட திசமகறகம மற்றும் கதிரவெளி உகந்தை, தப்போவ போன்ற இடங்களிலும் காணப்பட்டுள்ளன. மேலும் தென்கிழக்குப் பகுதியிலே காணப்பட்ட துறைமுகங்களான பெந்தோட்ட, ஜின்தோட்ட, களுத்துறை, வெலிகம, மாத்தறை போன்றனவும் பெருங்கற்கால குடியிருப்புக்கள் காணப்பட்ட இடங்களென ஆய்வுகள் எடுத்துக் காட்டுகின்றன. பொதுவாக தீவு முழுவதுமே பரந்து காணப்பட்ட இந்நாகரீகம் தென் இந்தியாவுடன் நெருங்கிய தொடர்பு உடையது என்பதையும் ஆய்வுகள் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன.

1970-ல் கனடிய பல்கலைக்கழக பேராசிரியரான விமலா பெக்ளே (Vimala Begley) தலைமையில் கந்தரோடையில் நடைபெற்ற ஆய்வுகள் மேலும் பல உண்மைகளை வெளிக்கொணர்ந்தன. இங்கு காணப்பட்ட மூன்று படைகளில் (Layers) இருந்து பெருங்கற்காலம் பற்றிய பல உண்மைகளும் வெளிவந்தன.

இங்கு காணப்பட்ட குடியேற்றம் பெருங்கற்காலத்துடன் தான் ஆரம்பமாகிறது என்பன போன்ற உண்மைகள் தெளிவாக்கப்பட்டன. அடுத்த படையிலே கிடைக்கப்பெற்ற மட்பாண்டங்கள் போன்றனவற்றின் மூலம் தொடர்ந்து வந்த வரலாற்றுக்காலம் பற்றிய தகவல்களும் அறியக் கூடியதாக இருந்தது. இவை அனைத்தும் தென் இந்திய இரும்புக்காலத்தை ஒத்தவை என இவ்வாய்வுகள் தெளிவாகக் காட்டின.

**பொன்பரிப்பு எச்சங்கள்**

இதே ஆய்வுக் குழுவினர் 1956-ல் பொன்பரிப்பிலே தொல்பொருளியல் திணைக்கள மூலம் மேற்கொண்ட ஆய்விலே பல தாழிகளைக் கண்டுபிடித்தனர். 3' உயரம் கொண்ட இத்தாழிகள் இறந்தோரைப் புதைக்கும் சவப்பெட்டிகள் எனவும் அறியப்பட்டது. ''தாழிக்காடு'' எனப்படும் இவ்விடத்திலே சுமார் 8,000க்கும் மேற்பட்ட தாழிகள் காணப்பட்டன. இங்கு 10,000-12,000 வரையிலான மக்கட் கூட்டம் வாழ்ந்திருக்க வேண்டுமெனவும் அறிய முடிந்தது.

1980, 1990களில் அனுராதபுரத்திலே கேம்ரியன் பல்கலைக்கழகப் பேராசிரியர் அல்சின், கன்னிங்காம் (Alchin, Coningham) போன்றோரால் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. மாந்தையில் ஜோன் காஸ்வெல் (John Carswell) தலைமையிலும்,

ஈழத்தின் மேலும் பல இடங்களிலும் குறிப்பாக கந்தரோடை, ஆனைக்கோட்டை போன்ற இடங்களிலும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. 1990-ல் ஆனைக்கோட்டை ரகுபதியினாலும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, மேலும் பல உண்மைகள் வெளிக்கொணரப்பட்டன.

ஈழத்தின் தென்பகுதியிலும், தென்கிழக்குப் பகுதியிலும் இதே போன்ற பல ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. பரீஸ் பல்கலைக்கழகப் பேராசிரியரான கோப்பியவாட்சி என்பவரால் மேற்கொள்ளப்பட்ட இவ்வாய்விலே தெதுறு ஓயா, களுத்துறை, ஜின்தோட்ட, வெலிகம போன்ற துறைமுகங்கள் பெருங்கற்கால குடியேற்ற மக்கள் வாழ்ந்த இடங்கள் என்பது தெளிவாக்கப்பட்டது. மேலும் இங்கு கிடைக்கப்பெற்ற கறுப்பு-சிவப்பு மண்பாண்டங்கள், பிராமி எழுத்துக்கள் பொறித்த முத்திரைகள், நாணயங்கள், மணிகள் போன்றன தென் இந்திய எச்சங்களை ஒத்தவையாகக் காணப்பட்டன. கலாநிதி சிரான் டெரனியகல போன்ற தொல்பொருளியலாளர்களாலும் மேலும் செய்யப்பட்ட ஆய்வுகள் மூலம் பெருங்கற்கால உண்மைகள் பற்றிய விளக்கங்கள் கிடைத்தன.

## கிழக்குப் பிரதேசத்தின் பெருங்கற்கால கலாச்சாரம்

ஈழத்தின் பல இடங்களிலும் காணப்பட்ட பெருங்கற்காலச் சின்னங்கள் பெரும்பாலும் தென் இந்தியாவின் எச்சங்களை ஒத்தனவாகவே காணப்பட்டன. தென்னகத்து பெருங்கற்காலச் சின்னங்களை அல்சின் என்பவர் ஆறு பெரும் பிரிவுகளாக வகுத்துள்ளார். இந்திய தொல்பொருளியலாளரான தீக்சிற் அவர்களும் இவற்றை -

கல்மேசைகள் (Dolmen grave)

குடைவரைக் குகைகள் (Rock cut cave)

குத்துக்கற்கள் (menhir)

தொப்பிக்கற்கள் (Cap Stone)

குடைக் கற்கள் (umbrella stone)

கல்லறைகள் (cist grave)

என ஆறாக வகுத்துள்ளார். இதனுள் மேலும் உப பிரிவுகளையும் இவர் வகுத்துள்ளார். இத்தகைய பெருங்கற்கால சின்னங்கள் தமிழகம், கேரளம், கர்நாடகம், சேலம், கோயம்புத்தூர், ஆந்திரா, மகாராஷ்டிரா போன்ற பிரதேசங்களில் பெருமளவு காணப்பட்டன. இவை போன்றே ஈழத்திலும் குறிப்பாக கிழக்குப் பிரதேசத்திலும் காணப்பட்டன. இவற்றில் அனேகமான இடங்கள் கேரளப்பகுதி என்பதும், கிழக்கு மாகாணத்திற்கும் கேரள மாநிலத்திற்கும் உள்ள தொடர்பும் நோக்கற்பாலது.

## கிழக்கிலே பெருங்கற்கால சின்னங்கள் காணப்படுமிடங்கள்

### கதிரவெளி எச்சங்கள்

மட்டக்களப்பு மாவட்டத்திலே வாகரைப் பிரதேசத்தில் கதிரவெளி என்னுமிடத்தில் பெருங்கற்கால சின்னங்களின் கற்சலாகைகளும், தொப்பிக்கற்களும் காணப்பட்டன. இவ்விடம் குரங்கு படை எடுத்த வேம்பு எனப்பட்டது. தென் இந்தியாவில் கேரளம், புதுக்கோட்டையில் இவ்விரு காடுகள் "குரங்குப்பாடை" "குரங்குப்பட்டடை" எனக் குறிப்பிடும் வழக்கம் காணப்பட்டுள்ளது. குரங்குப் பட்டடை என்ற சொல்– இறந்தோர்க்கு தரையின் கீழ் படுக்கை என்ற பொருளைக் கொண்டது. இது பின்னர் குரங்குப்பாடை அல்லது குரங்குப்பட்டடை என திரிபுபடலாயிற்று.

இத்தகைய கற்சலாகைகள் காணப்படுமிடங்கள் நிலத்துள்ளே ஈமத்தாழிகளையும், வெளியே தொப்பிக்கல், குடைக்கல், கல்வட்டங்கள் போன்றவற்றையும் கொண்டனவாகும். கேரளத்திலே இத்தகைய குடைவரைக் குகைகள் அனேகம் காணப்பட்டன. அவை மத்திய கிழக்கிலே பாலஸ்தீனத்தில் காணப்பட்டவை போன்ற அமைப்பை உடையன. இவை மத்திய கிழக்குடன் இருந்த வணிகத் தொடர்பை உறுதிப்படுத்துகின்றன.

## தமிழக - ஈழ - கேரள கால ஒற்றுமை

ஈழத்திலே காணப்பட்ட இடைக்கற்கால, புதிய கற்கால கருவிகள் குவாட்ஸ் (Quartz) கற்களினாலானவை. இக்கற்களினாலான திருகை, அம்மி, குளவி போன்றனவும், மட்பாண்டங்களும் புலாங்கொடை, சப்பிரகமுவ, பெலன்வண்டிபலாசா போன்ற இடங்களில் அதிகம் காணப்பட்டன. இவை அனைத்தும் தமிழக, ஆந்திர, கர்நாடக, கேரள காலத்தைச் சேர்ந்தவை என ஆய்வுகள் காட்டுகின்றன. ஆகவே இடைக்கற்காலம், புதிய கற்காலம், பெருங்கற்காலம் என்பன ஈழம், தமிழகம், கேரளம் ஆகிய இடங்களில் ஒரே காலப்பகுதியிலே காணப்பட்டன என்பது இவ்வாய்வுகள் மூலம் தெளிவாகிறது.

## பழகாமம் - நடுகல் எச்சங்கள்

கேரளத்திலே காணப்பட்ட இன்னோர் வகையான புதைகுழிக்கல் குத்துக்கல், நடுகல் என்பனவாகும். இறந்தோரை புதைத்த பின்பு அதன் மேல் இறந்தோர் நினைவாக இத்தகைய கற்களை நடுவதாகும். அக்கல்லிலே இறந்தோர் பெயர், சித்திரம் போன்றன பொறிக்கப்படும். மட்டக்களப்பு மாவட்டத்திலே பழகாமம் என்னுமிடம் பழம்பெருமை வாய்ந்த ஓரிடமாகும்.

இது ஆதியில் வேடர் குடியிருப்புக்கள் காணப்பட்ட ஓரிடமாகும். இங்குள்ள திரௌபதி அம்மன் கோயில் அயலிலே பல நடுகற்கள் (Hero stone) காணப்படுகின்றன. இவை வீர வழிபாட்டில் ஏற்பட்ட நினைவுச் சின்னங்களாகவும், அதன் நிமித்தம் உருவாக்கப்பட்ட கோயிலாகவுமே கருதமுடியும்.

இக்கோயிலில் காணப்படும் மரச்சிலைகளும், வழிபாட்டு முறைகளும், வெறியாட்டும், பலிஇடலும் சங்ககாலத்தில் நிலவிய பெருங்கற்கால கலாச்சாரத்தின் வழிபாட்டு முறையின் தொடர்ச்சி என்றே கருதக்கூடியதாக உள்ளது.

கேரளம் மறவர்களையும், போர்வீரர்களையும் கொண்ட இடம். ஆநிரை வைத்திருப்போர் அதிகம் வாழுமிடமுமாகும். பழகாமப் பிரதேசம் இத்தகைய சுற்றாடலையும், கலாச்சாரத்தையுமே கொண்டது என்பதில் ஐயமில்லை. மட்டக்களப்பிலே காணப்படும் பண்பாடுகளும், பழக்கவழக்கங்களும், வழிபாட்டு முறைகளும் கேரளப் பண்பாட்டை ஒத்தவை என்பது பல்வேறு விடயங்களால் நிரூபணமாகிறது. ஆகவே வேடர் வழிபாட்டுப் பாரம்பரியத்துடன் விளங்கிய இவ்விடம் பின்பு பெருங்கற்கால பண்பாட்டின் தாக்கத்திற்கு உட்படுவதைக் காணமுடிகிறது.

உகந்தை, ஹபரணை ஆகிய இடங்களில் கிடைக்கப்பெற்ற இத்தகைய பொருட்கள், இடுகாடுகள் போன்றன பெருங்கற்கால கலாசாரத்தைச் சேர்ந்தன எனக் கருதப்படுகிறது. அதேபோன்று மலிகம்பிட்டியிலும், குருகல்லின்னவிலும் கற்சவப்பெட்டிகள் காணப்பட்டன. கதிரவெளியிலிருந்து தொடங்கும் இந் நாகரீகம் கதிரவெளி, பழகாமம், உகந்தை, திசமறகமவரை பரவியிருந்ததையே இது காட்டுகிறது. உகந்தை, திசமறகம ஆகிய இடங்களில் கிடைக்கப்பெற்ற கறுப்பு-சிகப்பு

மட்பாண்டங்களை பாக்கர் தென் இந்திய மட்பாண்டங்களுடன் ஒப்பிட்டு அதன் நிறம், அதிலுள்ள அசோக பிராமி லிபி என்பவற்றை ஆராய்ந்து கி.மு. 1000 ஆண்டுகள் என காலக் கணிப்பீடும் செய்துள்ளனர்.

**அம்பாறை**

பண்டு மட்டக்களப்பு மாவட்டம் எனப்பட்டது தற்போதைய அம்பாறை மாவட்டத்தினையும் உள்ளடக்கிய பிரதேசமாகும். இது வெருகல் தொடக்கம் குமரை வரை நீண்டு பரந்து காணப்பட்டது. மிகப் பழங்காலத்தில் விந்தன, வெல்லச, ஊவா போன்ற பிரதேசங்களையும் உள்ளடக்கியதாக கதிர்காமம் வரை பரந்து காணப்பட்டது. இதனை இப்பகுதியில் காணப்பட்ட பெருங்கற்கால எச்சங்கள், பிராமிக் கல்வெட்டுக்கள் போன்றன காட்டுகின்றன.

இன்றைய அம்பாறை (பண்டைய மட்டக்களப்பு) எனப்படும் பிரதேசத்தில் குடும்பிகல, பம்பரஸ்தலாவ, பளமமொதரகல, பண்டாரபுதிராஜகல போன்ற இடங்களை 1971-ல் தாய்லாந்தைச் சேர்ந்த பேராசிரியர் சொல்கெய்கம், கலாநிதி சிரான் டெரனியகல ஆகியோர் சேர்ந்து ஆய்வு செய்தனர். இங்கு கறுப்பு - சிவப்பு மட்பாண்டங்கள் இனங்காணப்பட்டன. இவை அனைத்தும் பெருங்கற்கால தாழிகள் எனவும் உறுதிப்படுத்தப்பட்டன. இத்தகைய தாழிகள் தீகவாபி நூதனசாலையில் அனேகம் உள்ளன.

**திசமகறகம**

1990-ல் பண்டைய மாகம எனப்படும் திசமகறகமவில் அக்குறுகொட என்னுமிடத்தில் ஜேர்மனிய தொல்பொருளியல் குழுவினர் மேற்கொண்ட ஆய்விலே இங்கு நிலவிய

பெருங்கற்கால குடியிருப்புக்கள் இனங்காணப்பட்டன. இவ்வாய்வின்போது பரீஸ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த கோப்பியாராட்சி செய்த ஆய்விலே தென், தென்கிழக்கு இலங்கையின் துறைமுகங்கள் அனைத்துமே பெருங்கற்கால குடியிருப்புகள் என்பதையும் காட்டினார்.

**கதிர்காமம்**

கதிர்காமம் ஈழத்தின் தென்பகுதியில் அமைந்துள்ள முருகத் தலமாகும். ஊவா, விந்தன, வெல்லச, சப்பிரகமுவா போன்ற இடங்கள் பண்டு மட்டக்களப்பு தேசத்துடன் இணைந்திருந்தன. வரலாற்றுக் காலத்தில் இவை எல்லாம் ரோகணை இராச்சியம் எனப்பட்டவை. இப்பகுதிகளில் ஈழத்தின் பூர்வீக குடிகளான வேடர் வாழ்ந்துள்ளதோடு இன்றும் வேடர் பெருமளவு வாழுமிடங்களாகும்.

சபராகம எனப்பட்ட காடடர்ந்த இடம் ''சபரர்'' எனும் வேடர் வாழ்ந்த இடமாகும். சபரர், புளிஞர், மன்னார், முதுவர், குறவர், பணிக்கர், எயினர், இருளர், ஆயர், கலடர் போன்ற குழுவினர் வேடர் வகுப்பைச் சேர்ந்தவர்கள். இவர்கள் மலைச்சாரலை அரணாகக் கொண்டு சூறையாடும் வேட்டுவச் சாதியினர்.

> **மணிமலைச் சாரல் அடககருஞ்**
> **சீறுளர் அரணாக உறையுணர்**

என உதயணன் கதை கூறும்.

மேலும் இச் சபரர் இனம் தண்டகாரணியத்திலே வாழ்ந்த வேட்டுவச் சாதியினர். இவர்கள் விந்திய மலையிலும் வாழ்ந்தவர்கள். இவ் வேட்டுவக் குழுக்கள் இமயமலைப் பிரதேசம் கடலாய் இருந்தபோது விந்தியம் தொடக்கம்

மடகாஸ்கர் வரை வாழ்ந்தவர்கள். இவர்களே தமிழகத்தின் பூர்வீகக் குடிகள். இந்த சபரர் வாழ்ந்த இடம் "சபரர்கம". இவர்கள் வழிபட்ட இடம் கதிர்காமம். இவ்விடம் புதிய கற்கால வழிபாடாகிய வேல் வழிபாட்டினையும் தொடர்ந்து பெருங்கற்கால பண்பாட்டினையும் கொண்டது. கதிர்காமம் தொடக்கம் வெருகல் வரையிலான பிரதேசத்தில் அரசுகளும், குறுநில மன்னர்களும் உருவாவதற்கும் பெருங்கற்கால பண்பாடே காரணமாய் அமைந்தது எனலாம். புதிய கற்காலத்தில் கூட வேடர் வாழ்ந்த இப்பிரதேசம் பெருங்கற்கால மக்கள் வாழ்வுடன் சங்கமிப்பதை இப்பகுதி எச்சங்களும், ஆய்வுகளும் காட்டுகின்றன.

## பிராமிக் கல்வெட்டுக்கள் காட்டும் பெருங்கற்கால சான்றுகள்

பெருங்கற்காலம் என்பது வரலாற்று இடைக்காலத்துடனும் (Proto history), வரலாற்றுடனும் (history) சேர்ந்ததாக காணப்படுகிறது. பெரும்பாலும் இது எழுத்துக்கள் தோற்றம் பெற்ற காலப்பகுதியாகும். இக்காலகட்டத்திலேதான் பிராமி எழுத்துக்கள் தோற்றம் பெற்று வளர்ச்சி அடைந்தன. இந்துவெளி நாகரீகம் தொடக்கம் ஈழம் வரை இத்தகைய சான்றுகள் கிடைத்துள்ளன.

## தமிழி (பிராமி வரிவடிவம்)

தொல்லியல் அடிப்படையில் ஈழத்துப் பிராமிக் கல்வெட்டுகளை ஆராயுமிடத்து இவை தமிழ் - சிங்கள வரிவடிவத்தின் மூல எழுத்துக்கள் எனக் கருதப்படுகிறது. இத்தகைய பிராமி லிபிகளினாலான கல்வெட்டுக்கள் ஈழத்தின் கிழக்குப்பகுதியில்தான் அனேகம் கிடைக்கின்றன. இவ் எழுத்துக்கள் மத்திய கிழக்கிலிருந்து வட இந்தியா, தென் இந்தியா என விரிவடைந்து ஈழம் வந்தது என்பது சில வரலாற்று

ஆசிரியர்களது கருத்தாகும். ஆனால் தென் இந்திய பிராமி எழுத்துக்கள் தனிவடிவம் பெற்று "திராவிடி" எனப்பட்டன. இது தமிழ் மொழியை எழுதப் பயன்பட்டதால் "தமிழி" எனவும் அழைக்கப்பட்டது.

ஈழத்தின் கிழக்குப்பகுதியில் இத்தகைய கல்வெட்டுகள் அனேகம் காணப்படுகின்றன. தற்போதைய அம்பாறை மாவட்டமும் சேர்ந்த பண்டைய மட்டக்களப்பு பிரதேசத்திலே பிராமிக் கல்வெட்டுகள் ஈழத்தின் ஏனைய பிரதேசங்களை விட அதிகம் காணப்படுவன. இக் கல்வெட்டுகளிலே குறிப்பிட்டுள்ள பெயர்கள், குறியீடுகள் எல்லாம் பெருங்கற்கால குறியீடுகளையே ஒத்துக் காணப்படுகின்றன.

கிழக்கிலே காணப்பட்ட பிராமிக் கல்வெட்டுகளை ஆராய்ந்த பேராசிரியர் பெர்னாண்டோ, கலாநிதி சத்தமங்கல கருணாரெத்தின, ஐராவதம் மகாதேவன் போன்ற அறிஞர்கள் இப்பிராமி எழுத்துக்கள் பௌத்தத்திற்கு முந்திய தமிழ் பிராமி எழுத்து வடிவங்கள் எனக் கூறியுள்ளனர். அ, இ, ம, ள, ழ, ன போன்ற எழுத்துக்கள் தமிழ் பிராமியிலிருந்து கிடைக்கின்றன. இப்பழைய தமிழி எழுத்துக்கள் கிழக்கிலங்கைக் கல்வெட்டுக்களிலேதான் காணப்படுகின்றன.

**கிழக்கிலங்கை பிராமிக் கல்வெட்டுகள் குறிக்கும் தமிழக பெயர்கள்**

பம்பரகஸ்தலாவ என்பது கிழக்கிலங்கையிலே உகந்தைக்கு அண்மையில் உள்ள ஓரிடமாகும். இங்கு கிறிஸ்துவுக்கு முற்பட்ட கால கல்வெட்டுகள் அனேகம் காணப்படுகின்றன. இக் கல்வெட்டுகளிலே நாக, திச, சுமணகுத்த, நாகபவத்த போன்ற பெயர்களும் காணப்படுகின்றன.

தெற்கிலே மகுள்மகாவிகாரை கல்வெட்டிலே இத்தகைய "திராவிடி" லிபியினாலான கல்வெட்டுகள் காணப்பட்டுள்ளன. இதே போன்று திசமகறகமவில் அக்குறுகொடவில் கிடைத்த தமிழ் பிராமியில் காணப்படும் எழுத்துக்கள் தமிழக பிராமி எழுத்துக்களை ஒத்தன. உதிரன், "சபிஜன்" என இவை வாசிக்கப்பட்டுள்ளன. இக்கல்வெட்டுகளிலே காணப்படும் சிவ, மகாசிவ, காலசிவ, சிவகுத்த, சிவரக்சித, பதும, துர்கா, கடி (காஸி), திரு, மற்சியாஷி, மஜிமகரஜ போன்ற பெயர்கள், குழுப்பெயர்கள் திராவிடப் பெயர்களாகும். கி.மு. 2ம் நூற்றாண்டிலே ஈழத்தில் பௌத்தம் பேரூன்றினாலும் பௌத்தம் கால்கொள்ளு முன்பே காணப்பட்ட திராவிட பெருங்கற்கால குழுக்களின் பெயர்களே இவை என்பது ஆய்வுகள் காட்டும் உண்மையாகும். இவை பெருங்கற்கால விவசாய சமுதாயத்திலே முக்கியம் பெற்ற தூதுவர், அமைச்சர், சேனாதிபதி போன்றோரைக் குறிப்பனவாகும்.

## வேள், வேளிர்

முள்ளிக்குளம் மலை, விகாரகல (விகாரகல்) ஆலய இடங்களில் காணப்பட்ட கல்வெட்டுகளை "வேள்" என்ற பதம் குறிக்கிறது. பரணவிதான இவற்றை வேறுவிதமாக வாசித்துள்ளார். ஆனால் இவை சங்க காலத்தில் முக்கியம் பெற்ற வேளிர் என்பது தெளிவு. இவ்வேளிர் குறுநில மன்னர்களாக, "தொன்முடி வேளிர்," "முதுகுடிவேளிர்" என சங்க காலத்திலே புகழ்பெற்றிருந்தனர். இவர்களே தமிழ்நாட்டில் விவசாயப் புரட்சியை ஏற்படுத்தியவர்கள். கிழக்கிலங்கையிலே குறுநில மன்னர்களையும், கதிர்காம க்ஷத்திரியர் எனவும் ஆட்சி செய்தவர்களும் இவ்வேளிரே என்பது பொருத்தமானது. ஈழத்தின் ஏனைய இடங்களைவிட தென், கிழக்கு இலங்கையை பொன் கொழிக்கும் விவசாய பூமியாக்கியவர்களும் இவர்களே. இவை

அனைத்துமே பெருங்கற்கால புரட்சி என்பது ஆய்வுகள் காட்டும் உண்மையாகும்.

''மஜிம:'' பளையர் ராஜகல, விகாரகல பிராமிக் கல்வெட்டுகள் குறிக்கும் ''அபி, அய'' என்ற பதங்கள் இளவரசன், இளவரசி என்ற கருத்தினைக் குறிக்கும். இதேபோன்று நெண்ணனினக்ல கல்வெட்டுக் குறிக்கும் ''மஜிம'' ''மஜிமகரஜ'' என்பவை ''மீனவன்'' என்ற பதத்தைக் குறிக்கும் பாளிச் சொற்களாகும். ''பழையர்'' என்ற சொல்லும் இக்கல்வெட்டுக்களில் இடம்பெறுகின்றன. ''மஜிம'' குறிக்கும் மீனவன் என்ற பதம் பாண்டியரைக் குறிக்கும். பழையர் என்பது தென் இந்திய பழங்குடிகளில் ஒன்றாகும். பழையர் - பண்டையர் - பண்டு எனக் கருத்துக் கொள்ளும் பேராசிரியர் சிற்றம்பலம் அவர்கள் இதுவும் பாண்டியரையே குறிப்பது என்கிறார். கிரேக்கயர் திரிபு மெகஸ்தினில் ஈழத்து மக்கள் ''பழகோணி'' என அழைத்தனர். எனவே கிழக்கிலே இடம்பெற்ற ஆதிக்குடியேற்றங்களில் பாண்டிய குழுக்கள் பெற்றிருந்த முக்கியத்துவம் விளங்குகிறது.

**உதியன், உதி**

கிறீஸ்துவுக்கு முற்பட்ட காலங்களில் ஈழத்தைக் கைப்பற்றி ஆண்ட பழைய மாறன், உதியன், உதி போன்ற பெயர்கள்கூட பாண்டிய, சேர குழுக்களையே குறித்து நிற்கின்றன எனலாம். சேர மன்னன் உதியன் சங்ககால இனக் குழுக்களின் தலைவனாக விளங்கியவன். கிழக்கிலே கிரலான என்ற இடத்திலே காணப்பட்ட கல்வெட்டுக்களில் உதியன், உதி போன்ற பெயர்கள் இடம்பெறுகின்றன.

கூமுனைக்கு மூன்று மைல் மேற்கில் இருக்கும் வோவத்தகல், கொட்டதாமுவேலக ஆகிய இடங்களில் மீன்

சின்னம் பொறிக்கப்பட்ட குகைக் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. கதிர்காம க்ஷத்திரியர்கள் கோதபயனால் அழிக்கப்பட்டது பற்றிக் கூறும் இக்கல்வெட்டுக்கள் மூலம் கதிர்காம க்ஷத்திரியர் குடும்பம் ஒன்றின் ஐந்து பரம்பரை பற்றி அறியமுடிகிறது. கிழக்கு-தென்கிழக்கில் மிக நீண்ட காலம் ஆட்சி செலுத்திய பெருங்கற்கால குறுநில மன்னர்கள் பரம்பரையினரே இவர்களாகும்.

பாண்டு, பாரிந்த, உதி, உதியன், தமரஜ, அபய, குச, மகாதிச, பழையமாறன் போன்ற சேர பாண்டிய தொடர்புடைய பெயர்களைக் கொண்ட இக் கதிர்காம க்ஷத்திரியர்கள் தமிழகத்துடன் தொடர்புடையவர்கள் என்பதும், சங்ககால, பெருங்கற்கால கலாசாரம் உடையவர்கள் என்பதும் இக்கல்வெட்டுகள் மூலம் அறிய முடிகிறது.

இதேபோன்றே பதுளை, மட்டக்களப்பு பாதையிலே குரலான் கந்த (குரலான் மலை) எனப்படும் சிறிய குன்று ஒன்றிலே காணப்படும் குகைக் கல்வெட்டுகள் அய, அபய, உபராஜ, நாக போன்ற பெயர்களைக் குறிப்பன. இவையும் பெருங்கற்கால இனக் குழுக்களுடன் தொடர்புடையனவாக உள்ளதை அண்மைக்கால ஆய்வுகள் தெளிவாகக் காட்டுகின்றன.

## ஈழத்துப் பிராமி பெருங்கற்காலம்

ஈழத்துப் பிராமி மொழி பற்றிக் கூறும் கன்னிங்காம் (Coningham), கலாநிதி சிரான் டெரனியகல போன்றோர் பின்வருமாறு கூறியுள்ளனர்: "பிராகிருதம் ஈழத்திற்கு வருமுன்னர் நிலவிய மொழி பற்றி அறிய முடியாதுள்ளது. எனினும் சிங்கள மொழியில் காணப்படும் ஆரிய, திராவிட மொழியல்லாத சொற்களை நோக்கும்போது இது பிராகிருத

மொழிக்கு முந்திய வேடர் மொழியாகவே விளங்கியது. மேன் மக்களது மேலாதிக்கம் ஈழத்தின் ஆதி மொழியில் அழுத்தம் ஏற்படக் காரணியாக இருந்தது'' என்கின்றனர்.

இந்த மேன்மக்களும், மொழியுமே ஆதித்திராவிடரும் திராவிட மொழியைக் கொண்டவர்களுமான பெருங்கற்கால கலாச்சாரத்திற்குரிய மக்களுமாவர். இந்த பிராமி லிபியும், கலாச்சாரமும் கிழக்குப் பகுதிகளிலே குறிப்பாக அம்பாறை, தீகவாபி, உகணை, திசமறகம, பம்பரகஸ்தலாவ, குடும்பி மலை போன்ற இடங்களில் அதிகமாகக் காணப்படுகின்றன.

உதி, தமரஜ, அபய, மகாதிக, பழையமாற போன்ற பாண்டிய, சேர பெயர்களையும், குழுப்பெயர்களையும் கொண்ட கதிர்காம க்ஷத்திரியர் வம்சம் போன்ற சிற்றரசுகளும், குழுக்களும் பெருங்கற்கால பாரம்பரியம் உடையவை என்பதும் ஆய்வுகள் காட்டும் புதிய ஊகமாகும்.

கிழக்கில் மட்டுமல்ல நாடெங்கிலும் காணப்பட்ட குறுநில மன்னர்கள் பற்றிய ஆட்சி போன்றன இப் பெருங்கற்கால கலாச்சாரத்தின் பிரதிபலிப்பே என்று அறிவதோடு, ஈழத்தில் கி.மு. 1000-900 ஆண்டுகளால் தோற்றம் பெற்றிருக்கலாம் எனவும் விஞ்ஞான காலக் கணிப்புகள் உறுதி செய்கின்றன. ஈழத்தின் ஆதிக்குடியேற்றம் என்பதுவும் பெருங்கற்கால கலாச்சாரத்தின் படர்ச்சியே என பேராதெனிய பல்கலைக்கழக பேராசிரியர் சுதர்சன் செனிவரத்னா, சுசந்தா குணதிலக போன்றோர் குறிப்பிடுவர்.

இந்தப் பெருங்கற்கால மக்களே ஈழத்தின் வரலாற்றை கட்டியெழுப்பியவர்கள் ஆவர். ஈழத்தின் ஏனைய பிரதேசங்களைவிட தென் பகுதியும், கிழக்குப் பகுதியும் வயல் நிலங்களையும், குளங்களையும் கொண்டதாக விவசாயத்தில்

மேலோங்கி நெற்களஞ்சியமாக திகழவும் இப்பெருங்கற்கால குடியேற்றங்களே காரணமாக அமைந்தன எனலாம். கிழக்கிலங்கையின் பெருங்கற்கால வரலாறு என்பது பின்வருமாறு அமையக் காணலாம்:

(அ) ஈழத்தில், கிழக்கிலங்கையில் வரலாற்றுதய காலம் எனக் கருதப்படும் பெருங்கற்காலம் சுமார் கி.மு. 6000 – கி.பி. 250க்கு இடைப்பட்ட காலப்பகுதியாகும். (இது வரலாற்றுக்கு முற்பட்ட வரலாற்று காலப்பகுதிகளையும் உள்ளடக்கியதாகும்).

(ஆ) உலகெங்கும் பெருங்கற்காலப் பண்பாடு பரவலாகக் காணப்பட்ட போது ஈழத்திலும் குறிப்பாக கிழக்கிலங்கையிலும் காணப்பட்டுள்ளது.

(இ) கிழக்கிலங்கையின் நாகரீக வரலாற்றிற்கு அத்திவாரமாக அமைந்தவர்கள் பெருங்கற்கால மக்களே ஆவர்.

(ஈ) குளங்கள், வயல்களைக் கொண்ட தானியக் களஞ்சியமாக கிழக்கிலங்கை திகழ வழி அமைத்தவர்களும் இப்பெருங்கற்கால மக்களே ஆவர்.

(உ) கிழக்கிலே உருவாகிய சிற்றரசுகள், இராச்சியங்கள் அனைத்தும் இப் பெருங்கற்கால சமுதாயத்தின் அத்திவாரத்திலேதான் உருவாயின எனலாம்.

(ஊ) கிழக்கிலங்கையிலே காணப்பட்ட பெருங்கற்கால எச்சங்கள், பிராமிக் கல்வெட்டுகள், புதைகுழிகள், இடுகாடுகள் போன்றன இவற்றைத் தெளிவாகக் காட்டுகின்றன.

## அடிக்குறிப்புகள்

1. பேராசிரியர் சி.க. சிற்றம்பலம் - பண்டைய தமிழகம், 1981, திருநெல்வேலி பக்.60.
2. பேராசிரியர் சி.க. சிற்றம்பலம் - பண்டைய தமிழகம், 1981, திருநெல்வேலி பக். 117.
3. Vimala Begley - Proto historical material. From Sri Lanka and Indian Contacts. Kennedy KAR and Possohi El. (ed) Ecological Backgrounds of South Asian Pre-history (New Orleans) 1973, பக். 191-196.
4. Vimala Begley - Excavations of Iron Age Burials at Ponparippu - 1970. Ancient Ceylon No.4, 1981.
5. Allchin FR.and Coningham Robin. Anuradhapura Citadel Archaeological Project. Preliminary Report of the third season of Sri Lanka British Excavation of Salgaha. July - September 1991 - South Asian Studies 8, 1992. பக். 155-167.
6. Deraniyagala S.U. Pre and Proto Historic Settlements in Sri Lanka - Economic Review, Vol. 23, No. 7/8 October/ November 1997.
7. பேராசிரியர் சிற்றம்பலம் - பண்டைய தமிழகம் பக். 114.

   Allchin B and Allchin FR - 1968 pp. 223-225. Anuradhapura Citadel Archaeological Project Preliminary Report of the third season of Sri Lanka.

8. (a) Dikshit D.N. 1968 - The origin and distribution of megalithics in India.

(b) பண்டைய தமிழகம், சி.க. சிற்றம்பலம், பக். 70.

9. Paranavitana - Ceylon Journal of Science (G sect Vol. 2 December 1928. Feb - 1933 pp. 95-99)

10. Srinivasan K.R. - Ancient India No.2, January 1946.

11. Ramachandran K.S. 1969 - pp. 59-65

12. பேராசிரியர் சி.க. சிற்றம்பலம் - பண்டைய தமிழகம் - திருநெல்வேலி 1991. பக். 14 (முன்னுரை)

13. பேராசிரியர் சி.க. சிற்றம்பலம் - பண்டைய தமிழகம் 1991 - pp. 18-19

14. Ceylon Journal of Science (G section) 1, (2) pp. 51-52 also vide (G section) 2, pp. 94-95

15. Inscriptions of Ceylon by Dr.S. Paranavitana.

16. சி.க. சிற்றம்பலம் - பண்டைய ஈழத்தில் தமிழர் ஒரு பன்முகப்பார்வை, பக். 18-19

17. Weisshaar Hans Joachim "Ancient Mahama" Archaeological Research in South Ceylon 1998. பக். 38-50.

18. உதயணன் கதை, உஞ்சைக்காண்டம் 55, வரி. 44-68.

19. சி.க. சிற்றம்பலம் - பண்டைய தமிழகம், 1991 - பக். 14.

20. Karunaratne Sadhamngla "Epigaraphia Zelanica" Vol.7. Colombo 1984. பக். 80, 71-91.

21. Bopearachchi Osmand and Wickramasinghe Rajah Rohuna - An ancient Civilization revisited. Nugegoda - Colombo 1999, 56-59.

22. சி.க. சிற்றம்பலம் - பண்டைய ஈழத்தில் தமிழர் - ஒரு பன்முகப்பார்வை - 2001 pp. 28

23.a) சி.க. சிற்றம்பலம்- பண்டைய ஈழத்தில் தமிழர் - ஒரு பன்முகப்பார்வை - பக். 30-31.

b) சி.க. சிற்றம்பலம்- ஈழத்து இந்து சமய வரலாறு - பக். 198 - 199.

24. Inscriptions of Ceylon by Paranavitana, 1970 - கல்வெட்டு இல-83, 289, 487.

25. Inscriptions of Ceylon by Paranavitana, 1970 - கல்வெட்டு இல-643, 744, 1970.

26. Deraniyagala and S.U. Abeyratne M. Radio Carbon Chronology of Iron Age and Early Historic. Anuradhapura 1997 - பக். 14.

27. பண்டைய ஈழத்தில் தமிழர் - ஒரு பன்முகப்பார்வை பக். 48-49.

Seneviratne Sudharshan - Essays.

28. பண்டைய ஈழத்தில் தமிழர் - ஒரு பன்முகப்பார்வை சி.க. சிற்றம்பலம் பக். 19.

# மண்முனை இராச்சியமும் கோயில்குளம் வரலாறும்

மண்முனைப்பற்று எனப்படும் பிரதேசம் பண்டைய மண்முனை இராச்சியம் ஆகும். கலிங்க இளவரசி உலக நாச்சியின் அரண்மனை இடிபாடுகள் இங்கு காணப்பட்டுள்ளன. முக்கியமானது கோயில்குளம் ஆகும்.

கோயில்குளம் என்னும் ஊர் மட்டக்களப்பில் ஆரையம்பதி கிராமத்தை அண்மிய ஒரு பழம்பெரும் கிராமமாகும். இதன் தெற்கே தாழங்குடாவும், வடக்கே ஆரையம்பதி கிராமமும், கிழக்கே வேடர் குடியிருப்பும், மேற்கே காங்கேயனோடை கிராமமும் அமைந்துள்ளன. தற்போது வெறும் மண்மேடாகக் காட்சி தரும் குக்கிராமம், பண்டைய ஆலயம் ஒன்றின் இடிபாடுகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது. அவ்வப்போது இங்கிருந்து பண்டைய ஆலயத்தின் சின்னாங்கள் கிடைக்கின்றன.

## 1. பெயர்க்காரணம்

பெரிய கோபுரத்தைக் கொண்ட சிதம்பரத்தை ''கோயில்'' என்று குறிப்பிடுவது மரபு. அவ்வாறே இவ்விடத்தில் ஒரு பெரிய கோயில் இருந்த காரணத்தால் ''கோயில்'' என்ற காரணப் பெயர் ஏற்பட்டது. அத்துடன் பெரிய குளம் ஒன்றும் கோயிலின் அண்மையில் உள்ளது. இப்பகுதியில் பிற கோயில்கள் அவ்வாறு குளங்களைக் கொண்டிருக்காத காரணத்தால் இப்பதிக்கு கோயில்குளம் என்ற பெயர் ஏற்பட்டிருக்கலாம்.

அக்காலத்தில் கோபுரத்துடன் கூடிய பிற கோயில்கள் இப்பகுதியில் இருந்ததாகத் தெரியவில்லை. இன்றும் கூட அத்தகைய கோபுரத்துடன் கூடிய கோயில்கள் மட்டக்களப்புப் பிரதேசத்தில் மிக அபூர்வமாகவே காணப்படுகின்றன.

**2. பண்டைய ஆலயத்தின் சின்னங்கள்**

இப்பகுதியில் 1980ம் ஆண்டளவில், தனிப்பட்டவருக்குச் சொந்தமான காணி ஒன்றில், தென்னம்பிள்ளை நடுவதற்காக குழிகள் தோண்டியபோது, சில சிவசின்னங்கள் வெளிப்பட்டுள்ளன. அவை - சிறிய அளவிலான படிகலிங்கம், ஐந்து தலை நாகத்தின் கீழ் அமர்ந்துள்ள ஒரு உருவத்தின் புடைப்புச் சிற்பம், பெரியதொரு கந்துவிளக்கின் உடைந்த பாகங்கள் முதலியன. இவை குடம் ஒன்றில் இட்டுப் புதைக்கப்பட்டிருந்தனவாம். அந்நியரால் இவ்வாலயம் இடிக்கப்பட்ட போது இச்சின்னங்களை இவ்வாறு மறைத்து வைத்திருக்கலாம். இப்படிகலிங்கம் கோயிலின் மூலஸ்தானத்தில் இருந்திருக்க வேண்டும் என்பதை இலகுவாக ஊகிக்கலாம்.

மேலும் சுமார் நூறு வருடங்களுக்கு முன்னர் இக்கோயிலின் இடிபாடுகளுக்குள் அகப்பட்ட பாரிய கல்தூண்களும், கல் நிலைகளும், அண்மையில் உள்ள ஆரையம்பதி கந்தசுவாமி கோயிலிலும், திருநீலகண்டப் பிள்ளையார் கோயிலிலும் பயன்படுத்தப்பட்டுள்ளன. அவற்றை இன்றும் காணலாம். இக்கல்தூண்கள் 15 அங்குல சதுரமும் 12 அடி உயரமும் கொண்டவை.

இங்கு கண்டெடுக்கப்பட்ட படிகலிங்கம், சிதம்பரக் கோயிலில் ஒரு பேழையுள் வைக்கப்பட்டிருக்கும் படிக லிங்கத்தை ஒத்ததாக இருக்கிறது. இத்தகைய லிங்கத்தைக் காசிலிங்கம் என அழைப்பார்கள். இப்படி லிங்கம்

இக்கோயிலுக்கு எப்படி வந்தது என்பதை ''மட்டக்களப்பு மான்மியத்தில்''வரும் கதை ஒன்று கோடி காட்டுகிறது.

## 3. மட்டக்களப்பு மான்மியம் கூறும் கதை

குணசிங்கன் என்பவன், கலியாண்டு 3500ம் வருடம் (கி.பி. 398) மட்டக்களப்பில் ஆட்சி செய்தபோது, இந்தியாவில் ஒரிசா மாநிலத்தை (கலிங்கம்) ஆட்சி செய்த குகசேனனுடைய புத்திரி உலகநாச்சி என்பவள் கௌதம புத்தரின் தசனத்தை தனது நெடுங் கூந்தலுக்குள் மறைத்துக் கொண்டு, முற்காலத்தில் கயிலயங்கிரியில் குக வம்சத்தினர் எடுத்து வைத்திருந்த சிவலிங்கத்தையும் எடுத்துக்கொண்டு, தனது சகோதரன் உலகநாதனுடன் இலங்கை வந்தாள். இலங்கை மன்னன் மேகவர்ணனிடம் (கி.பி. 301-328) புத்த தசனத்தைக் கொடுத்தாள். அவன் பணிப்பின்பேரில், குணசிங்கனிடமிருந்து மண்முனைப் பிரதேசத்தைப் பெற்றாள்.

''மட்டக்களப்பு மான்மியம்'' முழுமையான வரலாற்று நூல் அல்ல என்றாலும், கோயில்குளத்தில் கண்டெடுக்கப்பட்ட படிக லிங்கத்தைக் கொண்டு, இக்கதையில் ஒரு வரலாற்று இழை ஓடுவதைக் காணமுடிகிறது.

இந்த உலகநாச்சியே, கொக்கட்டிச்சோலை தான் தோன்றீஸ்வரத்தையும் அமைத்தாள் என்பது மட்டக்களப்பு மான்மியம் கூறும் மற்றொரு கதை. அக்கதை வருமாறு :

அப்பிரதேசத்தில் விறகு வெட்டச் சென்றவர்கள் கொக்கு நெட்டிமரம் ஒன்றை வெட்டியபோது, அதிலிருந்து இரத்தம் வடிந்ததாகவும், பின்னர் அங்கு சென்று பார்த்தபோது சுயம்புலிங்கம் ஒன்று காணப்பட்டதாகவும் இக்கதை கூறுகிறது. பின்னர் அவ்விடத்தில் ஒரு சிறு ஆலயம்

அமைத்து அதில் சுயம்புலிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டது என்பர்.

### 4. கோயில்குளமும் கொக்கட்டிச்சோலையும்

இவ்விரு ஊர்களிலுமுள்ள ஆலயங்கள் உலகநாச்சியால் அமைக்கப்பட்ட காரணத்தால் இரண்டு ஆலயங்களுக்குமிடையே ஆதி முதல் நெருங்கிய தொடர்பு இருந்து வந்துள்ளது. கொக்கட்டிச்சோலை தேர்த்திருவிழா உற்சவகாலத்தில், கோயில்குளத்திலிருந்து கொக்கட்டிச் சோலைக்கு வேல் கொண்டு போகும் வழக்கம் இருந்தது.

கோயில்குளம் கோயில் அழிந்ததும், அவ்வழக்கம் ஆரையம்பதி கந்தசுவாமி கோயிலுக்கு மாறியது. அவ்வழக்கத்தின் காரணமாகவே, இன்றும் ஆரையம்பதி முருகன் கோயிலில் இருந்து கொக்கட்டிச்சோலை தேரோட்ட உற்சவத்திற்கு வேல் கொண்டு செல்லும் வழக்கம் நடைமுறையில் உள்ளது.

கோயில் குளத்திலே உலகநாச்சியால் அமைக்கப்பட்ட ஆலயம், உயர்ந்த கோபுரத்தோடு விளங்கியதால் அக்கோயிலை சிகரக்கோயில் எனவும் அழைத்தனர். அதன் காரணமாகவே இன்றும் அப்பகுதி ''சிகரம்'' என அழைக்கப்படுகிறது. (ஆலய உற்சவங்களின் போது உற்சவ மூர்த்திகளின் பவனிக்காக பூம்பந்தர்கள் அமைக்கப்படும். இப்பூம்பந்தர்களில், முன்புறம் உயரமாகப் பொருத்தப்படும். விதானத்தை ''சிகரம்'' என அழைக்கும் வழக்கம் இங்கு நினைவுகூரத்தக்கது).

கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்துக்கு கோபுரம் இருக்கவில்லை. இப்போது அத்தகைய கோபுரம் ஒன்று அமைக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 5. உலகநாச்சியும் பௌத்த வழிபாடும்

இலங்கையில் மகாசேனனின் மூத்த புதல்வன் மேகவர்ணன் (கி.பி. 303-328) ஆட்சிக்காலத்தில், கலிங்க மன்னன் குகசேனனுடைய மகள் உலகநாச்சி புத்தரின் தசனத்தைத் தனது கூந்தலில் மறைத்து வைத்துக் கொண்டு வந்தாள் என்பதை ஏற்கனவே பார்த்தோம். (மட்டக்களப்பு மான்மியம் பக்.42). இதனை டொனால்ட் அபயசேகர எழுதிய இலங்கைச் சரித்திரம் என்னும் நூல் மூலமும் அறிய முடிகிறது, ஆனால் மட்டக்களப்பு மான்மியம், இக்கதையை உலகநாச்சி, உலகநாதன் என்று கூற, இலங்கைச் சரித்திரம் இக்கதையை வேறு பெயர்களுடன் கூறுகிறது.

இக்கதை இராணி வாலனம்குமாரி பெண் வேடம் பூண்டு, தனது நெடிய கூந்தலுக்குள், புத்த தந்தத்தை மறைத்து எடுத்துக் கொண்டு வந்தாள் எனக் கூறுகிறது. மட்டக்களப்பு மான்மியம், உலகநாச்சி தனது சகோதரரான உலகநாதனுடன் வந்தாள் எனக்கூற, இலங்கைச் சரித்திரம் வாலனம் குமாரி, தனது கணவன், கந்தனம்குமாரனுடன் வந்தாள் எனக் கூறுகிறது.

மேற்படி கதையிலிருந்து, கலிங்கத்துக்கும் ஈழத்துக்கும் இடையே நெருங்கிய பௌத்தத் தொடர்பு இருந்ததை அறியலாம். கலிங்கத்தில் பௌத்தம் வேரூன்றியிருந்த காலத்தில் புத்தர் பெருமானின் உடல் குஷிநகராவில் தகனம் செய்யப்பட்டபின், மீந்திருந்த எலும்பு, பல் முதலிய புனித சின்னங்கள் ஏழு பாகங்களாகப் பிரிக்கப்பட்டு, இந்தியாவில் உள்ள முக்கிய நகரங்களுக்கு அனுப்பப்பட்டு, அங்கங்கு தாது கோபுரங்களில் அடக்கம் செய்யப்பட்டன.

புத்தரின் புனித தந்தம் ஒன்றினை அவரது சீடரான கேமா என்பவர் கலிங்க மன்னன் பிரம்மதத்தனுக்குக் கொடுத்தான். அவன் அதனை, கலிங்கத்தின் வடகிழக்கு எல்லையான மகாநதிக்கரையிலே, பூரி ஜகந்நாதர் ஆலயத்தின் அருகே, கோயில் ஒன்று கட்டி, விலை உயர்ந்த தந்தப் பேழையில் வைத்துப் பிரதிட்டை செய்தான். அந்த இடமே தந்தபுரம் எனப்பட்டது.

கலிங்கத்தில் குகசேனனுடைய ஆட்சிக் காலத்தில் புத்த தந்தத்தைக் கவர்ந்து செல்லப் பலர் முயற்சி செய்தனர். எனவே அப்புனித தந்தத்தை பாதுகாப்பாக மறைத்து வைக்க வேண்டிய நிலை குகசேனனுக்கு ஏற்பட்டது. அப்போது இலங்கையில் அவனது நண்பனான மேகவர்ணன் ஆட்சி செய்தான். எனவே அவனிடம் புத்த தந்தத்தைக் குகசேனன் அனுப்பிவைத்தான்.

அத்தகைய, பெறுமதி வாய்ந்த, புனித தந்தத்தைப் பிறர் மூலம் அனுப்புவது பாதுகாப்பற்றது என்பதனாலேயே, குகசேனன் அதைத் தனது மகளான உலகநாச்சி மூலம் அனுப்பி வைத்தான். துணைக்கு மகன் உலகநாதன் உடன் சென்றான். பாதுகாப்பின் பொருட்டே புத்த தந்தம் கூந்தலில் மறைத்து வைக்கப்பட்டது.

புத்தரின் புனித தந்தத்தை இலங்கைக்குக் கொண்டு வந்தவள் ஒரு பெண் என்ற செய்தி மகாவம்சத்திலும் உண்டு. (Mahavamsam - I, Ch.XXXVII, குறிப்பு 92-93).

அப்படியானால் உலகநாச்சி படிகலிங்கத்தையும், ஏன் தன்னுடன் கொண்டு வரவேண்டும்? அதற்குக் காரணம் மக்கள் கவனத்தைத் திசை திருப்புவது மட்டுமல்ல வேறு காரணமும் உண்டு.

கலிங்க நாட்டிலே, இந்து பௌத்த மதங்கள், எவ்வித முரண்பாடுகளுமின்றி, ஒன்றாகவே வளர்ந்தன. ''புத்தர்'' விஷ்ணுவின் அவதாரம் என்ற கோட்பாடு காரணமாக இவ்விணக்கம் ஏற்பட்டது போலும். எனவே, கிழக்கிலங்கையில் வாழ்ந்த கலிங்க வம்சத்தினரைக் கருத்தில் கொண்டு, உலகநாச்சி அமைந்துள்ளது.

## 6. உலகநாச்சியும் மண்முனைப் பிரதேசமும்

இலங்கையில் மேகவர்ணன் ஆட்சி செய்த காலத்தில் மட்டக்களப்புப் பிரதேசத்தை ஆட்சி செய்தவன், கலிங்க வம்சத்தவனான குணசிங்கன் என்பது மட்டக்களப்பு மான்மியக் கூற்று. மேகவர்ணனின் பணிப்பின்பேரில் குணசிங்கன் மண்முனைப் பிரதேசத்தை உலகநாச்சிக்குக் கொடுத்தான் என்பதை ஏற்கனவே பார்த்தோம். அப்போது மண்முனைப் பிரதேசத்தில் அடங்கியிருந்த கோயில் குளத்தில், உலகநாச்சி ஒரு கோயில் கட்டி, அதில் தான் கொண்டு வந்த படிகலிங்கத்தைப் பிரதிட்டை செய்தாள். அவ்வாலயத்தைப் பராமரிப்பதற்காகத் தனது தம்பி உலகநாதனை கலிங்கத்திற்கு அனுப்பி, அங்கிருந்து நூற்றியாறு உயர்குடி மக்களையும், முப்பது சிறைக்குடிமக்களையும் (தொழும்பர்கள்) வரவழைத்தாள். காப்பு முனைக்காட்டை அழித்து, அதனைச் செப்பனிட்டு மண்முனை என அதற்குப் பெயர் சூட்டினாள். இவ்வாறு மட்டக்களப்பு மான்மியம் கூறுகிறது.

உலகநாச்சி, மண்முனைப்பிரதேசத்தை இவ்வாறு ஆட்சி செய்தபோது, கொக்கட்டிச் சோலையில் சுயம்புலிங்கம் தோன்ற அங்கும் ஒரு கோயில் அமைத்து, சுயம்புலிங்கத்தைப் பிரதிட்டை செய்து வைத்தாள். முதலில் கொத்துப்பந்தல் வடிவில் அமைந்த அவ்வாலயம், பின்னர் பெரிதாக அமைக்கப்பட்டது எனலாம்.

மேற்படி காரணங்களால் உலகநாச்சி கொண்டு வந்த படிகலிங்கம் கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் இடம்பெற்றிருக்க முடியாது என்பதை இலகுவாக ஊகித்துக் கொள்ளலாம்.

## 7. கோயில்குளத்தில் கற்கோயில் அமைத்தது எப்படி?

உலகநாச்சி இலங்கைக்கு வந்த காலம், இந்தியாவில் கருங்கல் கோயில்கள் உருவான காலமாகும். எனவே உலகநாச்சி இங்கும் அத்தகைய ஒரு கோயிலை அமைத்ததில் வியப்பில்லை. ஆனால் மலைகளோ குன்றுகளோ இல்லாத இப்பிரதேசத்தில், எவ்வாறு கருங்கல் கோயில் அமைக்கப்பட்டதென்பது சிந்தனைக்குரியது.

ஏற்கனவே கூறியபடி மண்முனைப் பிரதேசம் அம்பிளாந்துறை, காப்புமுனை (முனைக்காடு), கொங்குகாசி, அம்பன்பிட்டி முதலிய இடங்களை உள்ளடக்கியிருந்தது. தாந்தாமலை, கொத்தனார் துறை முதலிய இடங்கள் இப்பிரதேசத்துக்கு அண்மையில் உள்ளன. இவ்விடங்களில் கருங்கற் பாறைகள் நிறைய உள்ளன. எனவே மேற்படி கோயிலுக்குத் தேவையான கற்பாறைகளை இங்கிருந்துதான் கொண்டு வந்திருக்க வேண்டும் இதற்கு ஆதாரமான சில தகவல்கள் உள்ளன.

தற்போது கொத்தியாபுலை என்னும் இடம் முன்பு கொத்தனார் துறை என அழைக்கப்பட்டது. தூண்களைப் பொழியும் கல்தச்சர்கள் இங்கு வாழ்ந்த காரணத்தினாலேயே அவ்விடத்திற்கு இப்பெயர் வந்ததென்பதை ஊகிக்கலாம்.

தற்போது தாந்தாமலை என்னும் இடம் முன்பு ''தாண்டவமலை'' எனவும், அங்கு தான்தோன்றீஸ்வரர்

ஆலயத்தின் பொக்கிஷங்கள் மறைத்து வைக்கப்பட்டதால் "பொக்கிஷமலை" எனவும் அழைக்கப்பட்டது.

மேலும், மண்முனைப் பிரதேசத்திலுள்ள கொத்தியாபுலை, வெட்டயச் சேனை, புளியடிமடு முதலிய கிராமங்களில் பண்டைய ஆலயங்களின் இடிபாடுகள் இன்னும் காணப்படுகின்றன. காடடர்ந்த இவ்விடங்களில் மக்கள் வெளியாக்கி பழைய இடிபாடுகளைக் கண்டுபிடிப்பதுடன் அவ்விடங்களில் வழிபாட்டுத் தலங்களையும் அமைத்து வருகிறார்கள்.

அண்மையில், கொத்தியாபுலையில், கோயிலுக்கான அத்திவாரம் வெட்டியபோது, நாகக்கல் புடைப்புச் சிற்பம் (கருங்கற் பொழிவு) ஒன்று கண்டெடுக்கப்பட்டது.

இவ்விடத்தில் பொழியப்பட்ட கற்றூண்கள், சிற்பங்கள் முதலியன கோயில் தளத்துக்குக் கொண்டு செல்லப்பட்டன. மேலும் கோயில் அமைக்கும் மேஸ்திரிகள் (கொத்தனார்) வாழ்ந்த இடமான கொத்தனார் துறையில் இந்தியாவிலிருந்து வரவழைக்கப்பட்ட ஆலய மேஸ்திரிகளும், கல்தச்சர்களும் தங்கியிருந்து, கோயில்தளம், ஆலயம் அமைப்பதில் ஈடுபட்டிருக்க வேண்டும்.

மாகோன் காலத்தில் இப்பிரதேசம் (மண்முனைப் பிரதேசம்) மிகவும் பிரபல்யம் பெற்றிருந்தது. அவன் பொலன்னறுவையை விட்டு நீங்கியபின், இப்பிரதேசம் புறக்கணிக்கப்பட்ட நிலையை அடைந்தது. ஆனாலும் இப்பிரதேசமே மட்டக்களப்பு என வழங்கப்பட்டது.

பின்னர் கி.பி. 1505ல் போத்துக்கேயர் இலங்கைக்கு வந்தபோது, சைவ ஆலயங்கள் பெரும் சோதனைக்குள்ளாகின. 1627ல் அசவிடோ என்னும் போத்துக்கேயத் தளபதி பல சைவ

ஆலயங்களை அழித்தான். அழிக்கப்பட்ட ஆலயங்களுள் கோயில்குளம் ஆலயமும் ஒன்று எனக் கொள்ளலாம்.

## 8. பண்டைப் பெருமை நிலைநிறுத்தப்பட வேண்டும்

மேற்கூறிய விடயங்களைப் பார்க்கும்போது, திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம் போன்ற ஆலயங்கள் எவ்வாறு ஒருகாலத்தில் மங்கி, மறைந்து, மீண்டும் தத்தம் பண்டைப் பெருமையைப் பெற்றனவோ, அவ்வாறே கோயில்குளமும் தனது பண்டைப் பெருமையைப் பெற வேண்டும் என்ற எண்ணம் எழுகிறது.

முற்கூறிய இரு ஆலயங்களிலும், அவற்றின் தொன்மைக்கான சான்றுகள் கிடைத்ததும், பொதுமக்கள் கவனம் அவற்றில் ஈர்க்கப்பட்டது. சமயப்பிரமுகர்கள் கோயில் புனரமைப்பு வேலைகளில் ஈடுபட்டு, அவற்றை இன்றைய நிலைக்குக் கொண்டு வந்தனர்.

ஆனால் அந்த அதிர்ஷ்டம் கோயில்குளத்துக்குக் கிடைக்கவில்லை.

இன்றுள்ள இனக்கலவர சூழ்நிலையில், அத்தகைய புனரமைப்பு வேலைகள் உடனடியாகச் சாத்தியமாகாவிட்டாலும் எதிர்காலத்திலாவது அது நிறைவேற வேண்டும்.

இவ்விடயத்தில் இந்துப் பெருமக்கள் மனங்கொள்ள வேண்டிய சிந்தனை இதுதான் - ''காசிலிங்கம், காசியில் மட்டுமே கிடைப்பது. அத்தகைய அபூர்வமான ஒரு காசிலிங்கம், இருந்த ஆலயம் நம் மண்ணில் இருந்திருக்கிறது. அந்த இடத்தில் புதிய ஆலயம் அமைக்கப்பட வேண்டும். காசிலிங்கம் பிரதிட்டை செய்யப்பட வேண்டும். சாஸ்திரோக்தமாக இப்பணி நிறைவேற்றப்பட வேண்டும்.''

# மண்முனை மேற்குப் பிரதேசம்

## 1. கிழக்கிலங்கையின் தொன்மை

இலங்கையில் மிகவும் தொன்மைவாய்ந்த பிரதேசம் கிழக்கிலங்கையாகும். தாவரவியல், தொல்லியல், மண்ணியல் ஆய்வுகள் மூலம் இவ்வுண்மை நிறுவப்பட்டுள்ளது.[1]

இலங்கை சுதந்திரம் பெறும் வரை கிழக்கு மாகாணம் முழுவதும் ஒரு அரசாங்க அதிபரின் கீழ் இருந்தது. தற்போது இப்பிரதேசம் மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை என 3 மாவட்டங்களை உள்ளடக்கியுள்ளது.

புல்மோட்டை முதல் குமணை வரை நீண்டு பரந்துள்ள கிழக்கிலங்கையில் ஆதித் திராவிட மக்கள் வாழ்ந்தனர். இவர்களின் வழிவந்த இயக்கர், நாகர் முதலியோரும் இப்பிரதேசத்தில் வாழ்ந்தனர். இவர்களை ''மகாவம்சம்'' அமானுஷ்ய மனிதர்களாக குறிப்பிட்டாலும், பிற்காலத்தில் வந்த பிரசித்தி பெற்ற ஆய்வாளர்களான செழிக்மன் (Sheligman), மஜூம்தார் (Majumdar), சட்டர்ஜி (Chatterji) முதலிய ஆய்வாளர்கள் உண்மையை நிறுவியுள்ளனர். இயக்கர், நாகர் வழி வந்தவர்களே இப்பிரதேசத்தில் வாழ்ந்த வேட இன மக்கள் எனவும் இவ்வாய்வாளர்கள் கருதுகின்றனர்.[2]

கிழக்கிலங்கையின் ஆதிக் குடிகளான வேடர்களைக் கொண்டே இப்பிரதேசத்தின் தொன்மையையும் நிறுவ முடிகிறது. கிழக்கிலங்கையிலுள்ள விந்தன, வெல்லச, பிபிலை முதலியன வேடர்கள் வாழ்ந்த முக்கியமான பிரதேசங்களாகும்.

குமணை, பாணமை முதலிய இடங்களில் அண்மைக் காலம்வரை வேடர்கள் வாழ்ந்திருந்ததை நாம் அறிவோம். இவர்களுடைய "வேல்" வணக்கம் மிகத் தொன்மையானது. அதுவே பின்னர் முருக வணக்கமாக மாறியது என்பது குறிப்பிடத்தக்கது.

## 2. பண்டைய மட்டக்களப்புப் பிரதேசம்

பண்டைய மட்டக்களப்புப் பிரதேசத்தில் இடம் பெற்றிருந்த சிங்களப் பிரிவுகள் பற்றி, இலங்கையின் தொல்லியல் ஆணையாளராக மிக நீண்ட காலம் பணியாற்றிய டாக்டர் பரணவிதான பின்வருமாறு குறிப்பிடுகிறார்:[3]

i.) மியுன் கண வெகர (மண்முனைப்பற்று).

ii.) தமன, பறாகாகல, ரஜகல, உகன, உப்பிற்றிகல, வடினாகல, காலகம (வெவகம்பற்று).

iii.) அம்பாறை, மல்வத்தை (சம்மாந்துறைப்பற்று).

iv.) கல்லோடை, குருவில, மொட்டையாகல, முல்லைக் கொழுந்துமலை (அக்கரைப்பற்று).

v.) றொட்டகல, கிளுவான, கிரிபொக்குணகல. கோணகல, குடும்பிகல, நாவலர் குளம், நிலகிரிசாய, பாணமை, றெட்டகுளம், திசலானகம், சங்கமன்கண்டி, வெகரதந்த, விகாரகல.

இவ்விடங்களில் வேடர்கள் வாழ்ந்தமை குறிப்பிடத்தக்கது. இவ்விடங்களைச் சுற்றியுள்ள விந்தன, வெல்லச, பிபிலை, மகியங்கணை, தமன, குமன, உகந்தை, மகாஓயா, அறுகம்பை, கல்மடு முதலிய இடங்களிலும் வேடர்கள் வாழ்ந்தனர்.

இது ஒரு புறம் இருக்க, தீகவாபி, உகந்தை, கதிரவெளி முதலிய இடங்களில் கண்டெடுக்கப்பட்ட ஒருதலை, இருதலை, முத்தலைச் சூலங்கள், பெருங்கற்காலத் தாழிகள் முதலியன இப்பிரதேசங்களில் ஆதித் திராவிடர் வாழ்ந்தமைக்குச் சான்றாகின்றன.[4]

இதிகாச புருஷனான இராவணன் தென்னிலங்கையை ஆட்சி செய்தான் என்பதும், இவனுக்குப் பின் குபேரன், அயோத்தி நாகர், குருதலநாகர் முதலியோர் இப்பிரதேசத்தில் ஆட்சி செய்தனர் என்பதும், ''மட்டக்களப்பு மான்மியம்'' கூறும் தகவல்களாகும்.[5]

## 3. மண்முனை மேற்குப் பிரதேசமும் மண்முனை இராச்சியமும்

தற்போது மண்முனை மேற்கு, மண்முனை தென் மேற்கு என அழைக்கப்படும் பிரதேசங்களே அக்காலத்தில் மட்டக்களப்பின் முக்கிய பகுதிகளாக இருந்தன. போர்த்துக்கேயர் புளியந்தீவில் கோட்டை அமைத்த பின்னரே தற்போதைய மட்டக்களப்பு உருவாகியது என்பது வரலாறு.

படுவான்கரைப் பகுதியை உள்ளடக்கிய பிரதேசத்தில் முன்பு மண்முனை ராச்சியம் இருந்தது. இதனை உலகநாச்சி என்னும் கலிங்க இளவரசி நிறுவினாள். இவள் மேகவண்ணன் காலத்தில் (கி.பி. 2ம் நூற்றாண்டு) கலிங்கதேசத்திலிருந்து இலங்கைக்கு வந்தவள். மேகவண்ணனிடமிருந்து அன்பளிப்பாக மண்முனைப் பிரதேசத்தைப் பெற்றவள். இதைப் பற்றிய குறிப்புகள் 'மகாவம்சம்', 'மட்டக்களப்பு மான்மியம்' ஆகிய இரு நூல்களிலும் உள்ளன.[6]

உலகநாச்சி கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தைக் கட்டினாள் என்றும் வரலாறு கூறுகிறது. மட்டக்களப்பு மான்மியத்திலும் இது பற்றிய குறிப்பு உள்ளது.[7]

அக்காலத்தில் போரதீவு, மண்டூர், பழுகாமம் முதலிய இடங்களும் பண்முனை ராச்சியத்தில் அடங்கியிருந்தன. இதற்குச் சான்றாக இங்கு கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டுக்கள், நாணயங்கள் முதலியன உள்ளன. மட்டக்களப்பு மான்மியமும் இவ் விபரங்களைத் தருகிறது.

உலகநாச்சியின் காலத்தில் கோவில் குளத்தில் ராஜ கோபுரத்தோடு கூடிய சிவன் கோயில் ஒன்று உருவானது (பின்னர் இது அழிவுற்றது). மண்முனை ராச்சியத்தில் (மட்டக்களப்பு ராச்சியம்) ஆட்சிபுரிந்த மன்னர்களின் விபரங்களை மட்டக்களப்பு மான்மியம் விரிவாகக் கூறுகிறது.[8]

## 4. மண்முனை மேற்குப் பிரதேச அமைவிடம், எல்லைகள்

இன்றைய மண்முனை மேற்கு செயலகப்பிரிவு, வடக்கே மட்டக்களப்பு வாவியையும், தெற்கே ஒதியங்குடா, அடைச்ச கல்குளம் முதலிய இடங்களையும் கிழக்கே பன்சேனை முதலிய ஊர்களையும், மேற்கே கெமுத்திமடு, உன்னிச்சைக் குளம் ஆகியவற்றையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது.

'படுவான்கரை' என அழைக்கப்படும் இப்பிரதேசத்தில் தொல்லியல் எச்சங்கள் அதிகம் உள்ளன. ஆனால் இப்பிரதேசத்தில் மேலாய்வு (Exploration), அகழ்வாய்வு (Excavation) இன்றுவரை மேற்கொள்ளப்படவில்லை. அதனால் இவ்வெச்சங்கள் நமக்குக் கிடைக்கவில்லை. தற்போது கிடைக்கும் சான்றுகளையும், கல்வெட்டுகளையும், நாணயங்களையும், பாரம்பரிய நிகழ்வுகளையும், கர்ணபரம்பரைக் கதைகளையும், இலக்கிய ஆதாரங்களையும் கொண்டே இப்பகுதி வரலாற்றினை நாம் நிர்ணயிக்க வேண்டியுள்ளது.

வரலாற்றுக்கு முற்பட்ட காலப்பகுதியில், இலங்கையில் இரத்தினபுரி, பலாங்கொடை, சப்பிரகமுவா முதலிய இடங்களில்

தொல்காலப் பாறைகள் காணப்பட்டன. ஆதித்திராவிட இன மக்கள் இங்கு வாழ்ந்துள்ளனர்.[9]

இன்றும் இப்பிரதேசங்களில் காணப்படும் குடியிருப்புக்கள், கற்கால மனித வாழ்க்கையை நினைவூட்டுவதாக உள்ளன. இவ்வாறே மண்முனை மேற்குப் பிரதேசத்தை உள்ளடக்கிய உன்னிச்சை, சிப்பிமடு, பழங்குடியிருப்புமடு முதலிய இடங்கள் வேடர் இன மக்கள் இன்றும் வாழும் இடங்களாக உள்ளன.

இவ்விதமே கற்காலம், வரலாற்றுக் காலங்களினூடாக இவ்வினம் வாழ்ந்து வந்துள்ளது. இவ்வினத்தின் தனித்துவம் பேணப்பட்டதால் இத்தகவலை நாம் பெற்றுக்கொள்ள முடிகிறது. இவ்வாறே மண்முனை மேற்குப் பிரதேசத்தின் தனித்துவம் பேணப்பட்டதால் அதன் தொன்மையை நாம் இன்றும் காணமுடிகிறது.

## 5. நாகர்களும், மண்முனைப் பிரதேசமும்

இலங்கையின் ஆதிக்குடிகளின் வழிபாடு இயற்கை வழிபாடாக இருந்தது. கல், மரம், கொடி, சந்திரன், சூரியன் இவர்களது வணக்கத்தில் இடம் பெற்றிருந்தன. அதைத் தொடர்ந்து வேல் வணக்கம் இடம் பெற்றது. பின்னர் நாகவழிபாடும் இடம் பெற்றது. இவ்வாதிக்குடிகளின் வழிவந்த வேடர்களிடம் இன்றும் இவ்வழிபாட்டு முறைகளைக் காண முடிகிறது.

நாம் மேலே குறிப்பிட்ட வணக்க முறைகளுக்கு ஆதாரமாக, இப்பிரதேசத்தில் உள்ள மலைக் குகைகளிலும், மலைப்பாறைகளிலும் உள்ள பிராமிக் கல்வெட்டுகளும் இக்கல்வெட்டுகளிலே காணப்படும் நாக, சிவ, வேல் முதலிய சொற்களும், நாக சிற்பங்களும் ஆதாரமாக அமைகின்றன.

மண்முனை மேற்குப் பிரதேசத்தில் உள்ள கொத்தியாபுலை என்னுமிடத்தில் கண்டெடுக்கப்பட்ட நாகசிற்பமும், அதனுடன் இருந்த கைப்பிடி (கருங்கல்) சுவரும் இப்பிரதேசத்தில் நிலவிய நாக வழிபாட்டுக்குச் சான்றாகின்றன.[10] இவை தற்போது மட்டக்களப்புக் கச்சேரியில் உள்ள அரும்பொருட்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளன.

## 6. பெருங்கற்காலப் பிராமிக் கல்வெட்டுகள்

மண்முனை மேற்குப் பிரதேசத்தின் மேற்கே பல கருங்கற் குன்றுகள் உள்ளன. இங்கு, சில குன்றுகளில் கற்படுக்கைகளுடன் கூடிய குகைகள், பிராமிக் கல்வெட்டுகள், கற்தூண்கள் முதலியன காணப்படுகின்றன. பொதுவாக, கிழக்கு மாகாணத்தின் தென்பகுதியில் காணப்பட்ட பிராமிக் கல்வெட்டுகளின் எழுத்துக்கள், அசோக பிராமிக்கு முற்பட்டவை எனப் பிரபல கல்வெட்டு ஆய்வாளர் ஐராவதம் மகாதேவன் கருதுகிறார்.[11]

மண்முனை மேற்குப் பிரதேசத்தின் மேற்கு எல்லையில் காணப்படும். "குசலன் கந்த" என்னும் மலையில் மேற்படி பிராமி எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன.[12] இவை நாக அபய, திச, உதி, காமினி முதலிய சொற்களைக் கொண்டுள்ளன.[13]

## 7. அடையாளம் காணப்படாத இடிபாடுகள்

தற்போது மண்முனை மேற்குப் பிரதேச செயலகம் உள்ள இடத்திலிருந்து சுமார் இரண்டு மைல்களுக்கப்பால் முள்ளாமுனை என்னுமிடமுள்ளது. இங்கிருந்து வயல்வெளியினூடே வடக்கே சென்றால் வாழைச்சேனையை அடையலாம். இங்கு தனியார் வயல் ஒன்றில் பல இடிபாடுகள்

காணப்படுகின்றன. கற்தூண்கள், தூண்களை நிறுத்தும் கற்பீடங்கள், கற்தூண்களின் அடிப்பகுதி (Pedestal), தட்டையான ஓடுகள், சுட்ட களிமண்ணினால் ஆன குழாய்கள் முதலியன கண்டெடுக்கப்பட்டன. இவை தற்போது மட்டக்களப்புக் கச்சேரி அரும்பொருட் காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளன.

இவ் இடிபாடுகள், இங்கிருந்த மாளிகை அல்லது பிற வசிப்பிடத்தை சேர்ந்தவையாக இருக்கலாம். மண்முனை மேற்குப் பிரதேசத்தில் உள்ள 'புளியடிமடு' கிராமத்தில் காளி கோயில் அமைப்பதற்காக நிலத்தை வெட்டி வெளியாக்கியபோது, பல நாணயங்கள், வெண்கலச் செம்புகள் முதலியன கண்டெடுக்கப்பட்டன. அங்கு கிணறு வெட்டும் போதும் பல நாணயங்கள் கிடைத்தன. இவ்விதம் கிடைக்கும் தொல்பொருள்களை தனியார் தன்வசமாக்கிக் கொள்வதால், தமிழ் இனத்தின் வரலாறே மூடி மறைக்கப்படுகிறது.

புளியடிமடு சோழர் காலத்தில் சிறப்புப் பெற்றிருந்த பிரதேசம் என அறிய முடிகிறது. கரவெட்டியில் உள்ள காளிகோயிலும் இத்தகைய பழமை வாய்ந்ததே.

புளியடிமடு, வெட்டயச்சேனை, கொத்தியாபுலை முத :பிய ஊர்களும், இவ்வாறு பழமைவாய்ந்தவையே. ஆனால் இப்பிரதேசங்களில் கிடைத்த பல தொல்பொருட்கள் தனியார் கைகளுக்குச் சென்றுவிட்டன.

### 8. தற்போதைய மண்முனை தென்மேற்கு

மண்முனை மேற்குப் பிரதேசம் நிர்வாக வசதிக்காக, மண்முனை மேற்கு, மண்முனை தென்மேற்கு எனப் பிரிக்கப்பட்டது. மண்முனை தென்மேற்கு இன்றைய பட்டிப்பளை பிரதேசத்தைக் குறிக்கிறது.

தான்தோன்றீஸ்வரர் ஆலயமும் (கொக்கட்டிச்சோலை) அதைச் சுற்றியுள்ள ஊர்களும் இதில் அடங்கும். சில மைல் தொலைவில் உள்ள தாந்தாமலையும் அதற்கு அப்பால் உள்ள உழகல்மலை, வழகல்குளம், திவுலான, நாதனை, புழுகுநாவி முதலிய பிரதேசங்களும் பழமை வாய்ந்தவை ஆகும்.

புழுகுநாவிக் குளத்தில் உள்ள விகாரமலை என்னுமிடத்தில் கற்படுக்கைகள், கல்வெட்டுக்கள் முதலியன காணப்படுகின்றன. நவகிரி, திக்கோடை, வம்மியடி ஊற்று முதலியனவும் பழம்பெரும் கிராமங்களாகும். இவையும் மண்முனை மேற்குப் பிரதேசத்தைச் சேர்ந்த கிராமங்களே (செயலகப் பிரிவு அல்ல).

தாந்தாமலைக்கு இப்பால் உள்ள பன்சேனை, சாமந்தி ஆறு, கற்சேனை, நாதனை, வம்மியடி ஊற்று, நவகிரி, அம்பிளாந்துறை, கரவெட்டி முதலிய கிராமங்கள் தனித்தனி வன்னிமையின் ஆட்சியின் கீழிருந்தன. ஒவ்வொரு வன்னிமையின் கீழும் சுமார் ஐநூறுக்கு மேற்பட்ட ஏக்கர் நெற்காணிகள் இருந்தன என்றும் கர்ணபரம்பரைக் கதைகள் கூறுகின்றன. படுவான்கரைப் பிரதேசத்தை கிழக்கிலங்கையின் நெற்களஞ்சியமாக்கிய பெருமை இந்த வன்னிமைகளையே சேரும்.

இப்பிரதேசத்தில் நாகரிகமடைந்த மக்களாக முக்குவ இனமும், நாகரிமடையாத ஆதிக் குடிகளாக வேடர் இனமும் வாழ்ந்துள்ளனர். சிப்பிமடு, உன்னிச்சை முதலிய இடங்களில் வாழும் வேடர்கள் இப்பிரதேசத்தின் பழமைக்குச் சான்றாகின்றனர்.

### 9. நாணயங்கள்

மண்முனை மேற்குப் பிரதேசம் நீண்டகால வரலாறும் பாரம்பரியமும் கொண்டது என்பதை முன்னர் குறிப்பிட்டோம்.

இதனை ஆங்காங்கே கிடைக்கும் நாணயங்கள் மூலமும் அறிய முடிகிறது.

இவ்வாறு கிடைக்கும் நாணயங்கள் மற்றும் தொல்பொருள் எச்சங்களைச் சிலர் மறைத்துத் தம்முடன் வைத்துக் கொள்கின்றனர். கொத்தியாபுலை, வாழைச்சேனை முதலிய இடங்களில் கிடைக்கப் பெற்ற நாணயங்கள் 43. கொத்தியாபுலையைச் சேர்ந்த சிவகுரு, வட்டவிதானையாரால் மட்டக்களப்புக் கச்சேரியில் உள்ள அரும்பொருட் காட்சியகத்துக்கு வழங்கப்பட்டன. அவற்றின் கால விபரம் வருமாறு :

அ.) ஸ்ரீ தம்மாசோக தேவகாலம் (கி.பி. 12ம் நூற்றாண்டு)

ஆ.) ஸ்ரீ மச்சகசமல்ல காலம் (கி.பி. 12ம் நூற்றாண்டு)

இ.) ஸ்ரீ ராகலீலாவதி காலம் (கி.பி. 12ம் நூற்றாண்டு)

ஈ.) ஸ்ரீ புவனேகபாகு காலம் (கி.பி. 12ம் நூற்றாண்டு)

இவர்கள் காலத்து நாணயங்கள் இப்பிரதேசத்துக்கு எப்படி வந்தன? அதை இலகுவாக ஊகிக்கலாம். மேற்படி நாணயங்கள் புழக்கத்திலிருந்த காலத்தில் பொலனறுவையை ஆண்ட மன்னர்கள், மட்டக்களப்புக்கு வருகை தருவது வழக்கமாக இருந்தது. அச்சமயத்தில் இந்நாணயங்கள் வந்திருக்கலாம்.

ஆனால் சிலர் இந்நாணயங்களை ஆதாரமாகக் கொண்டு, மட்டக்களப்புப் பிரதேசம், பொலனறுவையை ஆண்ட சிங்கள மன்னர்களின் ஆட்சியில் இருந்தது எனத் தவறாகக் குறிப்பிடுகின்றனர். அவ்விதம் கூறுவதற்கு ஆதாரங்கள் எதுவுமேயில்லை.

உண்மை என்னவென்றால், பொலனறுவையில் அரசியல் குழப்பம் ஏற்படும் போதெல்லாம், மன்னர்கள் அங்கிருந்து ஓடிவந்து ஒளியும் இடங்களாக கிழக்குப் பிரதேசம் அமைந்திருந்தது. உறுகுணை இராச்சியமாக அன்று இருந்த இப்பிரதேசத்தில், தமிழகப் படையெடுப்புக்களின் போதும் சிங்கள மன்னர்கள் தப்பிவந்து தஞ்சம் புகுந்தனர்.

**10. கண்டியக்கட்டு**

கண்டியக்கட்டு என்பது மட்டக்களப்பிலிருந்து பழுகாமம் ஊடாகக் கண்டி செல்லும் ஒரு பாதையாகும். இப்பாதை கொத்தியாபுலையை ஊடறுத்துச் சென்று மண்முனை, பழுகாமம், ஊடாகக் கண்டி நோக்கிச் சென்றது. கண்டி நாயக்க மன்னர் காலத்தில் இப்பாதை அதிக புழக்கத்திலிருந்தது. நாயக்க வம்சத்தினர் இந்துக்களாக இருந்த காரணத்தினால் மட்டக்களப்பிலுள்ள தான்தோன்றீஸ்வரம், மண்டூர் முதலிய தலங்களுக்கு வந்து வழிபட்டுச் சென்றனர். ஆலயங்களுக்கு நிவந்தமும் வழங்கினர்.

கலிங்க மாகோன், பொலன்னறுவையை ராஜதானியாகக் கொண்டு 40 வருடங்கள் இலங்கையில் ஆட்சி செய்தான் (கி.பி. 1215-1255). இவன் காலத்தில் மட்டக்களப்பு - பொலன்னறுவை பிரதேசங்களுக்கிடையில் நேரடித் தொடர்புகள் இருந்தன. இதன் காரணமாகவும் சிங்கள மன்னர் காலத்து நாணயங்கள் மட்டக்களப்புக்கு வந்திருக்கலாம் (பார்க்க "மாகோன் வரலாறு" - க. தங்கேஸ்வரி).[15]

கலிங்க மன்னர்கள் காலத்தில், மகிழவட்டவான், பங்குடாவெளி, மண்முனை, பழுகாமம், மண்டூர், போரதீவு, குறுமண்வெளி முதலிய கிராமங்கள் சிறப்புப் பெற்றிருந்தன. கொத்தியாபுலை என இன்று வழங்கப்படும் மண்முனை மேற்குப்

பிரதேசம் அக்காலத்தில் கொத்தனார்துறை என வழங்கப்பட்டது. படுவான்கரைப் பிரதேசத்திலிருந்து மண்முனை இராச்சியத்திற்குப் பொருட்களைக் கொண்டு செல்லும் வழக்கம் இருந்தது. இதனால் இப்பிரதேசம் புகழ்பெற்றிருந்தது. அதன் காரணமாகவே, பிற்காலத்தின் ஆங்கில ஆட்சியின்போது இப்பிரதேசத்தை மையப்படுத்தி, மண்முனை வடக்கு, மண்முனை தெற்கு என மட்டக்களப்பைப் பிரித்தனர்.

## 11. மண்முனையும், கோவில் குளமும்

உலகநாச்சியின் காலத்தில் கோவில்குளம் என்னும் ஊர் மண்முனை ராச்சியத்தில் முக்கிய தலமாக விளங்கியது. கோவில்குளத்தில் உயர்ந்த சிகரத்துடன் கூடிய ஒரு சிவன் கோவில் இருந்து பின்னால் அழிந்துவிட்டது. இங்கு கண்டெடுக்கப்பட்ட பளிங்கு லிங்கம், கந்து விளக்கு, உடைவுகள் முதலியன ஒரு வீட்டில் பெட்டகத்தில் வைத்துப் பாதுகாக்கப்படுகின்றன.

இவ்வாலயத்துக்கு கொத்தனார் துறையில் (கொத்தியாபுலை) இருந்தே கற்றூண்கள், சிற்பங்கள் முதலியன கொண்டு செல்லப்பட்டன. கொத்தியாபுலையில் கிடைக்கும் சிற்ப எச்சங்கள் இதனை நிரூபிக்கின்றன. இங்கிருந்து கிடைக்கப்பெற்ற நாகசிற்பக்கல் (புடைப்புச் சிற்பம்), கைப்பிடிச் சுவர் முதலியன தற்போது மட்டக்களப்பு கச்சேரியில் உள்ள அரும்பொருட்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளன என்பதை முன்பே குறிப்பிட்டுள்ளோம்.

மிகப் பழங்காலத்தில் சிற்பங்கள் எதுவுமின்றியே வாசற்படிச்சுவர், கைப்பிடிச்சுவர் முதலிய கருங்கல்லில் பொழியப்பட்டன. அந்தவகையில் மேற்குறித்த சிற்பமும்,

கைப்பிடிச்சுவரும் கி.பி. 4ம் நூற்றாண்டைச் சேர்ந்தவை எனக் கொள்ளலாம்.

கொத்தியாபுலையிலிருந்து சிறிது தூரத்திற்கப்பால் நெடுஞ்சேனை என்னுமிடத்தில் கண்டெடுக்கப்பட்ட பிள்ளையார் சிலை ஒன்றும் அங்குள்ள சிறிய கோயில் ஒன்றில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. கொத்தியாபுலைக்கு அண்மையிலே, வரலாற்றுப் புகழ்பெற்ற கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயம் அமைந்துள்ளது. அதையடுத்துத் தாந்தாமலை என்னும் பழம்பதியும் சிறிது தூரத்தில் அமையப் பெற்றுள்ளது.

## 12. மண்முனை மேற்குப் பிரதேசமும், முக்குவ இனத்தவரும்

மட்டக்களப்பில் ஆதித்திராவிடர், இயக்கர், நாகர் இவர்களின் வழிவந்த வேடர்கள் முதலியோர் வாழ்ந்திருந்தனர்.

பிற்காலத்தில் கலிங்கர், சிங்கர், வங்கர், முக்குவர், வேளாளர், கம்மாளர் எனப் பல குடியினர் மட்டக்களப்பில் குடியேறினர். இவர்களுள், கலிங்கர், முக்குவர் என்போர் இப்பிரதேசத்தில் அதிக காலம் ஆட்சி செய்துள்ளனர்.[16]

மண்முனை மேற்கு, மண்முனை தென்மேற்கு, பிரதேசங்களில் முக்குவ இன மக்களே அதிகம் வாழ்கின்றனர். ஒரு காலத்தில் மட்டக்களப்புப் பிரதேசம் முழுவதுமே முக்குவதேசம் என அழைக்கப்பட்டது. இன்றும் இம் முக்குவ இன மக்களே இப்பிரதேசம் முழுவதும் பரந்து வாழ்கின்றனர்.

இவர்களை (அ) குகன் குலத்தவர் (ஆ) முகுளி நாகர் (இ) வன்னியர் (ஈ) சேர நாட்டவர் (கேரள முக்குவர்) (உ) கலிங்க, படையாட்சி குடியினர் எனப் பலபடக் கூறுவர். முக்குவர், வன்னியர் எனவும் இவர்கள் படைக்கலப் பயிற்சி பெற்ற

மலைவாசிகள் எனவும் ஒரு கருத்து நிலவுகிறது.[17] இதனை வலியுறுத்தும் முகமாக இவர்கள் ''வன்னியர்'' எனச் சிறப்புப் பெயர் பெற்றனர் என அர்த்தசாஸ்திரம் கூறுவதையும் குறிப்பிடுவர். தொண்டைமண்டலத்து ஆதிக் குடிகளையும் குறும்பர், வேடர், வன்னியர் என வகுத்துக் கூறுவர்.[18] போரில் ஒருவன் தீரச்செயல் புரிந்தால் அவனை ''வன்னியன்'' என்ற பட்டப் பெயரால் அழைத்தனர்.

பல்லவர் படையில், குறும்பர் இருளர் முதலியோர் போர்ப் பயிற்சி பெற்றபின் ''வன்னியர்'' என அழைக்கப்பட்டனர்.[19] சோழப் பேரரசின் ''வேலைக்காரப் படையினரை''யும் வன்னியர் என அழைத்தனர்.[20] எனவே முக்குவர் என்போர் படைக்கலப் பயிற்சி பெற்ற போர்வீரர் என்பதும் பெறப்படுகிறது.

## 13. வன்னியரே முக்குவர் ஆயினர்

பாண்டியர் காலத்துப் ''பெரும்படையினர்'' வன்னியர் என்றே அழைக்கப்பட்டனர். கலிங்கப் பேரரசின் கீழ் ''வன்னியர்'' என்போர் குறுநிலத் தலைவர்களாக இருந்தனர். ஈழத்தில் கலிங்கமாகன் வன்னியர்களைக் குடியமர்த்தினான். குளக்கோட்டன் கிழக்கிலங்கையில் வன்னியர்களைக் குடியமர்த்தினான். இக்குறிப்புக்கள் முக்கியமானவை. ''முக்குவர்'' என்போர் படையாட்சி வன்னியர் எனக் கூறுகிறார் ஆய்வாளர் சேதுராமன். இம்முக்குவர் சேர நாட்டிலிருந்து வந்தவர்கள் என்பாரும் உளர். இதற்கும் ஆதாரம் உள்ளது. கலிங்க மாகன் இலங்கைக்கு வந்தபோது, அவன் படையில் ''மலபார் வீரர்கள்'' என்ற மலையாளப் போர் வீரர்கள் முக்கிய இடம் பெற்றிருந்தனர். இவர்கள் சேர நாட்டில் ''மலபார்'' பகுதியைச் சேர்ந்த முக்குவர் ஆவர். (இன்றும் சேரநாட்டில் இம்முக்குவர் உளர்).

சோழர் காலத்தில் "தெரிஞ்ச கைக்கோளப் படையினர்" வகித்த இடத்தை கலிங்கர் காலத்தில் "முக்குவர்" வகித்தனர். இவர்கள் தற்போதைய Body Guards போன்ற மெய்க்காப்பாளர் ஆவர்.

மட்டக்களப்புப் பிரதேசத்தில் கலிங்கர் தொடர்பு பல நூற்றாண்டுகளாகத் தொடர்ந்து வந்துள்ளது. உலகநாச்சி என்ற கலிங்க இளவரசி மண்முனைக்கு வந்தது முதல் இத்தொடர்பு ஆரம்பமாகிறது. பின்னர் கி.பி. 1215ல் கலிங்க மாகோனின் வருகையுடன் இத்தொடர்பு மேலும் வலுப்பெறுகிறது. இவனுடன் வந்த மலபார் (மலையாள) போர் வீரர்கள் மட்டக்களப்புப் பிரதேசத்தில் குடியமர்ந்தனர்.

புவியியல் ரீதியாக, தமிழகம், கேரளம், ஈழம் என்பன கற்காலத்திலிருந்தே ஒரே தன்மையில் அமைந்துள்ளன என ஆய்வாளர் கூறுவர். நல்லியக் கோடன் என்னும் சேரமன்னன் "முக்குவன்" எனக் குறிக்கப்படுகிறான். சேர பரம்பரையினருக்கும், முக்குவருக்குமுள்ள தொடர்பை இக்குறிப்பு எடுத்துக்காட்டுகிறது.

**14. குடிகளின் விபரம் :**

இம்மக்கள் குடிகளாக வகுக்கப்பட்ட விபரம் வருமாறு:

(அ) பூர்வீக குடிகள் வழிவந்த ஆதித்திராவிடர்.

(ஆ) அவர்களின் வழிவந்த இயக்கர், நாகர்.

(இ) இயக்கர், நாகர் வழிவந்த வேடர்கள்.

(ஈ) கரையோரங்களில் குடியேறிக் கலப்புற்றோர்.

(உ) உள்நாட்டில் ஏற்கனவே வாழ்ந்திருந்தோர்.

(ஊ) மலையாளத்திலிருந்து வந்த ஒரு பிரிவினர்.

எனவே முக்குவர் என்போர் மேற்குறித்த ஆறு வகையினரையும் சேர்ந்தவர்கள் ஆகிறார்கள். இன்றும் படுவான்கரைப் பிரதேசத்தில் நிலைத்து நிற்கும் பாரம்பரியங்கள், சாதிவழமை, குடியுரிமை, திருமண சம்பிரதாயங்கள், வாழ்வியல் சம்பிரதாயங்கள், உணவுப்பழக்கவழக்கங்கள், வயற்கள நடைமுறைகள், கோயிற் சடங்குகள் முதலியன முக்குவரின் பூர்வீகத்துக்குச் சான்றாகின்றன.

## 15. மாகோன், குளக்கோட்டன் வகுத்த வன்னிமைகள்

கி.பி. 1215-ல் இலங்கைக்கு வந்த கலிங்க மாகனின் படையில் 14,000 வீரர்கள் இருந்தனர் என ''மகாவம்சம்'' குறிப்பிடுகிறது. அதன் பின்னர் கி.பி. 1223ல் சோழகங்கதேவன் என்னும் குளக்கோட்டன் இலங்கைக்கு வந்த மாகோனுடன் இணைந்து கொள்கிறான்.

மாகோன் தோப்பாவையை (பொலன்னறுவை) கைப்பற்றி 40 வருடங்கள் ஆட்சி செலுத்தினான். வன்னிமைகளை நிறுவி ஆட்சியைக் கட்டுக்கோப்பாக்கினான். குளக்கோட்டன், திருக்கோவில் முதல் வெருகல் வரை வன்னிமைகளை நிறுவி திருகோணமலையிலிருந்து ஆட்சி செய்தான். மாகோன் காளி கட்டம், மருங்கூர், புத்தூர், வீரச்சோலை முதலிய இடங்களில் வன்னியங்களை நியமித்து ''படையாட்சி வன்னியர்கள்'' என்ற பட்டத்தையும் வழங்கினான்.

கோரைக்களப்பு, சிங்காரத்தோப்பு, மலுக்கம்புட்டி, சம்மாந்துறை, நாதனை, மண்டபத்தடி, விளாவெட்டுவான் முதலிய இடங்களில் வன்னிமைகள் நியமிக்கப்பட்டன. இவற்றிலே மண்டபத்தடி, விளாவெட்டுவான் இரண்டும்

தற்போதைய மண்முனை மேற்குப் பிரதேச செயலகப் பிரிவில் அடங்குகின்றன.

முக்குவரது சமயம் வீரசைவமாகும். மட்டக்களப்புப் பிரதேசம் முழுவதும் - குறிப்பாக மண்முனை மேற்கும், மண்முனை தென்மேற்கும், வீரசைவம் நிலை பெற்றுள்ள பிரதேசங்களாகும். இப்பண்புகள் யாவும் முக்குவர்களின் தனித்துவத்துக்குச் சான்றுகளாகும்.

தொகுத்து நோக்கினால்,

i.) மண்முனை மேற்கு, மண்முனை தென்மேற்கு, மண்முனை முதலிய பிரதேசங்கள் மிகவும் தொன்மை வாய்ந்தவையாகும்.

ii.) இப்பிரதேசங்களின் தொன்மை, தொல்லியல் எச்சங்களாலும், வரலாற்றுச் சான்றுகளாலும் நிறுவப்பட்டுள்ளன.

iii.) இங்கு வாழும் முக்குவர்கள் வரலாற்று ரீதியான முக்கியத்துவம் பெற்றவர்கள். ஒரு காலகட்டத்தில் மட்டக்களப்பு முழுவதுமே 'முக்குவதேசம்' என அழைக்கப்படும் அளவுக்கு அவர்களது செல்வாக்கு மேலோங்கியிருந்தது.

iv.) முக்குவர் என்போர் போர்ப்பயிற்சி பெற்ற படை வீரர்களாகவும், வன்னிமைகளாகவும் சிறப்புப் பெற்றிருந்தனர்.


v.) படுவான்கரைப் பிரதேசம் முழுவதும் தனித்துவம் பெற்ற ஒரு தொன்மைப் பிரதேசமாகும்.

## அடிக்குறிப்புக்கள்

1. The Geology of Ceylon - by Prof. Heckel, Vol.II pp.325-326
2. i) The History and Culture of Indian People - by A. Pusalkar, 1960, pp.235
   ii) The Veddhas - By C.G. Sheligmen + Bred Z.Seligmen Cambridge - 1911, pp.419-420
3. Inscriptions of Ceylon by Dr.S. Paranavithana
4. Ancient Ceylon - Journal of the Archaeology Survey of Ceylon - 1971, pp.17.
5. மட்டக்களப்பு மான்மியம் (பதிப்பு FXC. நடராசா (1952)
6. a) மேற்படி நூல் (பக். 43)
   b) Maha Vamsa - Ch.37 Note 92
   c) Epigraphic of India XV pp.246
7. மட்டக்களப்பு மான்மியம் - FXC. நடராசா (பதிப்பு 1952)
8. மேற்படி நூல்
9. Ancient Ceylon - An Account of Aborigines + Part of the Early Civilization, London 1909 - By Parker pp. 15
10. அரும்பொருட்காட்சியகம் - கச்சேரி, மட்டக்களப்பு.
11. பண்டைய தமிழகம் - சி.க. சிற்றம்பலம், திருநெல்வேலி 1991, பக். xiv
12. அரும்பொருட்காட்சியகம், கச்சேரி, மட்டக்களப்பு
13. Inscriptions of Ceylon - By Dr. S. Paranavithana. (கல்வெட்டு இலக்கம் : 339, 451, 459, 487, 513, 602, 609).

14. Coins and Currencies - by HW. Codrington.
15. மாகோன் வரலாறு - க. தங்கேஸ்வரி, மட்டக்களப்பு - 1995.
16. மட்டக்களப்பு மான்மியம் - FXC. நடராசா, பதிப்பு - 1952.
17. Kautilya's Artha Sasthira - Ed. Shama Shastri, Mysore 1961, pp. 372.
18. Analysis of the Mackegie Manuscripts, pp.75-78.
19. Annual Report of the Epigraphy - Madras 1920 (pp. 550-699).
20. South Indian Inscriptions, ARE 1934, 1935
No. 122, 126, 142, 147, 153, 159, 171
ARE. 1934-35 pp.61-65, 1962-600
21. தென்னிந்தியக் கோயில் சாசனங்கள் பகுதி II - III பக். 197
22. குளக்கோட்டன் தரிசனம், 1993 - க. தங்கேஸ்வரி பக் : 28-29
23. என். சேதுராமன், பாண்டியர் வரலாறு
24. மட்டக்களப்பு மான்மியம் FXC நடராசா, பதிப்பு - 1952
25. பண்டைய தமிழகம் - சி.க.சிற்றம்பலம் 1972 (197-198)
26. மாகோன் வரலாறு, க. தங்கேஸ்வரி பக். : 197-198
Chulavamsa, Translated by W. Geuger, Colombo 1930
குளக்கோட்டன் தரிசனம் - க. தங்கேஸ்வரி
1993, பக் : 14-15.


அகணி - 2003 சிறப்புமலர்,
பிரதேச செயலாளர், மண்முனை மேற்கு, மட்டக்களப்பு





குசலன் கந்த மலைப் பாறையிலுள்ள பிராமிக் கல்வெட்டு




குசலன் கந்த மலை



குசலன் கந்தையில் உள்ள ஒரு தூண் கல்வெட்டு



கொத்தியாபுலையில் கண்டெடுக்கப்பட்ட நாக சிற்பம்

# கொக்கட்டிச்சோலைப் பதியின் தொன்மை வரலாறு

## 1. தெட்சணாபதி என அழைக்கப்பட்ட கிழக்கிலங்கை

கிழக்கிலங்கை, தென்கிழக்கிலங்கை உட்பட கிழக்குப் பிரதேசம் ஆதிமனிதன் வாழ்ந்த இடம் என்பதற்குப் பல்வேறு சான்றாதாரங்கள் உள்ளன. உலகின் ஆதிக்குடிமக்களை ''ஒஸ்ரலோயிட்'' இனம் என வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடுவர். இந்த 'ஒஸ்ரலோயிட்' இனமக்களின் வழித்தோன்றல் கிழக்கிலங்கையில் வாழும் வேட இன மக்கள் என்பதைப் பல வரலாற்றாசிரியர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இவர்களுள் பிரபல வரலாற்றாசிரியர்களான மஜூம்தார், செலிக்மன், பானர்ஜி போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

பார்க்க :

i) Heritage and Life of Ceylon, Majumdar - pp. 8, 40, 235

ii) The Veddha by C.G. Sheligman - pp. 419, 430

iii) History and Culture of Indian People by Banerjee.

தென்கிழக்கு, கிழக்குப் பிரதேசம் என்பது கதிர்காமம் முதல் திருக்கோணமலை வரை உள்ள நீண்ட கரையோரப் பகுதியைக் குறித்து நிற்கிறது. இப்பிரதேசத்தில் திருக்கோணேஸ்வரம், தம்பலகாமம், வெருகல், சித்தாண்டி, மாமாங்கேஸ்வரம், கொக்கட்டிச்சோலை, தாந்தாமலை, போரதீவு,

மண்டூர், உகந்தை, திருக்கோயில், கதிர்காமம் முதலிய தலங்கள், ஒரே நிலக்கோட்டில் (Belt) அமைந்திருப்பதை அவதானிக்கலாம்.

இத்தலங்களுள் பெரும்பாலானவை முருகன் தலங்களாகவும் ஒரு சில தலங்கள் சிவத்தலங்களாகவும் அமைகின்றன. மேற்கூறிய பழம்பெரும் பதிகளை உள்ளடக்கிய பிரதேசம் ''தெட்சணபதி'' என அழைக்கப்பட்டது. (தட்சண கைலாசம் என வழங்கப்படும் திருக்கோணேஸ்வரத்தையும் இப்பெயர் குறிப்பிடும்).

**2. சிவபூமி**

திருமூலர், இலங்கையை 'சிவபூமி' எனக் குறிப்பிட்ட போதும், கிழக்குப் பிரதேசத்திலேயே சிவவணக்கம் அதிகம் நிலவியது என்பதை நாம் கருத்திற் கொள்ள வேண்டும். இப்பிரதேசத்தின் தொன்மையும் இதற்கு ஒரு சான்றாகும்.

மக்களின் ஆதிவணக்கம் லிங்க வணக்கமாக இருந்து, பின்னர் அது சிவவணக்கமாக மாறியது. மிகவும் தொன்மைத்தான சிவவணக்கம், கிழக்குப் பிரதேசத்தில் நிலவியது ஆழ்ந்த சிந்தனைக்குரியது. இப்பிரதேசத்தில் வாழ்ந்த ஆதிக்குடிகளின் மூலம் சிவவணக்கம் இப்பிரதேசத்தில் நிலைபெற்று, இன்று வரை தொடர்ந்து வந்துள்ளது. ஆதிக்குடிகளின் வழித்தோன்றல்களான வேடர்கள் இன்றும் கொக்கட்டிச்சோலையை அண்மிய தாந்தமலை, சிப்பிமடு, தும்பாலை, றூகம் முதலிய இடங்களில் வாழ்ந்து வருகின்றனர்.

ஆதிக்குடிகளின் வணக்கமுறை நடுகல் வணக்கத்திலிருந்து ஆரம்பிக்கிறது. ஆதியில் இவர்கள், கல்லையும், வேலையும் வணங்கினர். பின்னர் இது லிங்கவணக்கமாகவும், முருகவணக்கமாகவும் மாறியது என்பது வரலாறு.

இதிகாச பாத்திரமாக உள்ள இராவணன், வெறும் கற்பனைப் பாத்திரமல்ல. நிஜமாகவே இலங்கையில் வாழ்ந்த ஒரு மன்னன் என்னும் கருத்து அண்மைக் காலமாக வலுப்பெற்று வருகிறது. இந்த இராவணன் சிறந்த சிவபக்தன். புகழ்பெற்ற சிவத்தலங்களான திருக்கோணேஸ்வரம், மாமாங்கேஸ்வரம், திருக்கோயில் என்பவற்றுடன் இராவணனைத் தொடர்புபடுத்தும் கர்ணபரம்பரைக் கதைகள் அதன் பின்னணியில் உள்ள வரலாற்று உண்மையைச் சூசகமாக உணர்த்துகின்றன (மாமாங்கேஸ்வரமும், திருக்கோயிலும் ஆதியில் சிவத்தலங்களாகவே இருந்தன). இவற்றைத் தொகுத்து நோக்கும் போது கிழக்குப் பிரதேசமே திருமூலர் குறிப்பிட்ட சிவபூமி எனக் கொள்வதில் தவறில்லை.

## 3. கொக்கட்டிச்சோலையில் நிலவிய தொன்மை வணக்கமுறை

உலகெங்கிலும் ஆதிமனிதனின் வழிபாடு மரவழிபாடாக இருந்தது என்பது ஆய்வாளர் கூற்று. மட்டக்களப்பு பிரதேசத்தில், மண்டூர், கொக்கட்டிச்சோலை, உகந்தை, வெருகல், திருக்கோயில் என்பன மரவழிபாட்டுடன் தொடர்புபட்டதாக இருப்பதை நாம் அவதானிக்கலாம். இத்தலங்களின் தலவிருட்சங்களாக சில விருட்சங்களின் பெயர்கள் குறிப்பிடப்படுகின்றன. ஆதியில் மரங்களை வழிபட்ட மக்கள் பின்னர், மரங்களின் அடியில் தெய்வம் உறைவதாக எண்ணி மரத்தின் அடிப்பகுதியை வழிபட்டனர். அவ்வழிபாட்டுமுறை, கொடிநிலை, கந்தழி, வள்ளி என மூன்று வகையில் அமைந்தது. அவற்றின் விளக்கம் வருமாறு :

i) கொடிநிலை - மரக்கொடியினால் சூழப்பெற்ற மரத்தை வணங்குதல்

ii) கந்தழி - பட்டுப்போன மரத்தின் அடிப்பகுதியை வணங்குதல்

iii) வள்ளி - மரம் பட்டபின் தனியே நின்ற கொடியை வணங்குதல்

மொட்டைமரம் பட்டுப்போக, அவ்விடத்தில் கல் ஒன்று வைக்கப்பட்டது (இன்றும் தெருவோரங்களில் மரங்களின் அடியில் ஒரு கல்லை வைத்து அதற்கு விபூதி சாத்தி கடவுளாக வழிபடுவதைக்காணலாம்). பின்பு அக்கல், மெருகேற்றப்பட்டு லிங்கமாக மாறியது.

கொக்கட்டி மரத்தின் அடியில் சிவலிங்கம் கண்டெடுக்கப்பட்ட கதையை இங்கு நினைவு கூருவோம். ஆதிகால வணக்க முறையின்படி மரத்தின் அடியில் லிங்கம் இருந்து, பலநூறு வருடகால ஓட்டத்தில் மண்ணால் மூடப்பட்டு, காலமும் நேரமும் கனிந்ததும், அந்த லிங்கம் வெளிப்பட்டது. பக்தர்கள் அச்சம்பவத்தைச் சுற்றி ஒரு கதையை உருவாக்கி விட்டனர். அது கதையாக இருந்தாலும், அதன் பின்னணியில் உள்ள ஆதிவணக்க முறையை நினைவு கூர்ந்து, கொக்கட்டிச் சோலைப் பதியின் தொன்மையை உணர்ந்து கொள்வோம்.

### 4. லிங்க வணக்கம் சுட்டும் தொன்மை

சிந்து வெளியிலும், தமிழகத்திலும், பெலாரி மாவட்டம் போன்ற இடங்களிலும், மிகவும் தொன்மைத்தான, புதிய கற்காலப் பகுதியிலும், பெருங்கற் காலப்பகுதியிலும் லிங்க வழிபாடே முக்கியத்துவம் பெற்றிருந்தது. இன்று தமிழகமெங்கும் காணப்படும் பாரிய லிங்கங்களும், லிங்கக் கோயில்களும், இதற்கு ஒரு எடுத்துக்காட்டாக அமைகின்றன.

இவ்வாறே, கிழக்கிலங்கையில் காணப்படும் லிங்கக் கோயில்கள், கிழக்கிலங்கையில் நிலவிய லிங்க வணக்கத்தையும் அதன் தொன்மையையும் சுட்டுவதாக அமைந்துள்ளன.

இலங்கைக்கு விஜயன் வந்தபோது (கி.மு.543) லிங்க வணக்கம் இங்கு நிலவியது. அப்போது இலங்கையில் ஐந்து ஈச்சரங்கள் (லிங்கக் கோயில்கள்) இருந்ததாக சிங்கள வரலாற்று ஆவணமான மகாவம்சமே குறிப்பிடுகிறது. அவையாவன :

i) வடக்கே திருத்தம்பலேஸ்வரம் (வடக்கு)
ii) மன்னாரில் திருக்கேதீஸ்வரம் (வடமேற்கு)
iii) திருக்கோணமலை – திருக்கோணேஸ்வரம் (கிழக்கு)
iv) சிலாபத்தில் – முன்னீஸ்வரம் (மேற்கு)
v) யாழ்ப்பாணம் (நகுலேஸ்வரம்).

இவ்வாறு மகாவம்ச ஆசிரியர்கள் அறிந்தவரை ஐந்து ஈஸ்வரங்கள் இருந்ததாகக் குறிப்பிட்டாலும், அதே காலப்பகுதியில் கொக்கட்டிச்சோலை, தான்தோன்றீஸ்வரம், மட்டக்களப்பு, மாமாங்கேஸ்வரம், திருக்கோயில், வெள்ளை நாவற்பதி முதலிய இடங்களிலும் லிங்கக் கோயில்கள் இருந்தன என்பதை, வரலாற்றுத் தகவல்களின் துணை கொண்டு நாம் அறியக் கூடியதாக இருக்கிறது.

திருக்கோயிலும், மாமாங்கேஸ்வரமும் ஆதியில் லிங்கக் கோயில்களாகவே இருந்தன என்பதை ஏற்கனவே குறிப்பிட்டுள்ளோம்.

### 5. இராவணன் ஆட்சிக்காலத்தில் கொக்கட்டிச் சோலை

இராவணன் ஒரு கற்பனைப் பாத்திரம் அல்ல என்பதை ஏற்கனவே குறிப்பிட்டுள்ளோம். இராவணன் ஆட்சி செய்த இடம்

தென்னிலங்கை என்று தமிழக நூல் ஆசிரியர்கள் குறிப்பிடுவார்கள். அது இலங்கையின் தென்புறத்தைக் குறிப்பதல்ல. தமிழகத்துக்குத் தெற்கே உள்ள இலங்கையையே குறிப்பதாகும்.

இராவணன் பெயர் திருக்கோணேஸ்வரம், மாமாங்கேஸ்வரம், திருக்கோயில் ஆகிய மூன்று தலங்களுடன் தொடர்புறுவதிலிருந்து கிழக்கிலங்கையில் அவன் ஆட்சி நிலவியதை ஊகிக்கலாம். இராவணன் காலத்தில் இப்பகுதி 'தெட்சணாபதி' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இப்பகுதியிலேயே கொக்கட்டிச்சோலை அமைந்துள்ளது. இராவணன் இயக்கர் தலைவன். மகாவம்சம் குறிப்பிடும் இயக்கர் தெய்வங்களான இராவண, விபூஷண, குபேர, மகேஸ, வைஸ்ராவன, பச்சிமாமணி என்னும் பெயர்களிலிருந்தும், இதை அறியலாம். இயக்கர்கள் சிவவணக்கம் உடையவர்கள். அமானுஷ்ய சக்தி பெற்றவர்கள். அதை மிகைப்படுத்தி இயக்கர்கள், இராட்சதர்கள் எனக் கதை கட்டியது மகாவம்சம். இந்த இயக்கர்களின் வழிவந்தவர்கள் பின்னால் வேடர்கள் எனப்பட்டனர்.

கொக்கட்டிச்சோலையில் இவ்வேடர்கள் பழங்காலத்தில் வாழ்ந்தனர் என்பதை 'திடகன்' என்னும் வேடர் தலைவன் உலகநாச்சியிடம் கொக்கட்டி மரத்தில் இரத்தம் வழிவது பற்றிக் கூறிய கதையில் இருந்து அறிந்து கொள்ளலாம்.

## 6. தென்னிலங்காபுரியில் கொக்கட்டிச்சோலை

இலங்கையின் வரலாறு கூறும் மகாவம்சம் விஜயன் இலங்கைக்கு வந்த காலத்திலிருந்து (கி.மு. 543) ஆரம்பிக்கிறது. ஆனாலும் அது சிங்கள மன்னர் ஆட்சி பற்றியே விரிவாகக் கூறுகிறது. விஜயன் வருகைக்கு முன்பிருந்த இலங்கை

பற்றியோ, மகாவம்சம் கூறும் காலப்பகுதியில் இலங்கையின் ஏனைய பகுதிகளில் நிலவிய திராவிட மக்கள் ஆட்சிபற்றியோ எதுவும் கூறவில்லை. ஆனால் பல்வேறு தொல்லியல் தடயங்கள் மூலம், இலங்கையில் நிலவிய பெருங்கற்காலப் பண்பாடுகள், இடைக்கற்காலப் பண்பாடுகள் முதலியவை வெளிப்பட்டுள்ளன. இவை ஆதித்திராவிடர்க்கே உரியவை என்பது வரலாற்றாசிரியர்கள் கண்டறிந்த உண்மை.

அவ்வாறே கதிர்காம க்ஷத்திரியர் காலத்தில் தென்னிலங்கை முழுவதும், தமிழர் ஆட்சியில் இருந்து பின்னர் அது கிழக்கிலங்கை வரை பரந்துள்ளது. மட்டக்களப்புப் பிரதேச வரலாறு பற்றி ''மட்டக்களப்பு மான்மியம்'' ஓரளவு கோடி காட்டுகிறது. ஆனால் 'தென்னிலங்காபுரி' என்பது வடக்கே வெருகல் முதல் தெற்கே குமுக்கன் ஆறு வரை பரந்திருந்த பெருநிலப் பிரதேசமாகும். அது தற்போதைய மட்டக்களப்பு, கல்முனை, அம்பாறை மாவட்டங்களை உள்ளடக்கியிருந்தது.

இந்நிலப்பரப்பில் நாகர்முனை (திருக்கோயில் பிரதேசம்), உன்னரசுகிரி (உகந்தை பாணமைப் பிரதேசம்), உறுகுணை (கதிர்காமப் பிரதேசம்), மட்டக்களப்பு (சம்மாந்துறை, வீரமுனைப் பிரதேசம்), மண்முனை (அம்பிளாந்துறை கொக்கட்டிச் சோலை, தாழங்குடா ஆரையம்பதி பிரதேசம்) முதலிய ராச்சியங்கள் இருந்தன. இந்நகரங்களில் பிற்காலத்தில், கலிங்கர், வங்கர் முதலியோரும் ஆட்சி செய்திருக்கின்றனர். இவர்கள் திராவிட இனத்தவர்கள். கொக்கட்டிச்சோலைத் திருநகர் பெற்றிருந்த முக்கியத்துவம் காரணமாகவே பிற்காலத்தில் (கலிங்கர் ஆட்சியில்) மண்முனை ராச்சியம் உருவாகியது.

## 7. மண்முனை ராச்சியமும் கொக்கட்டிச்சோலையும்

கி.பி. 3ம், 4ம் நூற்றாண்டளவில் கொக்கட்டிச் சோலையை உள்ளடக்கிய மண்முனை ராச்சியம் புகழ்பெற்றிருந்தது. மண்முனை ராச்சியம் உருவான வரலாற்றை, மட்டக்களப்பு மான்மியம் கூறுகிறது (பக். : 42). இவ்வரலாற்றில் இடம்பெறும் கற்பனைகளையும், கதைகளையும் விடுத்து வரலாற்றுத் தகவல்களை மட்டும் நாம் கருத்திற் கொள்வோம். அவ்வரலாறு வருமாறு :

மட்டக்களப்பில், குணசிங்கன் கலியாண்டு 3500ல் ஆட்சி செய்தபோது, கலிங்க ஒரிசா தேசத்தை அரசு புரிந்த குகசேனனுடைய மகள் உலகநாச்சி என்பவள் கௌதம புத்தரின் தசனத்தைக் தனது நெடுங்கூந்தலுள் மறைத்துக் கொண்டு கைலயங்கிரியில் குகவம்சத்தார் முற்காலத்தில் எடுத்து வைத்திருந்த சிவலிங்கத்தையும் எடுத்துக் கொண்டு தனது சகோதரன் உலகநாதனுடன் வர்த்தகரின் கப்பலேறி இலங்கை வந்து, இலங்கை அரசன் மேகவர்ணனிடம் (கி.பி. 301-382) புத்த தசனத்தைக் கொடுத்து அதற்குப் பரிசாக, மட்டக்களப்பு மன்னன் குணசிங்கன் மூலம், மண்முனைப் பிரதேசத்தைப் பெற்றாள். அப்பிரதேசத்தின் காடு திருத்தி, நகரமைத்து, கலிங்க தேசத்திலிருந்து, குகவம்சக் குடும்பம் 106, சிறைக் குடும்பம் (பணியாட்கள்) 30 தருவித்து, மண்முனைப் பிரதேசத்தை உருவாக்கினாள்.

மேற்படி கதை, மகாவம்சத்திலும் கூறப்பட்டுள்ளது. மட்டக்களப்பில் குணசிங்கன் ஆட்சி புரிந்த காலம் கலி 3500 என மட்டக்களப்பு மான்மியம் குறிப்பிடுகிறது. இது கி.பி. 398 ஆகிறது (3500 - 3102 = 398). மேகவர்ணன் காலம் கி.பி. 301-382 என மகாவம்சம் குறிப்பிடுகிறது. சில வருட

வித்தியாசம், காலக்கணிப்பில் ஏற்பட்ட தவறு என எடுத்துக் கொண்டால், உலகநாச்சியின் இலங்கை வருகை பற்றிய வரலாற்றில் மகாவம்சமும், மட்டக்களப்பு மான்மியமும் ஒத்துப் போவதைக் காணலாம்.

## 8. உலகநாச்சி அமைத்த கோவில்குளம் லிங்கேஸ்வரர் ஆலயம்

உலகநாச்சியின் அரண்மனை இருந்த இடம் தற்போது, தாழங்குடா என அழைக்கப்படும் கிராமத்தில் உள்ளது. அவ்விடத்தை மாளிகையடி என இப்போது மக்கள் அழைக்கின்றனர்.

உலகநாச்சி அமைத்த இரு ஆலயங்கள் பற்றிய குறிப்புக்கள் மட்டக்களப்பு மான்மியத்தில் இடம்பெறுகின்றன. ஒரு குறிப்பு பின்வருமாறு கூறுகிறது:

“............. சிலகாலம் சென்றபின், தனது தம்பி சிவநாதனைத் தந்தையிடத்திலனுப்பி குகன் குடும்பம் நூற்றாறும், சிறைக்குடும்பம் முப்பதும் எடுப்பித்துக் குகக் குடும்பங்களைத் தன் அருகாயிருத்தி அந்த இடத்தில் ஆலயமியற்றிச் சிவலிங்கத்தை ஸ்தாபித்து வணங்கி வந்தாள். (பக். 43). இக்குறிப்பிலிருந்து மேற்படி ஆலய சிவலிங்கம் கொக்கட்டிச்சோலையில் பிரதிஷ்டை செய்யப்பட்ட தான்தோன்றிலிங்கம் அல்ல என்பது தெளிவாகிறது.

இச்சிவலிங்கம் உலகநாச்சி தன்னுடன் எடுத்து வந்த காசிலிங்கம் (படிகலிங்கம்). இந்த லிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்ட ஆலயம், கோவில்குளம் என்று தற்போது அழைக்கப்படும் இடத்தில் அமைந்திருந்தது. உயரமான கோபுரத்துடன் இவ்வாலயம் அமைந்திருந்ததால், அவ்விடம் சிகரம் என அழைக்கப்பட்டது. பிற்காலத்தில் அவ்வாலயம்,

போர்த்துக்கேயரால் அழிக்கப்பட்ட பின்னரும், அவ்விடம் சிகரம் என அழைக்கப்பட்டு வந்தது.

இவ்வாலயத்தின் இடிபாடுகளில் இருந்து எடுக்கப்பட்ட கருங்கல்லாலான நிலைகள், ஆரையம்பதி கந்தசுவாமி கோயிலிலும், ஆரையம்பதி திருநீலகண்டப்பிள்ளையார் ஆலயத்திலும் வைத்துக் கட்டப்பட்டுள்ளன. பல வருடங்களுக்குப் பின், இவ்வாலய இடிபாடுகளிலிருந்து கண்டெடுக்கப்பட்ட படிகலிங்கம் (சுமார் 6 அங்குலம் உயரம்), தியான புத்தர் (புடைப்புச் சிற்பம்), உடைந்த கந்து விளக்கின் பாகங்கள் இன்றும் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன. இவ்விபரம் எனது ''மாகோன் வரலாறு'' நூலிலும் (பக். 97) இடம் பெறுகிறது.

**9. உலகநாச்சி அமைத்த தான்தோன்றீஸ்வரம் ஆலயம்**

கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரமும் உலக நாச்சியால் அமைக்கப்பட்டதென்பதற்கான குறிப்புகளும் ''மட்டக்களப்பு மாண்மியத்''தில் இடம் பெறுகின்றன. அக்குறிப்பு வருமாறு:

''பின்பு இன்னும் ஒரிசா நகரமிருந்து அநேக குகக் குடும்பங்களை அழைத்து காப்புமுனைக் காட்டை அழித்துச் செப்பனிட்டுக் குடியேற்றி அப்பகுதிக்கு அரசியாகி, ''மண்முனை'' என நாமம் சூட்டி வாழுங்காலம் காப்பு முனைக்குத் தென்பாகமாக உள்ள காட்டை அழிப்பிக்கும் போது திடகன் என்பவன் கொக்கட்டி மரத்தை வெட்ட, உதிரம் பாய்ந்தது. அதைக்கண்ட திடகன், உலகநாச்சியிடம் போய்ச் சொல்ல உலகநாச்சி, அந்த இடத்தைப் போய்ப் பார்த்த போது அம்மரத்தின் அடியில் ஒரு லிங்கம் மண்ணுள் மறைந்திருக்கக் கண்டு, அவ்விடத்தில் ஆலயமியற்றி, வடநாட்டு கொல்லத்திலிருந்து பட்டர் மூவரை அழைத்துப் பூசைபுரியும்படி திட்டம் செய்து...'' (பக். 43).

இக்கதையில், மரத்தில் இரத்தம் வந்தது, மறுபேர் கண்ணுக்குப் புலப்படாது லிங்கம் இருந்தது என்ற வர்ணனைகளை ஊடுருவி நோக்கினால், மரத்தின் அடியில் ஆதிக்குடிகளால் வழிபட்ட லிங்கம் மண்ணுள் புதையுண்டு இருந்தது என்றும் வெட்டிய மரத்தில் சிவப்பு நிற சாறு வந்தது என்றும் கொள்ளலாம்.

ஆனால் இந்த லிங்கம் கருங்கல்லாலானது என்பதும், அளவில் மிகப்பெரியது என்பதும் கருத்தில் கொள்ளத்தக்கது. இந்த லிங்கம், திருக்கேதீச்சரம், திருக்கோணேச்சரம் ஆலயங்களில் உள்ள லிங்கங்களைப் போன்று இருப்பது சிந்தனைக்குரியது.

எவ்வாறாயினும், கோயில்குளம் லிங்கேஸ்வரர் ஆலயமும், கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயமும் உலகநாச்சியால் அமைக்கப்பட்டவை என்பதும், இவை இரண்டுக்கும் இடையே நிலைத்த தொடர்பு இருந்தது என்பதும் மனங் கொள்ளத்தக்கது.

### 10. கொக்கட்டிச்சோலை, கோயில்குளம், தாந்தாமலை

கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்துக்கும், கோயிற்குளம் லிங்கேஸ்வரர் ஆலயத்துக்குமிடையே ஆரம்ப காலம் முதல் நெருங்கிய தொடர்பிருந்தது. உற்சவ காலங்களில், கோயில்குளம் ஆலயத்திலிருந்து, தான்தோன்றீஸ்வரர் ஆலயத்துக்கு வேல் கொண்டு செல்லும் சம்பிரதாயம் இருந்தது. கோயில்குளம் ஆலயம் அழிந்தபின், அவ்வழக்கம் ஆரையம்பதி கந்தசுவாமி ஆலயத்துக்கு மாற்றப்பட்டு, உற்சவ காலங்களில் ஆரையம்பதி முருகன் ஆலயத்திலிருந்து தான்தோன்றீஸ்வரர் ஆலயத்துக்கு வேல் கொண்டு செல்லும் வழக்கம் இன்றும் நடைமுறையில் இருக்கிறது.

கொக்கட்டிச்சோலையில் இருந்து சுமார் 10 மைல் தொலைவில் தாந்தமலை என்ற இடத்தில் ஒரு முருகன் ஆலயம் இருக்கிறது. இவ்வாலய உற்சவம் கதிர்காம உற்சவம் நடைபெறும் காலத்தில் இடம் பெறுவதால், தாந்தாமலைப்பதியை சின்னக்கதிர்காமம் எனவும் அழைப்பர். இவ்வாலயத்துக்கு சிங்கள மன்னர்கள் அடிக்கடி வருகை தருவது வழக்கம். அதற்குச் சான்றாக பௌத்த எச்சங்கள் இங்கு காணப்படுகின்றன.

கொக்கட்டிச்சோலை ஆலயத்தின் பொக்கிஷங்கள் இங்குள்ள ஒரு மலைக்குகையில் பாதுகாப்பாக வைக்கப்பட்டதால் தாந்தா மலை தாண்டவகிரி என்றும், பொக்கிஷமலை என்றும் அழைக்கப்பட்டது. கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலய நிர்வாகத்தில் தாந்தாமலை ஆலய நிர்வாகமும் சம்பந்தப்படுவது கவனத்திற் கொள்ளத்தக்கது. மாகோன் வகுத்த வன்னிமை நடைமுறை இவ்விரு ஆலயங்களிலும் இன்றுவரை கடைப்பிடிக்கப்படுவது இங்கு நினைவுகூரத் தக்கது.

## 11. மட்டக்களப்பு ராச்சியமும் மண்முனை ராச்சியமும்

உலகநாச்சியின் வரலாற்றை மகாவம்சமும் அத். 37 குறிப்பு 92 இந்தியக் கல்வெட்டும் (Epigraphic India xv 246) உறுதிப்படுத்துகின்றது. இவ்வாறு கி.பி. 4ம் நூற்றாண்டில், உலகநாச்சியால் உருவாக்கப்பட்ட மண்முனை ராச்சியம் தோன்றியபின் மட்டக்களப்பு ராச்சியத்தின் (சம்மாந்துறை, வீரமுனைப் பிரதேசம்) ராஜதானிக்கும் மண்மனை ராஜ தானிக்கும் இடையே நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது.

மட்டக்களப்பு, மண்முனை ராச்சியங்களை ஆட்சி செய்த மன்னர்களின் விபரங்கள் மட்டக்களப்பு மான்மியத்தில்

கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் இவர்களின் ஆட்சிக் காலம் கலியாண்டுக் கணக்கில் கொடுக்கப்பட்டிருக்கிறது. கலியாண்டு கி.மு. 3102ல் ஆரம்பம் என்ற அடிப்படையில் பார்க்கும்போது, சிலரது ஆட்சிக்காலம் மாறுபடுகிறது. எவ்வாறாயினும், இம்மன்னர்கள் பற்றிய விபரம், கிழக்கிலங்கையிலும், தென்னிலங்கையிலும் நிலவிய தமிழர் ஆட்சியை உறுதிப்படுத்துகின்றது. அதுமட்டுமல்ல, சிங்கள வரலாறு கூறும் மகாவம்சம் இப்பாரிய பிரதேசத்தையிட்டு எதுவும் கூறாதிருப்பது, இந்த உண்மையை மேலும் வலுப்படுத்துகிறது.

உலகநாச்சிக்குப்பின், மண்முனை ராச்சியத்தை கலிங்க குலத்தவர் ஆட்சி செய்தனர். அவர்களுள், மட்டக்களப்பை ஆட்சி செய்த குணசிங்கனின் மகன் அதிசுதன் (கலி : 3530), வங்கலாடன் (கலி : 3735) முதலியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

இக்காலகட்டத்தில் தட்சண கைலாயம் (திருகோணமலை), மட்டக்களப்பு, மண்முனை, நாகர்முனை (திருக்கோயில்), உன்னரசுகிரி (உகந்தை, பாணமைப் பிரதேசம்) என்பன தமிழ் ராச்சியங்களாக விளங்கின. சிவவணக்கம் பரவியது; சிவாலயங்களில் திருப்பணிகள் நடைபெற்றன. ஆனால் இவை பற்றிய முழு விபரங்களையும் அறியக் கூடியதாக இல்லை.

## 12. பாண்டிய, சோழர் ஆட்சிக்காலம்

பிற்காலத்தில் அவ்வப்போது, பல்லவ, பாண்டிய, சோழர் படையெடுப்புகள் இலங்கைமீது ஏற்பட்டன. பல்லவர் (கி.பி. 7ம் நூற்றாண்டு), பாண்டியர் (கி.பி. 8ம் நூற்றாண்டு), சோழர் (கி.பி. 10ம் நூற்றாண்டு) படையெடுப்புகளின் போது, அவ்வப்போது இவர்களது செல்வாக்கு, கிழக்கிலங்கையிலும் ஏற்பட்டது.

இப்பாதிப்புகளுள், சோழர் காலத்தில் ஏற்பட்ட படையெடுப்பு கிழக்கிலங்கையில், பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது எனலாம். முதலாம் ராஜராஜ சோழன் (985-1014) காலத்திலும், இவனது மகன் முதலாம் ராஜேந்திரன் (1014-1044) காலத்திலும், இலங்கை சோழர் ஆட்சியில் இருந்தது. இக்காலத்தில் இலங்கை 10வது சோழ மண்டலமாக, மும்முடிச்சோழ மண்டலம் என்ற பெயருடன் சோழசாம்ராஜ்யத்துடன் சேர்க்கப்பட்டிருந்தது.

இக்காலத்தில், பொலன்னறுவை, ஜனனாதமங்கலபுரம் எனப் பெயர் மாற்றப்பட்டு, முற்று முழுதாகச் சோழர் ஆட்சியின் கீழ் இருந்தது. இக்காலகட்டத்தில், சோழர் பரம்பரையினர் பெரும் அளவில் கிழக்கிலங்கையில் குடியேறினர். இவர்கள் அங்கிருந்த குடிமக்களை அடக்கி ஒடுக்குவதில் முனைப்பாக இருந்தனர். இவர்களால் கலிங்க மக்கள் மிகவும் துன்புற்றனர்.

அடிக்கடி இவ்வாறு ஏற்பட்டதால், கிழக்கிலங்கையிலும் சோழர் செல்வாக்கு ஓங்கியது. அதனால், கலிங்கரின் ஆட்சிக்குப் பல பின்னடைவுகள் ஏற்பட்டன. சிங்கள மன்னர்களுக்குச் சோழர்களின் தயவு வேண்டியிருந்ததால், அவர்களும் சோழர்களுடன் சேர்ந்து கொண்டனர். எனவே கலிங்கரின் துயர் துடைக்க யாரும் இருக்கவில்லை.

மட்டக்களப்பு ராச்சியத்தின் மன்னனான தினசிங்கனும் (கலி: 4120) பொலன்னறுவை மன்னனான, அவனது மைத்துனன் அணிகங்கனும் சேர்ந்து சிவாலயங்களைக் கொள்ளையடித்து, அவற்றின் நிதியங்களைக் கப்பல்களில் ஏற்றிச் சோழநாட்டுக்கு அனுப்பி வைத்தனர் என மட்டக்களப்பு மான்மியம் கூறுகிறது (பக். 51).

## 13. மாகோன் ஆட்சியில் தான்தோன்றீஸ்வரர் ஆலயம்

கலிங்கருக்கெதிரான அட்டூழியங்கள் பற்றிய செய்திகள் கலிங்க நாட்டுக்குச் செல்ல, அங்கிருந்து கலிங்கமாகன் பெரும் படையுடன் புறப்பட்டு இலங்கைக்கு வந்தான். பொலன்னறுவையிலும் ஏனைய பிரதேசங்களிலுமிருந்த சிங்களவர்களைத் துரத்தி விட்டுப் பொலன்னறுவையில் இருந்து ஆட்சி செய்தான். இவனது உபராஜனான சோழகங்கன் (குளக்கோட்டன்) இவனுக்கு வலது கரமாக விளங்கினான். இவ்விருவரும் இணைந்து, ராஜரட்டை, உறுகுணைரட்டை ஆகிய பிரதேசங்களை உள்ளடக்கிய இலங்கையில், கலிங்கர் ஆட்சியை ஸ்திரப்படுத்தியதுடன், பாதிக்கப்பட்ட ஆலயங்களைப் புனருத்தாரணமும் செய்தனர். பல ஆலயங்களில் திருப்பணி செய்தனர்.

இவர்கள் காலம் கிழக்கிலங்கையில் ஒரு பொற்காலமாகும். மாகோன் கி.பி. 1215-1255 வரை இலங்கையில் கட்டுக்கோப்பான ஆட்சி செய்தான் (40 வருடங்கள்). திருக்கோணேஸ்வரம், வெருகல் ஆலயம், கொக்கட்டிச்சோலை, தான்தோன்றீஸ்வரம், கோவிற்போரதீவு, சித்திரவேலாயுதர் ஆலயம் முதலியவற்றிற்குத் திருப்பணிகள் செய்து நிவந்தங்களை வழங்கினான். குளக்கோட்டன் திருகோணமலைப் பிரதேசத்திலும், மாகோன், மட்டக்களப்பு, திருக்கோயில் பிரதேசங்களிலும் மகத்தான பணிகளை ஆற்றினர். மாகோன் விஜயபாகு எனவும், குளக்கோட்டன் ஜயபாகு எனவும் சிறப்புப் பெயர் பெற்றிருந்தனர். மகாவம்சம், ராஜவலிய, பூஜாவலிய முதலிய பல சிங்கள வரலாற்று ஆவணங்கள் இவர்கள் செயற்பாடுகளைப் பற்றிக் கூறுகின்றன.

இவை மாகோனை ஒரு கொடுங்கோலனாகக் காட்டினாலும், இவனது நீண்ட கால ஆட்சி (40 வருடம்) இவனது சிறந்த தலைமைத்துவத்துக்கு ஒரு எடுத்துக்காட்டாகின்றது.

மாகோன் தான்தோன்றீஸ்வரர் ஆலயத்துக்குச் செய்த பணிகள் விசேடமாகக் குறிப்பிடப்பட வேண்டியவை ஆகும். மேலதிக விபரங்களுக்கு இக்கட்டுரையாசிரியரின் குளக்கோட்டன் தரிசனம் (1994), மாகோன் வரலாறு (1995) பார்க்கவும்.

## 14. கொக்கட்டிச்சோலையில் மாகோன் வகுத்த வன்னிமை

மாகோன், இப்பகுதி ஆலயங்களில் நிர்வாக நடைமுறைகளை வகுத்து நடைமுறைப்படுத்தினான். இன்றுவரை அவை கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன. இவன் வகுத்த முற்குகர் (முக்குவர்), வன்னிமை, கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலய நிர்வாகத்துக்குப் பொறுப்பானவர்களை விபரமாக எடுத்துக் கூறுகிறது.

**சீர்தாங்கு வில்லவரும் பணிக்கனாரும்**
**சிறந்த சட்டிலான், தனஞ்சயன்றன்**
**கார்தாங்கு மாளவன், சங்கு பயத்தன்**
**கச்சிலாகுடி முற்குகரின மேழேகாண்**

ஆகவே முற்குகரின் ஏழுகுடிகளாவன - வில்லவன்குடி, பணிக்கன்குடி, சட்டிலான்குடி, தனஞ்சயன்குடி, மாளவன்குடி, சங்குபயத்தன்குடி, கச்சிலாகுடி என்பனவாகும்.

''மட்டக்களப்பு மான்மியத்''தில் இடம்பெறும் சில கல்வெட்டுப் பாடல்கள் மேலும் விபரங்களைத் தருகின்றன. அவற்றின் விபரம் வருமாறு :

i.) குளிக்கல்வெட்டுமுறை - சாதியியல் ஆலயவியல் பற்றியது.

ii.) பெரிய கல்வெட்டு - கிழக்கிலங்கையில் மாகோன் பணிகள் பற்றியது.

iii.) பங்கு கூறும் கல்வெட்டு - ஆலயங்களில் குடுக்கை கூறுவது பற்றியது.

iv.) தாதன் கல்வெட்டு - விஷ்ணு ஆலய வணக்கமுறை பற்றிக் கூறுவது.

v.) போடி கல்வெட்டு - அறுமக்குட்டிப் போடி நியமனம் பற்றியது.

vi.) குலவிருதுகள் - குலங்களுக்குரிய சின்னங்கள் பற்றியது.

vii.) சாதித் தெய்வக் கல்வெட்டு - ஒவ்வொரு சாதிக்குரிய தெய்வ மூர்த்தம் பற்றியது.

viii.) பங்கு தடுக்கும் முறை - குடுக்கை தடுக்கும் முறை பற்றியது.

இவை எதுவுமே மாகோன் காலத்தில் எழுதப்பட்டவை அல்ல. கோயில் நடைமுறைபற்றிக் கூறுவதாக, பிற்காலப் புலவர்கள் 18ம் நூற்றாண்டுகளில் எழுதியவையே இக்கல்வெட்டுப் பாடல்கள். கண்டி மன்னன் விமலதர்மனை விளித்துக் கூறுவதாகவும், ஒல்லாந்த மன்னனை விளித்துக் கூறுவதாகவும் இப்பாடல்கள் புனையப்பட்டுள்ளன. இப்பாடல்களின் மொழிநடை கூடச் செழுமை அற்றதாக, புலமை குறைந்த கிராமத்துப் புலவர்களால், பாடப்பட்டவையாக இருப்பதும் கவனத்திற் கொள்ளத்தக்கது.

## 15. ஆலய நிர்வாகத்தில் சம்பந்தப்படும் அரசப்பிரதிநிதிகள்

முற்குகர் இனத்தில் இடம்பெறாத கலிங்கர் குடியினர், படையாட்சி குடியினர், உலகிப் போடி குடியினர் ஆகிய மூன்று குடியினர் இவ்வாலய நிர்வாகத்தில் சம்பந்தப்பட்டுள்ளனர். அதற்கான காரணத்தை நாம் இலகுவாக ஊகிக்கலாம்.

கலிங்க வம்சத்தினர், எல்லா ஆலயங்களிலும், எல்லா சமூக நடவடிக்கைகளிலும் முன்னுரிமை பெற்று முதன்மை வகித்தனர். மாகோன் கலிங்கனாக இருந்தபடியால் இத்தகைய நிலைப்பாடு அன்று இருந்தது. அதனால் இவர்கள் அரச செல்வாக்குடன் ஆலய நிர்வாகத்தில் பங்கு பற்றினர்.

அவ்வாறே படையாட்சி குடியினர் கலிங்க மாகோனின் படையாட்சி வன்னிமைகளாக ஆலய நிர்வாகத்தில் பங்கு பற்றினர். அரச அனுசரணை இல்லாது இவ்வாறு செய்ய முடியாது என்பதும் தெளிவு. உலக நாச்சிகுடி (பின்னர் உலகிப் போடிகுடி என அழைக்கப்பட்டவரி) கோயில் நிர்மாணித்த உரிமையிலும், ஆலய நிர்வாகத்திலும் பங்கு பற்றினர்.

எவ்வாறாயினும், இந்த மூன்று குடியினரும் கலிங்கர் இனத்தைச் சேர்ந்தவர்கள். எனவே இவர்கள் அரசனின் அனுசரணையுடன் - அரசப்பிரதிநிதிகளாக ஆலய நிர்வாகத்தில் பங்கு பற்றினர் எனலாம். இத்தகைய ஒரு நடைமுறையில் மாகோனின் மதிநுட்பத்தை ஒருவாறு ஊகிக்கலாம். ஆலய நிர்வாகத்தை முற்குகர்களான ஊர்மக்களிடம் கொடுத்தாலும், அரசசார்பிலான உரிமையும், கண்காணிப்பும் இத்தகைய ஏற்பாட்டில் தொக்கி நிற்பதை நாம் அவதானிக்கலாம்.

பிற்காலத்தில் முற்குகர் (முக்குவர்) இனத்தில் உள்ள ஏழுகுடிகளில் சில குடிகள் அருகிப் போய்விட்டன (வில்லவன், மாளவன், சங்குபயத்தன்). அதனால் அக்குடிகள் இப்போது நிர்வாகத்தில் இல்லை.

## 16. தான்தோன்றீஸ்வரத்தின் இரு தேர்கள்

இத்தேர்கள் தொடர்பாக மட்டக்களப்பு மான்மியத்தில் ஒரு குறிப்பு இடம் பெற்றுள்ளது (பக். 46). இதில் குறிப்பிடப்படும் பாண்டிய மன்னன், மாறவர்மன் ஸ்ரீபல்லவன் (1145-1162) எனக் கொண்டு அவ்விபரத்தைக் கீழே தருகின்றோம்.

பாண்டியர்கள் மதுரையிலிருந்து ஆட்சி செய்த காலத்தில் மாறவர்மன் ஸ்ரீபல்லவன் (1145-1162) என்னும் மன்னனின் முதலாவது மனைவியின் மகன் பட்டத்துக்குரிய பாண்டிய இளவரசன் புனந்துறுவன் (வரகுணன்) என்பவனுக்கு அரசுரிமை மறுக்கப்பட்டு, இரண்டாவது மனைவியின் மகனுக்குப் பட்டம் கட்டப்பட்டது. இதனால் ஆத்திரமடைந்த புனந்துறுவன், இலங்கைக்கு வந்து தோப்பாவையை (பொலன்னறுவை) ஆண்டு கொண்டிருந்த சேனன் என்பவனிடம் படை உதவி கோரினான்.

சேனன் அவன் கோரிக்கையை ஏற்று, மூவாயிரம் படைவீரர்களைக் கொடுத்து உதவினான். மட்டக்களப்பு மன்னன் தருமசிங்கன் படைநடாத்திச் சென்று, புனந்துறுவனை ஆட்சியில் அமர்த்தி நாடு திரும்பினான். இவன் தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தைக் கல்லால் கட்டியதுடன், ஆலயத்துக்கான மண்டபங்களும் கட்டி சுற்றுமதிலும் அமைத்துக் கொடுத்தான்.

மேலும், இவன் சோழநாட்டிலிருந்து மூன்று தேர்களும் வரவழைத்து, ஆலயத்துக்கு வழங்கினான். இத்தேர்கள்தாம் தற்போது தான்தோன்றீஸ்வரத்திலிருக்கும் தேர்கள் என அனுமானிக்கலாம் (3வது தேர் - தேரோட்ட வைபவம் ஒன்றின் போது, தெய்வ குற்றம் காரணமாகத் தவறான பாதையில் ஓடி ஆற்றில் விழுந்துவிட்டதென்பர்). பாண்டிய இளவரசன் புனந்துறுவனுக்கு உதவியாக ஈழப்படைகள் மதுரைமேல் படை எடுத்த சம்பவத்துக்கு வேறு ஆதாரங்களும் உள்ளன. எனவே இச்சம்பவத்தை வரலாற்று ரீதியாக ஏற்றுக் கொள்வதில் தவறில்லை எனலாம்.

## 17. சில விளக்கங்கள்

இக்கட்டுரையில் பல விடயங்கள் மிகச் சுருக்கமாகவே கூறப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டுக்கள், சான்றாதாரங்கள் முதலியவை பூரணமாக இடம்பெற முடியவில்லை. ஆனாலும் வாசகர் மனத்தில் இருத்த வேண்டிய சில முக்கிய குறிப்புகள் வருமாறு :

i.) இலங்கையின் ஆதிக்குடிகளான இயக்கர், நாகர் என்போர் திராவிட இனத்தவர்கள். இலங்கை வேந்தன் இராவணன் இலங்கையில் ஆட்சி செய்த ஒரு திராவிட மன்னன்.

ii.) இவர்கள் மத்தியில் மிகவும் தொன்மைக்கால வணக்கமாகிய சிவவணக்கம் நிலவியது. திருமூலநாயனாரால் "சிவபூமி" எனக்குறிப்பிடும் அளவு அவ்வணக்கம் இலங்கையின் ஆதிக்குடிகளிடம் பரவியிருந்தது.

iii.) இலங்கையின் கிழக்குப் பிரதேசத்தில் சிவாலயங்கள் பல இருந்தன. மாமாங்கேஸ்வரம், திருக்கோயில்,

சித்திரவேலாயுதர் ஆலயங்கள், ஆரம்பத்தில் சிவாலயங்களாகவே இருந்தன.

iv.) திராவிட மக்கள் வாழ்ந்த தென்னிலங்காபுரியில் நாகர்முனை (திருக்கோயில்), உன்னரசுகிரி (உகந்தை), மட்டக்களப்பு (சம்மாந்துறை), மண்முனை (கொக்கட்டிச் சோலை) முதலிய தமிழ் ராச்சியங்கள் இருந்தன. பல சிற்றரசுகள் இருந்தன. பல சைவாலயங்கள் இருந்தன.

v.) மண்முனை ராச்சியம், கலிங்கத்திலிருந்து இலங்கைக்கு வந்த உலகநாச்சி என்பவளால் கி.பி. 4ம் நூற்றாண்டில் தோற்றுவிக்கப்பட்டது. இவளே, கோயில்குளம் லிங்கேஸ்வரர் ஆலயத்தையும் கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தையும் அமைத்தாள்.

vi.) கி.பி. 13ம் நூற்றாண்டில், கலிங்கத்திலிருந்து இலங்கை வந்த மாகோன், குளக்கோட்டன் ஆகியோர் தான் தோன்றீஸ்வரர் ஆலயம் உட்பட கிழக்கிலங்கையில் உள்ள பல ஆலயங்களுக்குத் திருப்பணி செய்தனர். 40 ஆண்டுக்காலம் நிலையான ஆட்சி செய்தனர். ஆலய நடைமுறைகளை வகுத்தனர். இவ்வாறு மாகோன் வகுத்த வன்னிமை இன்றும் தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் பின்பற்றப்படுகிறது.

# திருக்கோயில் பிரதேசம்

## 1. அறிமுகம்

ஒரு வரலாற்று ஆய்வில் பின்வரும் தொல்லியல் மூலங்கள் (Epigraphical sources) பெரிதும் துணை புரிகின்றன: i) மரபுக்கதைகள், ii) இலக்கியக் குறிப்புகள், iii) சடங்குகள், சம்பிரதாயங்கள், iv) கலாச்சார பாரம்பரியம், v) வெளிநாட்டார் குறிப்புகள், vi) கல்வெட்டுக்கள், vii) செப்பேடுகள், viii) கட்டிடங்கள், இடிபாடுகள், ix) ஓலைச் சுவடிகள், x) நாணயங்கள், xi) பண்டைய ஊர்ப்பெயர்கள், xii) மேலாய்வுச் சான்றுகள், xiii) அகழ்வாய்வுச் சான்றுகள்.

கிழக்கிலங்கையைப் பொறுத்தவரை, மரபுக் கதைகள், புராணக் கதைகள், இலக்கியக் குறிப்புகள் மட்டுமே பெரும்பாலோருடைய வரலாற்றுக் கட்டுரைகளுக்கு ஆதாரங்களாகின்றன. அதனால் கற்பனைகளும், கர்ணபரம்பரைக் கதைகளும் வரலாறாகக் கொள்ளப்படுகின்றன.

மரபுக் கதைகளையும், புராணக்கதைகளையும் நிராகரிக்க வேண்டுமென்பது இதன் அர்த்தமல்ல. நிச்சயமாக அவற்றில் வரலாற்று வேர்கள் இருக்கலாம். ஆனால் அவற்றை நன்கு துருவி ஆராய்ந்து, வரலாற்று மூலங்களுடன் உரசிப்பார்த்த பின்னரே அவற்றை வரலாறாகக் கொள்ளவேண்டும்.

திருக்கோயிலைப் பொறுத்த வரை, பல்வேறு மரபுக்கதைகள், கர்ணபரம்பரைக் கதைகள், புராணக் கதைகள் முதலியவற்றை உரசிப் பார்க்கக் கூடிய பிற வரலாற்றுச் சான்றுகளும் உள்ளன. அவற்றின் துணை கொண்டு திருக்கோயில் வரலாற்றை ஓரளவு ஆதாரபூர்வமாக அறிய முடிகிறது.

## 2. திருக்கோயிலின் பண்டைப் பெயர்கள்

திருக்கோயில் பிரதேசத்துக்கு, நாகர்முனை, நாகர்மேடு, கண்டபாணந்துறை, திருவெள்ளைநாவற்பதி, உன்னரசுகிரி முதலிய பண்டைப் பெயர்கள் உள்ளன.[1] அவை பற்றிய சுருக்கக்குறிப்புகள் வருமாறு :

### i) கண்டபாணந்துறை (கந்தபாணந்துறை)

முருகக்கடவுளான கந்தன், சூரனை அழிக்க விட்ட வேல், மூன்று தளங்களைக் கவ்வி வாகூரமலையைப் பிளந்து, மூன்று பொறிகளைச் சிந்த, அப்பொறிகள் திருக்கோயில், உகந்தமலை, மண்டூர் ஆகிய இடங்களில் தங்கின.[2] இது ஒரு மரபுக்கதை. ஆனாலும் இக்கதை திருக்கோயிலின் தொன்மையையும், திருக்கோயில், உகந்தை, மண்டூர் ஆகிய மூன்று பதிகளுக்கும் உள்ள தொடர்பையும் குறிப்பதாகக் கொள்ளலாம்.

### ii) நாகர்முனை, நாகர்மேடு

திருக்கோயில் பிரதேசத்தில் நாகர்கள் வாழ்ந்த காரணத்தால், இப்பெயர்கள் வந்தன. இயக்கர், நாகர் என்போர் ஆதித்திராவிட மக்கள் என்பது வரலாற்றாசிரியர்கள் ஏற்றுக் கொண்ட உண்மை. இயக்கர், நாகர் என்போர் இலங்கையில் வாழ்ந்தமை பற்றி, மகாவம்சம், தீபவம்சம் ஆகியவை

குறிப்பிடுகின்றன. எனவே திருக்கோயில் பிரதேசத்தின் தொன்மைக்கான ஒரு வரலாற்றுச் சான்றாக இப்பெயர்கள் அமைகின்றன.

### iii) உன்னரசுகிரி

இது மிகவும் பிற்பட்ட காலத்தில் திருக்கோயில் பிரதேசத்துக்கு வழங்கப்பட்ட பெயர். மட்டக்களப்பு மான்மியத்தில் இப்பெயர் இடம் பெறுகிறது. ஆனால் இதற்கு வேறு சான்றுகள் இல்லை. கி.பி. 13ம் நூற்றாண்டில் மாகோன் காலத்தில் இப்பெயர் வழக்கில் இருந்திருக்கிறது. உன்னரசுகிரியைத் தலைநகராகக் கொண்டு ஆடக சௌந்தரி திருக்கோயில் பிரதேசத்தை ஆட்சி செய்ததாக மட்டக்களப்பு மான்மியம் கூறுகின்றது.[3] ஆனால் இதற்கு வரலாற்றுச் சான்றுகள் ஏதும் இல்லை.

## 3. ஏழு மன்னர்கள் ஆட்சி விபரம்

மட்டக்களப்பு மான்மியம் என்னும் நூலில், ஏழு சோழநாட்டு மன்னர்கள் இக்கோயிலைக் கட்டியதாகவும், பிற்காலத்தில் கலிங்க குமாரனாகிய புவனேச கயபாகு என்பவன், இக்கோயிலுக்குத் திருப்பணிகள் செய்ததாகவும், அதன்பின்பு அவனுடைய மகன் மனுநேய கயவாகு (மேகவர்ணன்) காலத்தில் இந்தியாவிலிருந்து ஏழு இளவரசர்கள் வந்து இக்கோயிலைப் பரிபாலித்ததாகவும் கூறப்பட்டுள்ளது.

இது கதைபோல் தோன்றினாலும் இதன் பின்னணியில் ஒரு வரலாற்றுத் தகவல் உள்ளது. அது வருமாறு:

இந்தியாவிலிருந்து தமிழர்களின் இரண்டாவது படையெடுப்பு வட்டகாமினி அபயன் காலத்தில் (கி.மு. 103) ஏற்பட்டதாகச் சொல்லப்படுகிறது. இப்படையெடுப்பு எவ்வெவறால் மேற்கொள்ளப்பட்டது.

மூன்றாவது படையெடுப்பு ஐந்து பாண்டிய இளவரசர்களால் மேற்கொள்ளப்பட்டது. அவர்கள் -

i) புலஹத்த (Pulahatha)

ii) பாஹியன் (Bahian)

iii) பணயமாறன் (Panayamaran)

iv) பிலமாற (பிலமாறன்) (Pilamaran)

v) தாதிகன் (Dadhikan)

இவர்கள் பஞ்சதிராவிடர் எனக் குறிப்பிடப்படுகின்றனர். இவர்கள் எழுவரல்ல ஐவரே என்பது "இலங்கை வரலாறு" என்னும் நூலின் அரசபட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ளது.[5] ஆனால் அவர்கள் எழுவரே என மகாவம்சத்தில் கூறப்பட்டுள்ளது.[6] இவர்களில் இருவர் சோமாதேவியையும் பிட்சா பாத்திரத்தையும் எடுத்துக் கொண்டு நாட்டுக்குத் திரும்பியதாக மகாவம்சம் கூறுகிறது. எனவே ஏழு மன்னர்கள் என்ற கூற்றுச் சரியாக இருக்கலாம்.

ஆனால் கி.பி. 5ம் நூற்றாண்டிலும், ஏழு மன்னர்களின் படையெடுப்பு ஒன்று நிகழ்ந்துள்ளது.[7] அதன் விபரம் வருமாறு:

## 4. கி.பி. 5ம் நூற்றாண்டில் இடம்பெற்ற எழுவர் படையெடுப்பு

கி.பி. 5ம் நூற்றாண்டில், இலங்கையில் மிகுத்த சேனன் ஆட்சி செய்தபோது இந்தியாவிலிருந்து "பாண்டு" என்பவன் தலைமையில் எழுவர் படை எடுத்து வந்து இலங்கையைக் கைப்பற்றினர். இவர்கள் சோழ நாட்டில் இருந்து வந்தார்கள் என "ராஜவலிய," "பூஜாவலிய" முதலிய சிங்கள வரலாற்று நூல்கள் குறிப்பிடுகின்றன.

இவர்கள் ஆட்சி விபரம் வருமாறு :

i.) பாண்டு (கி.பி. 429-434) முதல் - 5 வருடங்கள்

ii.) பாண்டுவின் மகன் பாரிந்தன் (கி.பி. 434-437) - அடுத்த 3 வருடங்கள்.

iii.) பாண்டுவின் மற்றொரு மகன் குட்டபாரிந்தன் (437-452) - 15 வருடங்கள்.

iv.) திரிதரன் (கி.பி. 452) - ஒரு வருடம்.

v.) தாதியன் (கி.பி. 452-455) - 3 வருடங்கள்

vi.) பீதியன் (கி.பி. 455-460) - 5 வருடங்கள்

இவர்கள் ஆதிக்கம் தெற்குவரை பரவவில்லை என ''சூளவம்சம்'' கூறியபோதும், அது தவறு என்பதற்குச் சான்றாக 'கதிர்காமக் கல்வெட்'டில் இடம் பெறும் குறிப்புகள் உள்ளன.

கதிர்காமக் கல்வெட்டில் குறிப்பிடப்படும் இருமன்னர்கள் விபரம் வருமாறு :

i.) மகாதாலி மகாநாக - (பாளியில் - மகாதாடிக மகாநாக)

ii.) சரத்தரய (பாளியில் திறீதற).

மேற்படி மகாதாடிக மகாநாகனின் தந்தையே திரிதரன் எனவும், இவர்கள் அக்காலத்தில் ரோகனையில் ஆட்சி செய்த இரு சிற்றரசர்கள் எனவும் திரு. பரணவிதானா ஏற்றுக் கொண்டுள்ளார். இக்கல்வெட்டினை ஆதாரமாகக் கொண்டு ஆராயும் போது இவர்கள் ரோகனையில் ஆட்சி செய்திருக்கலாம் என்பதும், இவர்கள் ஆட்சி ரோகனைப் பகுதியில் உள்ள திருக்கோயில் பிரதேசத்துக்கும் விரிவடைந்திருக்கலாம் எனவும் கொள்ள முடியும்.

இவ்வரலாற்றுத் தகவலே மட்டக்களப்பு மாண்மியத்தில் இடம்பெறும் "ஏழு மன்னர்கள் ஆட்சி" என்பதற்கு வரலாற்று வேராக அமைந்திருக்க வேண்டும்.

### 5. மேலும் கல்வெட்டுச் சான்றுகள் :[8]

திருக்கோயிலுக்கு அருகில் உள்ள அறுகம்பையில் கிரியாலப் பத்து என்னும் இடத்தில் கிடைத்த பாரிந்தனின் கல்வெட்டு ஒன்று, அவன் புத்த சமயத்தை ஆதரித்து புத்த மடங்களுக்கு அவன் கொடுத்த நன்கொடை பற்றிக் கூறுகிறது.

மற்றொரு கல்வெட்டு குட்டபாரிந்தனின் மனைவி, புத்தமடம் ஒன்று கட்டியதாகக் கூறுகிறது. இவ்வாறே இன்னுமொரு கல்வெட்டு தாதிக மன்னனால் கட்டப்பட்ட புத்த மடங்களைப் பற்றிக் கூறுகிறது. நெட்டதளத்திற்கு மேற்கில், இரண்டு மைல் தொலைவில் ஒரு சிறிய மலையில் மூன்று அரசர்களின் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. அவை பாதிக அபய, மகாதாடிக மகாநாக கனிட்டதிச ஆகியோருடையன.

இக்கல்வெட்டின் மூலம் மகாதாடிக மகாநாக, மணிநாக பௌத்த விகாரையையும், பாசான தீயிக விகாரையையும், கட்டினான் என்பது தெரிய வருகிறது.

இக்கல்வெட்டைக் கொண்டு, இந்த ஏழு அரசர்களின் ஆட்சி ரோகணை வரை பரவியிருந்ததை அறியலாம். இவர்களது ஆட்சிக்காலம் கி.பி. 429-473 ஆகும். இக்காலம், தென்னிந்தியாவில் பௌத்த மதம் பரவியிருந்த காலமாகும். எனவே இம்மன்னர்கள் பௌத்த மதத்திற்கு ஆதரவு தந்தவர்களாக இருந்திருக்க வேண்டும்.

சோழ மன்னர்களிற் பலர் சைவர்களாக இருந்த போதும் பௌத்த மதத்திற்கு ஆதரவு அளித்து வந்துள்ளமை வரலாற்றில்

இடம் பெற்றுள்ளது. நாகப்பட்டினம் சூடாமணி விகாரை போல தென்னிந்தியாவில் பல பௌத்த விகாரைகளும் பௌத்தப் பள்ளிகளும் இருந்திருக்கின்றன. சோழ மன்னர்கள் இவற்றிற்குத் தாராளமாக உதவிகள் செய்திருக்கிறார்கள்.

எனவே திருக்கோயில் பிரதேசம் கி.பி. 5ம் நூற்றாண்டுக் காலப்பகுதியில், முன்பு குறிப்பிட்ட சோழ மன்னர்களது ஆட்சியில் இருந்திருக்கலாம் என்பதில் சந்தேகம் இல்லை.

## 6. திருக்கோயில் பிரதேசத்தில் காணப்படும் இடிபாடுகள்

திருக்கோயில் பிரதேசத்தைச் சூழவுள்ள இடங்களில் பல இடிபாடுகள் காணப்படுகின்றன. சாகாமம், சங்கமன் கண்டி, உகந்தை, மொட்டையாகல முதலிய இடங்களில் காணப்படும் இடிபாடுகள், பண்டைக்காலத்து அரண்மனைகள், மண்டபங்கள், குடியிருப்புகள் முதலியவற்றின் இடிபாடுகளாகக் காணப்படுகின்றன.

மற்றும் பொத்துவில், பாணமை, குமண, குசலன்கந்த, ராஜகல, அம்பாறை, பம்பரஸ்தலாவ, இத்துள்பதவ, போன்ற இடங்களிலும், இவ்வாறே இடிபாடுகள், பிராமிக் கல்வெட்டுகள் முதலியன காணப்படுகின்றன.[9] சங்கமக் கண்டியிலும் இது போன்ற பிராமிக் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. இக்கல்வெட்டுகளில் 'நாக' என்ற பெயரே பெரும்பாலும் இடம்பெறுகின்றது.

இவ்வாறே கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்திலிருந்து கி.பி. 5ம் நூற்றாண்டுவரை ஆட்சி செய்தவர்களில் நாக என்ற பெயரை உடைய மன்னர்களின் பிராமிக் கல்வெட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. கதிர்காமக் கல்வெட்டுகள் இவற்றுள் குறிப்பிடத்தக்கனவாகும்.

மேலும், திசமஹாகம போன்ற இடங்களில் பெருங்கற்காலப் பண்பாட்டுக்குரிய சுடுமண் உருவங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. அவை தற்போது, அம்பாறை, தீகவாவி ஆகிய இடங்களில் உள்ள அரும்பொருட்காட்சிச் சாலையில் வைக்கப்பட்டுள்ளன. இவை திருக்கோயில் பிரதேசத்துத் தொன்மைக்கும், தொன்மைக் கால நாகரிகத்துக்கும் சான்றுகளாக உள்ளன.

### 7. திருக்கோயில் கல்வெட்டு

திருக்கோயிலுடன் நேரடியாகச் சம்பந்தப்படும் இரு கல்வெட்டுகள்[10] மிகப் பிற்காலத்தில் (கி.பி. 13ம் நூற்றாண்டு) பொறிக்கப்பட்டவை. இன்றும் திருக்கோயில் சித்திரவேலாயுத சுவாமி ஆலயத்தில் இருப்பது யாவரும் அறிந்த செய்தி. இக்கல்வெட்டுக்களைப் பொறித்தவன் 'விஜயபாகு' என்ற பெயருடைய மாகோன் என்பது எனது ''தளக்கோட்டன் தரிசனம்'' (பக்.47-48), ''மாகோன் வரலாறு'' (பக்.186-187) ஆகிய நூல்களில் மிகத் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது.

இக்கல்வெட்டுகளைப் பொறித்தவன் சிங்கள பௌத்த மன்னனான ஒரு விஜயபாகு என்றே மிக நீண்ட காலமாக ஆய்வாளர்கள் எழுதி வந்தனர். ஆனால் அது தவறு என்பதைத் தக்க சான்றுகளுடன் மேற்படி இரு நூல்களும் முன் வைக்கின்றன.

இக்கல்வெட்டுகளின் விபரம் வருமாறு (திருத்திய வாசகம்):

### i.) தூண் கல்வெட்டு:

பக்கம் 'அ' : ஸ்ரீ சங்கரபோதி வர்மரான திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீவிஜயபாகு தேவற்கு ஆண்டு பத்தாவதில் தை மாதம் 20ம் திகதி -

பக்கம் 'ஆ' : சிவனான சங்கரக் கோயிலுக்குக் கொடுத்த வோலில் இந்தத் தர்மத்துக்கு அகிதம் செய்தானாகில், கெங்கைக் கரையில் காராம் பசுவைக் கொன்ற பாவத்தைக் கொள்ளக் கடவராகவும் -

### ii.) துண்டுக் கல்வெட்டு :

ஸ்ரீமத் சங்கரபோதி வர்மரான திரிபுவனச் சக்கரவர்த்திகளான சிவஞான சங்கரிகள் ஸ்ரீ விஜயபாகு தேவருக்கு யாண்டு கய (10)வதில் தை மாதத்தில் திருக்கோயில் சித்திரவேலாயுத சுவாமி கோயிலுக்கு, கிழக்கு கடல் மேற்கு தலை... (மீதி எழுத்துக்கள் அழிந்துவிட்டன).

இவ்விரு கல்வெட்டுகளும், திருக்கோயில் சித்திரவேலாயுத சுவாமி கோயிலுக்குக் கொடுக்கப்பட்ட நிவந்தங்கள் பற்றிப் பேசுகின்றன. நிவந்தம் அளித்தவர் ஸ்ரீ விஜயபாகு தேவர் (விஜயபாகு என்ற பெயரை, ''ஸ்ரீ விஜயபாகு தேவர்,'' ''திரிபுவனச் சக்கரவர்த்திகள்'' என்று குறிப்பிட்டிருப்பது அக்காலத்து (சோழர் காலத்து) மரபு என்பதை சோழர் காலத்து மெய்க்கீர்த்திகளுடன் ஒப்பு நோக்கி அறிந்து கொள்ளலாம்.

### 8. கலாச்சாரப் பண்புகள்

திருக்கோயில் பிரதேசத்தில் பல திராவிட மன்னர்கள் ஆட்சி செய்தனர் என்பதை 'நாக' முதலிய பெயர்களிலிருந்தும், கல்வெட்டுக்களின் பிராமி எழுத்துக்களிலிருந்தும் அறிந்து கொள்ளலாம். துரதிர்ஷ்டவசமாக இப்பகுதியில் ஆட்சி செய்த மன்னர்களின் விபரங்கள் ஆதாரபூர்வமாகக் கிடைக்குமாறில்லை.

கி.பி. 5ம் நூற்றாண்டில் ரோகணப் பிரதேசத்தில் ஆட்சி செய்த மன்னர்களின் பெயர்கள் திராவிடப் பெயர்களாக இருப்பதும் இவர்கள் சோழநாட்டிலிருந்து வந்தவர்கள் என சிங்கள பௌத்த வரலாற்று ஆவணங்களான ''ராஜவலிய'' ''பூஜாவலிய'' ''சூளவம்சம்'' முதலியவை பதிவு செய்து வைத்திருப்பதும் கவனத்திற் கொள்ளத்தக்கவை.

கி.பி. 5ம் நூற்றாண்டுக்கும் கி.பி. 13ம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் திருக்கோயில் பிரதேச வரலாறு தொடர்பான சான்றுகள் அதிகம் கிடைக்கவில்லை. ஆனால் இப்பகுதியில் அக்காலத்தில் நிலவிய லிங்க வழிபாடும், இன்று இப்பகுதியில் நாம் காணும் கலாச்சார பண்புகளும் இணைந்து, இப்பிரதேசம் நீண்டகாலமாக திராவிடர் வாழ்ந்த தமிழ்ப்பிரதேசமாக இருந்தது என்பதை உறுதி செய்கின்றன.

இத்தொடர்பில், மட்டக்களப்பு மான்மியம் குறிப்பிடும் அரசபரம்பரை பற்றியும் கவனத்தில் கொள்வது அவசியம். காலக்கணிப்பில், இந்நூலில் சில தவறுகள் இருந்தாலும் மன்னர் பரம்பரை தொடர்பாக, பௌத்த வரலாற்று ஆவணங்களின் சான்றுகளுமிருப்பதால், அவற்றை ஏற்றுக் கொள்ளக் கூடிய தகவல்களாக நாம் கொள்ளலாம்.

## அடிக்குறிப்புகள்

1. மட்டக்களப்பு மான்மியம் - பதிப்பு FXC நடராசா (1952) பக்.12, 24.
2. ம.க. அந்தனிசில் கட்டுரை - தினகரன் 6.6.93
3. மட்டக்களப்பு மான்மியம் - பதிப்பு FXC நடராசா (1952) பக்.12, 24
4. மேற்படி
5. History of Ceylon - Vol.I., Part II
6. மகாவம்சம் - கெய்கர் மொழி பெயர்ப்பு, அத். XXXIII - குறிப்பு 39.
7. சூளவம்சம் - கெய்கர் மொழிபெயர்ப்பு, அத். XXXVIII குறிப்பு 11-35.
8. Epigraphic Zaplonica - Vol. III, பக். 216-219
9. Inscriptions of Ceylon - Vol.I, S. Paranavithana பக். 30-50.
10. குளக்கோட்டன் தரிசனம் - க. தங்கேஸ்வரி, 1992, பக். 47-48 மாகோன் வரலாறு, க. தங்கேஸ்வரி 1995, பக். 186-187

# ஈழத்தில் நாற்பது ஆண்டுகள் ஆட்சிசெய்த தமிழரசன் மாகோன்

## 1. முன்னுரை

இலங்கை வரலாற்றில் மிக நீண்ட காலம் ஆட்சிசெய்த ஒரு மன்னன் கலிங்கமாகன் என்னும் தமிழ்மன்னன். இவன் மிகுந்த படைபலம் கொண்டு சக்கரவர்த்தி என்ற பெருமையோடும் திரிபுவனச்சக்கரவர்த்தி என்ற விருதோடும் பெரும் புகழ் பெற்றிருந்தான். அதனால் எதிரிகளுக்குச் சிம்ம சொப்பனமாக அவன் விளங்கினான்.

பொலன்னறுவை இவன் தலைநகராக இருந்தபோதும், வடக்கே யாழ்ப்பாணம் முதல் தெற்கே திருக்கோயில் வரை தற்போதைய வடக்கு - கிழக்கு மாகாணங்களை உள்ளடக்கியதாக அவன் ஆட்சிப்பரப்பு விரிந்து பரந்திருந்தது. வடக்கு - கிழக்கு கரையோரங்களில் இவன் படைகள் நிலைபெற்றிருந்ததால் எதிரிகள் இவனுடைய ராஜ்யத்துக்குள் ஊடுருவ முடியாதபடி எல்லைப் பாதுகாப்பு பலம் பெற்றிருந்தது.

இவனுடைய ஆட்சிக்காலம் பற்றி பௌத்த வரலாற்று நூல்கள் பின்வருமாறு பதிவு செய்துள்ளன:

1. சூளவம்சம் - இவனுடைய ஆட்சிக்காலம் 21 வருடங்கள் எனக் குறிப்பிடுகின்றது.[1] (கி.பி. 1215- 1236)

2. பூஜாவலிய - இவனுடைய ஆட்சிக்காலம் 40 வருடங்கள் எனக் குறிப்பிடுகின்றது.[2] (கி.பி. 1215-1255)

3. ஆய்வாளர் வியனகமகே - இவனுடைய ஆட்சிக் காலம் 44 வருடங்கள் எனக்குறிப்பிடுகிறார்.[3] (கி.பி. 1215-1259)

21, 40, 44 ஆண்டுகள் என்பது ஒரு மன்னனின் ஆட்சிக் காலத்தில் மிக நீண்ட காலமாகும். இத்தகைய நீண்ட ஆட்சிக் காலத்தைக் கொண்ட மாகோனின் வரலாற்றுத் தகவல்கள் மிகக் குறைந்த அளவிலேதான், சிங்கள, பௌத்த வரலாற்று நூல்களில் காணப்படுகின்றன. அது மட்டுமல்ல, இந்த நூல்களில் இவன் மிகக் கொடூரமானவனாகவே சித்தரிக்கப்படுகிறான்.

இந்த நூல்களில் இடம்பெறும் தகவல்களைத் துருவி ஆராயும்போது, அவற்றினூடே மாகோனின் சிறப்புகள் ஓரளவு புலப்படுகின்றன. அகச் சான்றுகள் புறச்சான்றுகள் மூலம் இவை மேலும் உறுதியாகின்றன.

**2. உண்மைக்கு மாறான தகவல்கள்**

பௌத்த வரலாற்று நூல்கள் மாகோனைப் பற்றிப் பின்வருமாறு கூறுகின்றன. இவை ராஜவலிய, பூஜாவலிய ஆகியவற்றின் குறிப்புக்கள்:

மாகோன் பெரும் படையுடன் கலிங்கத்திலிருந்து இலங்கைக்கு வந்து, நகரத்தைச் சூறையாடினான். விகாரைகளை இடித்துத் தரைமட்டமாக்கினான். பௌத்த பிக்குகளைத் துன்புறுத்தினான். பௌத்தப் பள்ளிகளை அழித்து

அவற்றைப் படைத்தளங்களாக மாற்றினான். ஒவ்வொரு கிராமத்திலும் தமிழர்களைக் குடியமர்த்தினான். செல்வந்தர்களிடமிருந்த செல்வங்களையெல்லாம் கொள்ளையடித்து, தனது படைவீரர்களுக்குக் கொடுத்தான்.[4]

இவ்வாறு மாகோன் ஒரு கொடுங்கோலன் என்பது போல் இந்த வரலாற்றுச் செய்திகள் கூறுகின்றன.

ஆனால் பின்னால் வந்த ஆய்வாளர்கள் டாக்டர் எஸ். பரணவிதான, வியனகமகே போன்றவர்கள் மேற்படி கூற்றுக்களை ஏற்றுக் கொள்ளவில்லை. உண்மையில் அவன் ஒரு கொடுங்கோலனாக இருந்தால், நீண்டகாலம் ஆட்சியில் இருந்திருக்க முடியாது.

உண்மை என்னவென்றால் இலங்கையிலிருந்த சோழவம்சத்தைச் சேர்ந்த சிலர், சிங்களவருடன் சேர்ந்து கொண்டு, கலிங்க வம்சத்தை சேர்ந்த மக்களை துன்புறுத்தி வந்தனர். அவர்களை இத்துன்புறுத்தல்களில் இருந்து விடுவிக்கும் முகமாகவே மாகோன் பெரும் படையுடன் (24,000 போர்வீரர்கள் கொண்ட படை) கலிங்கத்திலிருந்து புறப்பட்டு இலங்கைக்கு வந்தான்.

இந்தப் போராட்டத்தில் சில அழிவுகள் ஏற்பட்டிருக்கலாம். ஆனால் போராட்டத்தின் பின் மாகோன் பாதுகாப்பான ஓர் ஆட்சியை நிறுவி 40, 44 ஆண்டுகளாக மக்களுக்குச் செய்த பணிகள் பௌத்த வரலாற்று நூல்களில் பதிவாகவில்லை.

### 3. ஆய்வாளர்களின் பணி

மாகோனது வரலாறு பற்றிப் பிரபல ஆய்வாளர்களான டாக்டர் எஸ். பரணவிதான, கலாநிதி வியனகமகே, கலாநிதி

இந்திரபாலா, கலாநிதி பத்மநாதன், கலாநிதி ச.க. சிற்றம்பலம் முதலியோர் விரிவான ஆய்வுகளைச் செய்து, பௌத்த வரலாற்று நூல்களில் இடம்பெறாத பல புதிய தகவல்களை வெளியிட்டுள்ளனர்.

இவர்களது ஆய்வுகள், மறைந்து கிடந்த மாகோனை வெளிச்சத்துக்குக் கொண்டு வந்தன. இந்த ஆய்வுகள்தான் மாகோனைப் பற்றி மேலும் ஆய்வதற்கான வாசல்களைத் திறந்து விட்டன எனலாம். அந்த வாசல் வழியே செல்லும்போது மாகோன் பற்றிய தரிசனம் விரிவடைவதைக் காண முடிகிறது.

மாகோனின் பரந்துபட்ட பணிகள், அவற்றை நிறைவேற்றுவதற்கான, அமைதியான ஆட்சிக்குச் சான்று பகர்கின்றன. அந்தப் பின்னணியில் பார்க்கும்போது மாகோன் ஒரு மகானாகத் தோற்றுகிறான். ஒடுக்கப்பட்ட மக்களுக்கு வாழ்வளித்தவனாக அந்த மக்களுடைய அபிலாஷைகளை நிறைவேற்றியவனாக அவன் காட்சியளிக்கிறான். அவனுடைய பணிகள் பின்வருமாறு அமைகின்றன:

- i.) முறையான ஆட்சி அமைப்பு
- ii.) அதற்குத் துணையாக அமைந்த உபராஜர்கள்
- iii.) நெல்விளைச்சல், நீர்ப்பாசனம்
- iv.) கோயில் திருப்பணிகள்
- v.) கோயிலுக்கான நிவந்தங்கள்
- vi.) கட்டுக்கோப்பான படைகள்
- vii.) நிர்வாகப் பரவலாக்கல்
- viii.) கிராமப்புற வாழ்க்கை வளம்
- ix.) சமதர்ம நோக்கு

x.) மக்கள் நலன் பேணல்

xi.) போர்த் தந்திரம்

xii.) போரிலும் தர்மம்

xiii.) வன்னிமை வகுத்தல்

**4. நீண்டகால ஆட்சி**

மாகோனுடைய ஆட்சிச்சிறப்புக்கு அவனுடைய நீண்டகால ஆட்சியே தக்க சான்றாகின்றது எனக் கூறினோம். இது ஆழ்ந்து சிந்திக்க வேண்டிய ஒரு கருத்து. மக்களுடைய ஒத்துழைப்பு இல்லாமல் ஒரு மன்னனுடைய ஆட்சி நிலைக்கவோ, நீடிக்கவோ முடியாது என்பது வரலாறு. கட்டுக்கோப்பான நிர்வாகமும், படைபலமும் இல்லாவிட்டால் பரந்துபட்ட ஒரு இராசதானியை நீண்ட காலம் ஆட்சி செய்ய முடியாது என்பதும் வரலாறு. ஒரு கொடுங்கோலனால் சர்வாதிகாரியால் இந்த இரண்டு சாதனைகளையும் நிலைநாட்ட முடியாது.

பொலன்னறுவையைத் தலைநகராகக் கொண்டு, வட இலங்கை முதல் தென்னிலங்கை வரை மாகோன் ஆட்சி செய்த இந்த நீண்ட காலப் பகுதியில், சிங்கள மன்னர்கள் தமது ராசதானியை தம்பதேனியாவில் அமைத்துக் கொண்டு ஆட்சி செய்தனர். மாகோனை எதிர்ப்பதற்காக இவர்கள் மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியில் முடிந்தன என்பதை ''தம்பதேனிய வம்சம்'' என்ற கட்டுரையில் டாக்டர் எஸ். பரணவிதான குறிப்பிட்டிருக்கிறார்.[5]

மாகோனின் படைபலமும், படைப்பயிற்சியும் **கூட** அவனது நீண்டகால ஆட்சிக்கு உறுதுணையாக **அமைந்தன**

எனலாம். இவனுடைய படைகள் வடக்கே ஊர்காவற்றுறை, காங்கேசன்துறை, யாழ்ப்பாணம், இலுப்பைக் கடவை முதலிய இடங்களிலும், கிழக்கே கொட்டியாரம், திருக்கோணமலை, கந்தளாய் முதலிய இடங்களிலும், மேற்கே பெரிய குளம், மன்னார், மாந்தை முதலிய இடங்களிலும், மத்தியில் பொலன்னறுவை, பதவியா, கொலன்நுவர (கொழும்பு) முதலிய இடங்களிலும் நிலை பெற்றிருந்தன, உறுகுணை ராஜ்ஜியத்தைக் கைப்பற்றி மகாகம (திசமாறாமை) என்ற இடத்தைப் பலப்படுத்தினான்.[6] அதன்பின் யாழ்ப்பாணத்தைப் பலப்படுத்தினான். இவ்வாறு நாட்டின் எல்லாப்பகுதிகளும் அவன் கட்டுப்பாட்டில் இருந்தன.

### 5. உபராஜர்கள்

மாகோனுக்குத் துணையாகப் பல உபராஜர்கள் அவனுடைய நிலையான ஆட்சிக்குப் பக்கபலமாக நின்று உதவியுள்ளனர். இவர்களுள் குறிப்பிடத்தக்கவன், புகழ் பெற்ற சோடகங்க தேவ என வரலாற்றில் புகழ் பெற்ற சோழகங்கன் ஆவான். இவனே திருக்கோணேஸ்வரத்தில் திருப்பணி செய்த குளக்கோட்டன்.[7]

மாகோனும் குளக்கோட்டனும் இணைந்து மேற்கொண்ட பல நற்பணிகள் வரலாற்றில் இடம் பெற்றுள்ளன. (மேலும் விபரங்களை எனது "குளக்கோட்டன் தரிசனம்" நூலில் காணலாம்).[8]

இவர்கள் இருவரும் இந்தியாவிலிருந்து வன்னியரை பெருந்தொகையாகக் கொண்டு வந்து இலங்கையில் குடியேற்றினர்.[9] அவர்கள் மூலம் பல நற்பணிகளை மேற்கொண்டனர். இது பற்றி கலாநிதி பத்மநாதன் தனது

''வன்னியர்'' என்னும் நூலில் விபரமாகக் கூறியுள்ளார். இவர் ''சூளவம்சத்''தை ஆதாரமாகக் கொண்டு மாகோனுடன் வந்த உபராஜனே குளக்கோட்டன் என்ற கருத்தையும் தெரிவித்துள்ளார்.

மாகோனுக்கும், குளக்கோட்டனுக்கும் முறையே விஜயபாகு, ஜயபாகு என்ற பெயர்களுமுண்டு. இவர்கள் சிங்கள பௌத்த மக்களுக்கு எதிராகச் செயற்பட்டிருந்தால் இப்பெயர்களைச் சூட்டிக்கொண்டிருக்க மாட்டார்கள்.

மாகோனும் ஜயபாகுவும் பொலன்னறுவையில் தொடர்ந்து ஆட்சி செய்தனர். 'எழு அத்தன களுவம்ச' என்னும் நூல் பொலன்னறுவையில் இருந்த மாகோன் படைகள் பற்றிக் குறிப்பிடும் போது அவை நூறாயிரக்கணக்கான சோழ பாண்டிய வீரர்களைக் கொண்டிருந்தன என்றும், அவர்களுக்கு அரசனும், உபராஜனும் இருந்தனர் எனக் குறிப்பிடுகின்றது. எனவே மாகோனின் படைகள், கட்டுக்கோப்பாக அமைந்திருந்தன என்பது பெறப்படுகின்றது; இதே நூலில் மாகோனின் பெயர் விஜயபாகு எனவும் குறிப்பிடப்படுகிறது. மாகோனின் உபராஜர்களே, மாகோனின் பிரதிநிதிகளாக, தூரப் பிரதேசங்களில் நிர்வாகம் சீர்குலையாமல் கண்காணித்து வந்தனர் எனலாம்.

**6. மாகோனும் ராஜரட்டையும்**

இலங்கையின் அந்தக்கால மூன்று பிரிவுகளுள் ஒன்றான ராஜரட்டை மாகோனது ஆட்சியில் இருந்ததாக ''சூளவம்சம்'' மூலம் அறிய முடிகிறது. புலத்திநகர் என்ற பொலன்னறுவையைத் தலைநகராகக் கொண்டு, ராஜரட்டை

முழுவதையும் மாகோன் ஆட்சி செய்தான் என இந்நூல் கூறுகிறது.

ஏற்கனவே, மாகோன் உறுகுணைரட்டையைக் கைப்பற்றி ஆட்சி செய்தான் என்பதை முன்னர் பார்த்தோம். ஆகவே இலங்கையின் மூன்றில் இரண்டு பகுதி இவன் ஆட்சியில் இருந்தது என்பது பெறப்படுகின்றது.

புலத்தியுர, புலத்திநகரம், தோப்பாவை என்பதெல்லாம் பொலன்னறுவையைக் குறிக்கும் பெயர்கள், ராஜரட்டைப் பிரதேசத்தைச் சேர்ந்த குருண்டி (Kurundi), குந்தன்குளம் மணாமத்த (Manamatha) மாந்தை (Mantai), புலச்சேரி முதலிய இடங்களிலும் மற்றும் கொட்டியாரம் (Kothsara), திருகோணமலை (Gonaratta), கந்தளாய் (Gaugialawa), கட்டுக்குளம் (Kattukulam), பதவியா (Padiratta) முதலிய இடங்களில் மாகோனின் படைகள் இருந்தன என்பதை டாக்டர் பரணவிதான குறிப்பிட்டுள்ளார்.[10]

கொத்மலை, பெலிகலை, தம்பதேனியா, வத்தளை, களனி, அத்தனகலை ஆகிய இடங்களிலும் மாகோனது ஆட்சி பரவி இருந்தது என்பதை விஜயபாகு (IV) ஆட்சிக்காலக் குறிப்பின் மூலம் அறிய முடிகின்றது. பொலன்னறுவையிலிருந்து திருடப்பட்டு கொத்மலையில் ஒளித்து வைத்திருந்த புத்த தந்தத்தையும், பிட்சா பாத்திரத்தையும் விஜயபாகு (IV) மீட்டு, பெலிகலையில் புத்த தந்தத்துக்கு கோயில் அமைத்தான் எனவும், அத்தோடு, தம்பதேனிய, பெலிகலை, வத்தளை, களனி, அத்தனகல, தொட்டகமு ஆகிய இடங்களில் ஆலயங்களை அமைத்தான் எனவும் அக்குறிப்பு கூறுகின்றது.

நமக்கு இப்போது கிடைக்கக்கூடிய சொற்ப தகவல்களிலிருந்தே, மாகோனுடைய பரந்த நோக்கையும், பெருந்தன்மையையும் சமய சமூகப்பணிகளையும், ஆலயத்திருப்பணிகளையும், ஆட்சிமுறையையும் ஓரளவு அறிய முடிகிறது. இவற்றைக் கொண்டு பார்க்கும்போது மாகோனை ஒரு கொடுங்கோலனாக, அட்டூழியங்கள் செய்தவனாக, அராஜகம் புரிந்தவனாக எண்ணிப்பார்க்க முடியவில்லை. அப்படியானால் இலங்கை வரலாறு ஏன் மாகோனை அப்படிச் சித்தரிக்க வேண்டும்.

### 7. மாசுபட்ட வரலாறு

பௌத்த வரலாற்று நூல்களில் மாகோன் வரலாறு திரித்துக் கூறப்பட்டமைக்குரிய காரணங்களை நாம் ஒருவாறு ஊகிக்கலாம்.

பெரும் படையுடன் மாகோன் கலிங்கத்திலிருந்து இலங்கைக்கு வந்த நோக்கத்தை நாம் ஏற்கனவே குறிப்பிட்டுள்ளோம். இலங்கையில் சோழவம்சத்தவரும் சிங்களவரும் சேர்ந்து கலிங்கவம்சத்து மக்களைத் துன்புறுத்தினர். அவர்களை இத்துன்பத்திலிருந்து விடுவிப்பதே மாகோனின் முக்கிய நோக்கமாக இருந்தது.

இந்தப் போராட்டத்தின்போது மாகோன் சிங்கள பௌத்தர்களுக்கு எதிராகச் செயற்பட வேண்டியிருந்தது. இந்தக் கலவரத்தில், பௌத்த பிக்குகளும், பௌத்த வணக்கத்தலங்களும்கூடப் பாதிக்கப்பட்டிருக்கலாம். இதனால் பௌத்தர்கள் மாகோனை தமது எதிரியாகவே கருதியிருக்க வேண்டும் எனவே பௌத்தர்களால் எழுதப்பட்ட வரலாற்று நூலில் மாகோனின் நல்ல பணிகள் மறைக்கப்பட்டு,

அவனுடைய ஆரம்ப கால நடவடிக்கைகள் சற்று மிகையாகவே பதிவாகியுள்ளதில் ஆச்சரியம் இல்லை.

மேலும், பொலன்னறுவையில் நீண்டகாலம் நிலைத்திருந்த சிங்கள மன்னர்களின் ஆட்சியைக் கவிழ்த்து அவர்களைத் தம்பதேனியாவுக்கு இடம்பெயரச் செய்தமையும் பௌத்த வரலாற்றாசிரியர்களுக்கு மாகோன் மீது குரோதத்தை வளர்த்திருக்கலாம்.

அதுமட்டுமல்ல, நாற்பது வருடங்களுக்கு மேலாக ராஜரட்டை, உறுகுணைரட்டை பிரதேசங்களை உள்ளடக்கிய பெரும் நிலப்பரப்புக்கு அதிபதியாகி, சிங்கள மன்னர்கள் எவராலும் எதிர்க்க முடியாத அளவு வலிமை பெற்றிருந்த ஒரு தமிழ் மன்னனாக அவன் விளங்கியதும், பௌத்த வரலாற்றாசிரியர்களுக்கு ஆத்திரமூட்டியிருக்கலாம்.

இன்னோரன்ன காரணங்களால், இலங்கை வரலாற்று ஏடுகளில் மாகோன் வரலாறு மாசுபடுத்தப்பட்டிருந்த போதும், ஏராளமான அகச்சான்றுகள், புறச்சான்றுகள் மூலம் அந்த மாசு துடைக்கப்பட்டிருப்பதை இன்று நாம் பார்க்கிறோம்.

## 8. மாகோன் வரலாறு கூறும் நூல்கள்

40 அல்லது 44 வருடங்கள் ஆட்சி செய்த ஒரு மன்னனின் வரலாற்றுச் சுவடுகளை யார்தான் மறைக்க முடியும்? அப்படியான வரலாற்றுச் சுவடுகளை எடுத்துக் காட்டும் நூல்களில், பின்வருபவை முக்கியமானவை :

(அ) சூளவம்சம் - கைகர் (Geiger) மொழிபெயர்ப்பு

(ஆ) பூஜாவலிய - A.V. சுரவிர பதிப்பு

(இ) நிகாய சங்கிரகய - D.M.de Z, விக்கிரமசிங்க பதிப்பு

(ஈ) மட்டக்களப்பு மான்மியம் - F.X.C. நடராசா பதிப்பு

(உ) திருக்கோயில் கல்வெட்டுகள் - Dr. ஆ. வேலுப்பிள்ளை

(ஊ) ராஜாவலிய - B. குணசேகரா பதிப்பு

(எ) யாழ்ப்பாண வைபவமாலை - மயில்வாகனப் புலவர்

(ஏ) வையாபாடல் - வையாபுரி ஐயர் (க.செ. நடராசா பதிப்பு)

(ஐ) வம்சத்தீரிகாசினி - G.P. மல்லசேகரா பதிப்பு

(ஒ) கைலாய மாலை - முத்துக்கவிராசர்

(ஓ) எழுஹத்தனகல விகாரவம்ச - G.E. கொடக்கம்புர

இவை தவிர அண்மைக் காலம் வரை பல பேராசிரியர்களும் விரிவுரையாளர்களும் எழுதிய பின்வரும் நூல்களிலும் மாகோன் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன:

(அ) யாழ்ப்பாண வைபவ விமர்சனம் - சுவாமி ஞானப்பிரகாசர்

(ஆ) History of Ceylon - Dr. S. Paranavithana

(இ) Ceylon and Malaysia - Dr.S. Paranavithana

இலக்கிய விழா சிறப்புமலர் - 23.7.1995 வ.சி.மா. கல்வி,
கலாச்சார விளையாட்டுத்துறை அமைச்சர்

# Batticaloa's Enduring Legacy of the Past


Sri Lanka is replete with ancient buildings and monuments that have great historical value.

The fortresses built by the Portuguese and the Dutch are among the legacies left by past rulers. They still remain in various parts of Sri Lanka as grim reminders of foreign rule in our country. Such fortresses are to be found in Jaffna, Mannar, Trincomalee, Batticaloa and Galle are usually house the Government offices such as Kachcheries.

Of these fortresses special mention must be made of the fortress at Batticaloa, as it was originally built by the Portuguese in 1627 and was strengthened by the Dutch in 1684. The history behind this fortress makes interesting reading.

The attention of the Portuguese turned towards the East at a time when there was trade competition between the Muslims and the Portuguese. Trade expansion of the Muslims in the East was a great threat to the Portuguese.

Following the arrival of the famous Portuguese navigator, Vasco-da-gama to India in 1498, Portuguese interest in the East coast of SriLanka increased. When




**One of the twin cannons which adorn the main entrance of the fortress.**

Portuguese General Lorenzo-de-Almeida reached Galle in 1505, he proceeded to Colombo along the East Coast.

After having made an agreement with Parakramabahu VIII, the then king of Ceylon (1484-1509), to send 400 "Bahars" of cinnamon to the Portuguese, every year. Lorenzo - de - Almeida visited Ceylon again in 1518 and made arrangements to build a fortress in Colombo. This was used only as a storehouse for goods.

During the reign of Senerath in Kandy, the Portuguese tried to evacuate the Muslims from Sabaragamuwa, Matara, Beruwala, Alutgama and Kalutara.



**One of the watch towers in the four corners of the fortress wall which could accommodate a single soldier.**

King Senerath intervened and sent these Muslims (about 4,000 in number) to Batticaloa, in 1602. These events later inspired the Portuguese to protect themselves with fortresses that could withstand enemy attack.

The Portuguese soon moved towards the East, and built their first fortress in Trincomalee in 1624. The Portuguese General Constant - de - Sa arrived in Batticaloa in 1627 with several warships, and built a fortress there. The Sinhala king Senerath who objected strongly to the Portuguese occupation of Batticaloa, sought the assistance of the Dutch to drive away the Portuguese from Batticaloa.

Dutch Generals Spilbergen and Sebald de Weert arrived in Batticaloa in 1602, with the intention of entering into a treaty with the king of Kandy. Learning of this new move, Portuguese General Asavido sent a large troop contingent to the East in 1609. Thus the Portuguese established themselves in the Ports of Batticaloa, Trincomalee, Kottiyar and Jaffna.

Once again the King of Kandy sought the assistance of the Dutch. As a result, Dutch ships came to the Port of Kottiyar in 1620. In 1635 Rajasinghe, the son of King Senerath became King of Kandy. The Dutch General Adam Westerwold captured Batticaloa in 1638. Having got rid of the Portuguese from Batticaloa he further strengthened the fortress built by them, for the use of the Dutch. This work was completed in 1684. This is the fortress which we see in Batticaloa now.

This unique fortress is one of the most imposing legacies left behind by our foreign rulers. It is well established with the Batticaloa Lagoon protecting the East and North sides and a deep moat protecting the South and West sides. The walls are about 20 feet high, with a wide path of eight feet running on top of these four walls. On top of the four corners of these walls, there are four watch towers each of which could hide a single soldier.

Standing on this wall one could have a magnificent view of the surrounding lagoon and the Kallady Bridge.

It is said that the Dutch had cleared the northern area, so that they could see the ships entering the Bar which is about three miles from the fortress. Today, the entire place is thickly populated.

The south-western corner is called the "Rampart". This is a wide area which could be reached from the ground by a steep wide path. During the British period, it was used to give the 4.15 p.m. 'Bomb Shell' (to indicate the time). But now, this "Rampart" is used to announce election results!


The main building within the fortress is still mostly in its original form. It has not undergone any major change. It is a thick walled double-storeyed building with a row of large pillars in front. Upstairs the floor is paved with thick sawn timber, while the staircase is also made of wood. The large rooms, which were once used as the dining hall and dance hall are now used as office rooms.

The archway doors and large windows speak of the splendour and magnificence of a bygone era.

On the eastern side, there are underground rooms within the thick fortress wall. One of these rooms may have been used as a store for weaponry. A pathway from this room has been completely sealed off. On top of the wall there are small covered openings to allow light into this room.

On the eastern side of the wall, two entrances have been sealed and closed with brick work. Two old cannons adorn the main entrance.

On the north-eastern corner, outside the fortress there is a jetty, once used for cargo boats. People also crossed the lagoon from Kallady and entered the town through this jetty. Before the construction of the Kallady bridge and the arrival of public transport, this was the only entrance to the town. Members of the public used to travel to Kallady in bullock-carts to reach the boatyard.




**Covered openings on top of the fortress wall to allow light into the secret rooms.**

Today the western moat has dried up. Yet evidence of a once-busy waterway remains. The concrete structures along the waterway indicate that boats frequently entered

through this waterway to reach the rear entrance of the fortress.

Another interesting relic of the past is a tomb near the rear entrance to the fortress. This may be the tomb of a Captain or Chieftain in the Army. Unfortunately, the letters on the tomb are worn out. The details cannot be made out.

This fortress is still maintained by the Department of Archaeology and a small allocation of funds is made to the Kachcheri, annually to clear the shrubby growth on the fortress wall and the rampart.



**Water way which led cargo boats to the rear entrance of the fort.**

The Batticaloa Kachcheri also bears evidence of the former Portuguese and Dutch Governors who once graced this office. As governors, it fell upon them to perform all sorts of duties such as laying foundation stones, opening new buildings and ceremonial functions.

A stone inscription kept in front of the G.A.'s room to this day, written in Dutch, reads as follows :

"DIESE KERK SGESTRIGTDON 18 FEBY A.D. 1740 WAARVANDEN EERSTEN STEENISGELY DOOR. NETUFFU MAM DE MOOR HUYST VAN TOPPER HT.DE.MR.R.D. BUYK."

The English translation of this inscription is as follows :

"This church is founded on 18th February, 1740 A.D. of which the first stone is laid by Mrs. Mam de Moor, wife of the Chief of Batticaloa Mr. R.D. Raymond Buyk."

Several English Government Agents have worked at this Kachcheri, during the British period. They have made a careful study of the life and people of Batticaloa. They were fascinated by the traditions and customs of the people of this area. They have recorded their impressions and observations in their diaries. These diaries serve as very valuable historical documents.

One of the well-known and pioneer Ceylonese Government Agents was Mr. V. Coomaraswamy, who was once lost in the Kataragama jungles, in a mysterious way

and was later found, after an extensive search by government officials.

Among other Government Agents, the following have served during the last 50 years. They are Messers. C. Ludekens, P. Kasilingam, D. Thevanesan Nesiah, Bradman Weerakoon, Dixon Nilaweera, M. Anthonimuthu, S. Tharmalingam, R. Yoganathan, S. Mounagurusamy. The present Government Agent is Mr. A.K. Pathmanathan.

Batticaloa and its people, their customs and dress would have fascinated the foreign rulers who once held sway over this. Even their soldiers came under the spell of Batticaloa town.

The diary of a soldier Colonel Sergeant Calladine who served in the 19th Foot from 1793 to 1837, at Batticaloa, gives us this interesting glimpse of what Batticaloa was like 200 years ago. To quote some extracts from his diary:

"........ Batticaloa is pleasantly situated by a fine river about three miles from the sea. The barracks are contained in a small fort. It is not much of a town, but a great many houses are scattered among the coconut topes (groves of trees) which are in great abundance at this station. I should suppose that this is one of the best, if not, the best station in the island."

"........During the time we lay at Batticaloa, we had several alligators caught, but one in particular measuring 24 feet 6 inches. Its head was a yard and one inch and its body

was a completely impenetrable substance of scale, not to be enterd by a musket ball."

"...One day we had a novel sight, it being a very large tyger (tiger) caught in a trap, and held in such a position that the power of his strength was completely taken from him. The trap was a long frame of short pieces of timber, open at one end, and at the other a kid was secured in a small apartment. The fierce animal was enticed into this frame with the expectation of getting the kid. It took twelve men to carry the tyger and the trap." ("Landmarks of Ancient Batticaloa by D.W.N. Kadramar 1934).

Steeped in history and legend the Batticaloa Fort still stands as a magnificent gigantic structure with the olden days splendour reflecting its full beauty on the Batticaloa Lagoon.

*["Observer Pictorial" - Golden Jubilee Independent, issue 1998]*

*

# க. தங்கேஸ்வரி



க. தங்கேஸ்வரி

இவர் மட்டக்களப்பு மாவட்டத்தின் விவசாயக் கிராமமாகிய கன்னங்குடாவில் பிறந்தவர் கன்னங்குடாவின் முதல் பட்டதாரி மட்டக்களப்பு மாவட்டத்தில், மக்களால் தெரிவு செய்யப்பட்ட முதல் பெண் பாராளுமன்ற உறுப்பினர். களனிப் பல்கலைக்கழகத்தின் தொல்லியல் சிறப்புப் பட்டதாரி. பேராசிரியர் மார்க்கஸ் பெர்ணாண்டோ, செனக பண்டார நாயகா முதலியோரால் பாராட்டப் பெற்றவர்.

இந்து சமய கலாசார திணைக்களத்தினர், மாவட்டக் கலாசார உத்தியோகத்தராக, பல்வகைப்பட்ட சமய கலாசாரப் பணிகளை மேற்கொண்டவர்.

மட்டக்களப்புக் கச்சேரியின் கலாசாரப் பேரவைச் செயலாளராக மட் மாவட்டத்தின் கலை வளர்ச்சிக்குப் பெரும் பங்களிப்புச் செய்தவர்.

சர்வதேச மட்டத்தில், பல சமய, சமூக மாநாடுகளில் பங்களிப்புச் செய்தவர்.

ஏராளமான ஆய்வுக் கட்டுரைகளை எழுதியவர். ''விபுலானந்தர் தொல்லியல்'' ''குளக்கோட்டன் தரிசனம்'' மாகோன் வரலாறு'' முதலிய ஆய்வு நூல்களை எழுதியவர்.

காயத்ரி பக்தை, ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் பணிகளில் பங்களிப்புச் செய்பவர் அதி. வண.ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை அவர்களின் மதிப்பைப் பெற்றவர்.

பாராளுமன்ற உறுப்பினராக, பல சமூகப் பணிகளை மேற்கொள்பவர். தன்னலம் கருதாத சமூக சேவகி.

அன்புமணி